155

தொகுதி 12.] 1933வரு மார்ச்சுமீ [பகுதி 2.

மனமோகினி

ஆக்கியோர்
ஆரணி. குப்புசாமி முதலியார்

பிரசுரகர்த்தா
நா. முனிசாமி முதலியார்,
ஆனந்த நிலையம், சென்னை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 MAY 1933

மாதவி மாதவன் 2-பாகம்

ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவா கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம் பது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்க பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண் பாகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

இரத்தினபுரி ரகசியம் 7-பாகம் விலை ரூபா 13-14

அமராவதி 2-பாகம்.

ஆரணி-குப்புசாமி முதலியா ரவர்க ளியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையாக நடக்கையும், ஊக்கமு முடையவனுயிருந்தால், அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவி யும் அடைவானென்பதும் இதில் நன்ருய் நிரூபிக்கப்பட் டிருக்கின் றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மன மகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

இராஜாமணி

அல்லது

ஓர் அபூர்வ மர்மம்

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்த தெளிவாக விளக்கிக் காட்டக் கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி, பெருந்திருட்டும், மிகுந்த கொலைத் தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய ஒரு முரடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவ களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம் பிள்ளை யென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி அவனை மணந்து கொள்வதும், மிக்க அதிசயம் பொருந்திய செயல்களாயு படிப்போர் மனத்தைக் கவரக்கூடியதாயும் இருக்கும்.

இதன் விலை ரூபா 2-0-0.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

மனமோகனர் அவ்வாறு கேட்டதற்குச் செல்வநாதர், அதிகமாக ஒன்றும் கேட்பதில்லை 'சீமாட்டி ஒரு கடிதத்தில் தான் மோகனதாஸின்மீது கூறிய புகார் அனைத்தும் பொய் என்றும், தான் வேண்டுமென்றே அவ்வாறு கட்டிவிட்டதாகவும் எழுதிக் கொடுத்துவிட்டால் அதை அவன், அந்தப் புகார் எந்த இடங்களில் பரவி இருக்குமென்று நினைக்கிறனே அந்த இடங்களில் மட்டும் காண்பித்துத் தன்மீதுள்ள அபவாதத்தை நீக்கிக் கொள்வான். இதுவரை மோகனதாஸ் படுக்கையில் இருந்த படியால் இதற்கு முன்பே இங்கு வந்து உங்களைக் காணமுடியவில்லை. இப்போது அவன் சொஸ்தமாகிவிட்டதால் அவனது அபவாதம் நீங்கும்படியான முறையில் வேலை செய்யவேண்டியிருக்கிறது'! என்று கூறினர். அப்போது மனமோகனர் செல்வநாதரிடம், 'ஐயா, ஹேமவதி சீமாட்டி இப்போது கிருஷ்ணகிரிக்குப் போய் இருக்கிறள். அவளுடைய இளைய குமாரி கற்பகம் எங்கேயோ போய்விட்ட படியால் அதிக வருத்தத்துடன் இருக்கிறள். மேலும் சீமாட்டிக்கு அதிக தொல்லைகள் இருக்கின்றன. அவளுடைய குமாரனே அவளுக்குப் பெரிய கஷ்டத்தைக் கொடுத்து வருகிறன். அவளுடைய நம்பிக்கைக்கும் பாத்திரமான வேலைக்காரி சில தினங்களுக்கு முன் திடீரென்று இறந்துவிட்டதாலும் அவள் கஷ்டப்படுகிறள். இந்நிலைமையில் அவளை நீங்கள் கோர்ட்டுக்கு இழுத்தால் அவளது மனம் அதிகம் வருந்துமல்லவா என்பதை யோசித்துப் பார்க்கும் படி கேட்டுக் கொள்கிறேன்' என்றார்.

அதற்குச் செல்வநாதர். 'பிறருடைய துயரங்களுக்காக நானும் வருந்துகிறேனென்றாலும் அவர்களுடைய குற்றங்களை மறைக்கவிட முடியாது. மோகனதாஸின் மீது ஏற்பட்டுள்ள அபவாதம் நீங்கவேண்டுமென்பதே என்னெண்ணம்

8-21
186578.
186578
12 MAY 1938

நீங்கள் சீமாட்டியுடன் இது விஷயமாய்க் கலந்து ஆலோசித்து முடிவுகூற எவ்வளவு நாள் செல்லுமென்று தெரிவிக்கிறீர்களோ அதுவரை நான் காத்திருக்கிறேன். அதன் பிறகாவது நீங்கள் திருப்திகரமான முடிவைத் தெரிவிக்க வேண்டும் இன்றேல் உடனே வழக்குத் தொடரப்படும். எங்களுக்கு வேண்டிய அத்தாட்சிகளும் இல்லாமற் போகவில்லை' என்று கூறிமுடிப்பதற்குள் தேவிதாசர் தன் கூட்டாளியிடம், 'இது விஷயமாக நாம் பிறகு கலந்து பேசுவோம். செல்வநாதர் நமக்கு ஒருவார வாயிதா கொடுக்கட்டும். இதற்குள் ஒரு விதமாக முடிவு செய்துவிடலாம்' என்றார். செல்வநாதரும் அப்படியே செய்வதாகச் சொல்லி இரு வக்கீல்களிடமும் அனுமதி பெற்று அவ்விடத்தை விட்டுச் சென்றார்.

60-வது அத்தியாயம்,

——:():——

கணவனைத் தேடி அலைதல்

இப்போது நாம் கிருஷ்ணகிரியில் முகாம் செய்திருக்கும் ஹேமவதிசீமாட்டியும் அவளது குமாரி ராஜேஸ்வரியும் என்ன செய்கிறார்கள் என்பதைக் கவனிப்போம். அவர்கள் சுந்தர விலாச மாளிகைக்கு வந்து சிலதினங்களுக்குப் பின்னர் ஒரு நாள் காலை ஆகாரத்திற்கு இருவரும் உட்கார்ந்திருந்தார்கள். அவர்கள் இருவரும் அதிக நேசப்பான்மையுடன் இருக்கவில்லை யென்றாலும் விரோதிகள்போல் இராமல் ஏதோ உபாயமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்களிடையில் தாய், மகள் என்னும் அன்போ, அல்லது மரியாதையோ சிறிதும் இருக்கவில்லை. ஆயினும் அவர்கள் தனித்தனியே ஒருவரைப்

பற்றியொருவர் வெளியில் பேசித் திரிவதென்றால் இருவருடைய அந்தஸ்துக்கும் கௌரவத்துக்கும் ஆபத்து வருமாதலால் தங்களிடையே ஒருவித சமரசத்தைச் செய்துகொண்டிருந்தனர். வீட்டு வேலைக்காரர்களின் முன்னிலையிலாவது அவர்கள் ஒருவருக் கொருவர் அன்புடனும் விசுவாசத்துடனும் இருப்பதுபோல் காண்பித்துக் கொள்ளவேண்டாமா? ஆகவே இருவரும் ஒருவர்விஷயத்தில் மற்றவர் தலையிடாமல் சமாதானமாக எவ்வளவு நாள் இருக்கமுடியுமோ அவ்வளவு நாள் இருப்பதென முடிவு செய்துகொண்டார்கள். அன்று ஆகாரத்துக்காகத் தாயும் மகளும் ஓரிடத்தில் சேர்ந்ததும், தாயார் ஹேமவதி சீமாட்டி தன் குமாரியைப் பார்த்து, பெண்ணே! உன் மனதில் என்ன எண்ணம் தோன்றியிருக்கிறதென்பதை நான் அறிவேன். நாம் இவ்வாறு இனியும் மனஸ்தாபத்துடன் இராமல் ஏதேனும் ஒருவித சமரசம் செய்துகொண்டுவிடுவதே நலமென்று நினைக்கிறாய் என்பது உன் முகத்திலிருந்தே தெரிகிறது' என்றாள். அதற்கு மகள், 'ஆம்; உன் மனதிலும் அவ்வாறே தோன்றியிருக்கிறதென்பது உன் முகத் தோற்றத்தால் தெரிகிறது' என்றாள். பின்னர் இருவரும் இதுசம்பந்தமாகச் சொற்பநேரம் சம்பாஷித்த பின்னர் அவரவர் அவரவரது இஷ்டப்படி நடப்பதென்றும், ஒருவர் மற்றவர் விஷயத்தில் தலையிடலாகாதென்றும் முடிவு செய்து கொண்டனர்.

அதன் பின்னர் தாயார் தன் மகளிடம், 'ராஜேஸ்வரி! நீ கூடிய விரைவில் விவாகம் செய்துகொண்டுவிடுவது மிகவும் நல்லது. ஏனென்றால், உனக்கு மோகன சுந்தரத்தினிடம் ஏற்பட்டிருக்கும் மோகத்தால் ஏதேனும் தவறான காரியத்தைச் செய்துவிடும்படியான நிலைமை ஏற்பட்டுவிடலாம். அதற்குள் விவாகம் செய்துகொண்டுவிடுவது நலமல்லவா?' என்றதும்

ராஜேஸ்வரியும், 'தாயே! நானும் அப்படித்தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன். சில முக்கிய காரணங்களை முன்னிட்டு எனக்குக் கணவனாக வாய்ப்பவன் வயது சென்ற ஆனால் பணக்காரனாகவாவது, அல்லது கிராமவாசியான ஒருவன் பணக்காரனாக இருந்தாலும் அவ்வளவு அறிவுடையவனாக இல்லாமல் தன் மனைவியின் காரியத்தையும் கவனியாமல் தன் குதிரை, நாய் முதலியவற்றை வளர்ப்பதிலேயே கவனிப்பவனாகவாவது இருக்கவேண்டும்' என்று தெரிவித்தாள். அப்போது சீமாட்டி, 'அப்படிப்பட்ட ஒரு ஆள் இந்த கிருஷ்ண கிரியில் அகப்படுவது கஷ்டமாயிற்றே. ஆனாலும் தியாக ராஜன் ஒருவன் இருக்கிறான். அவன்' என்று ஏதோ சொல்லி முடிப்பதற்குள் ராஜேஸ்வரி குறுக்கிட்டு, 'அம்மா! நீ இதை ஞாபகப்படுத்தியதற்காகச் சந்தோஷப் படுகிறேன். எனக்கு அவன் தெரியும். அவனும் என்னைக் குழந்தைப் பருவம் முதல் பார்த்திருக்கிறான். இன்று இரவு நாம் விருந்துக்குப்போகும் பாக்கியம் வீட்டாருக்கு அவன் அதிகம் வேண்டியவன். அவனைப் பெறுவதில் நான் செய்ய வேண்டியதென்ன? இதற்கிடையில் அந்தப்பாழும் மாது, அவள் தான் மரகதம் என்பவள், உன்னை அடிக்கடி சந்தித்து மிரட்டுபவள், அவளை எப்படியாவது இத்தேசம்விட்டே தொலைத்து விடவேண்டும்' என்றாள்.

ஹேமவதியும், 'நான் இக்காரியத்தைமுடித்துவிட்டேன் நாம் கிருஷ்ணகிரிக்காகப் புறப்படும் சமயத்தில் அவள் வந்தாளல்லவா? அப்போதே அவளிடம் ஐந்நூறுபவுன் கொடுத்து அவள் உடனே பினாங்குக்குப் போய்விடவேண்டுமென்றும், கோலாலம்பூர் போய்ச்சேர்ந்ததும் தெரிவித்தால் மறுபடியும் ஐந்நூறு பவுன் அனுப்புவதாகவும் சொல்லியிருக்கிறேன்' என்று கூறியதும் ராஜேஸ்வரி, 'தாயே! நீ சாமர்த்திய மாகத்

தான் காரியத்தை முடித்திருக்கிறாய். அவள் இத்தேசத்தை விட்டுப் புறப்பட்டுவிட்டிருப்பாளென்று நம்புகிறேன். அவ ளிடத்தில் நிறைய பணம் இருக்குமென்றும் நம்புகிறேன். ஏனெனின், நீ அவளுக்குப் பணம் கொடுத்தது இதுவே முதல் தடவையல்ல. இதற்கு முன்னும் பலமுறை கொடுத் திருப்பாயல்லவா?' என்று கேட்கவும் தாயார், 'ஆம்; நான் பலமுறை பணம் கொடுத்திருக்கிறேன். என்றாலும் அவள் சூதாட்டத்தில் அதிக பிரியமுடையவளாதலால் அவள் எல் லாப் பணத்தையும் தோற்றுப்போய் அவதிப்படுகிறாள். அப் படியும் அந்த சூதாட்டத்தை விட்டுத் தொலைக்க அவளுக்கு மனம் வருவதில்லை. அந்த அயோக்கிய மாதைப் பற்றிப் பேசுவதில் நாம் ஏன் காலங்கழிக்க வேண்டும். இப்போது நாம் ஒருவிதசமாசத்துக்கு வந்துவிட்டதால் நாம் இனி அதன் படி ஒழுங்காக நடப்போம்' என்றாள்.

உடனே ராஜேஸ்வரி, 'ஆம்; என்னுடைய அபிப்பிராய மும் அதுதான். எனக்கு நேற்று கிடைத்த கடிதம் யாருடைய தென்று தெரிந்துகொள்ள நீ அதிக ஆவலுடையவளாய் இருப்பாய் என்று நம்புகிறேன்.' என்று கேட்டபோது ஹேம வதி சீமாட்டி சொற்பநேரம் தாமதித்த பின்னர், 'ஆம், அது யாருடையது?' என்று விசாரித்தாள். அதற்கு ராஜேஸ்வரி, 'அது கற்பகம் எழுதிய கடிதம். அவள் துளசிங்கம் பிரபுவி னுடன் பரிதிபுரம் சென்று அங்கே ஒரு மடத்தில் விவாகம் செய்துகொண்டு பிறகு வேறு ஒரு நகருக்கு அப்பிரபுவினுடன் வசிக்கப் போய்விட்டதாக எழுதியிருக்கிறாள்' என்றாள். அதற்கு ஹேமவதி சீமாட்டி பதில் கூறுவதற்கு முன் அவ் வறையின் கதவு திறக்கப்பட்டு ஒரு சேவகன் உள்ளே நுழைந்து அப்போதுதான் ஒரு தபாற்காரன் கொண்டுவந்து கொடுத்த கடிதத்தை சீமாட்டியிடம் கொடுத்தான். அதன்

மேல்விலாசம் எழுதப்பட்ட எழுத்திலிருந்தே அது லாயர் மனமோகனரிடமிருந்து வந்த கடிதமெனத் தெரிந்துகொண்டு உடனே அதைத்திறந்து பார்த்தாள். அக்கடிதத்தில் பாதி யைக்கூடப் படித்திருக்க மாட்டாள், இதற்குள் அவளது முகத்தில் ஒருவிதவிசாரக்குறி தோன்றியது. எனினும் அதை அவள் ஒருவாறு அடக்கிக்கொண்டு அக்கடிதம் முழுதையும் படித்துப் பார்த்து அதை மடித்து வைத்துக்கொண்டு காலை ஆகாரத்தை அருந்துவதில் கவனம் செலுத்தினாள். இதை யெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த ராஜேஸ்வரி அக்கடிதத்தில் ஏதோ அதிருப்திகரமான விஷயம் அடங்கியிருக்க வேண்டு மென உணர்ந்தாளென்றாலும் தாயாராகச் சொல்லாததால் அவள் கேட்க விரும்பவில்லை. ஒருவர் விஷயத்தில் மற்றவர் தலையிடக்கூடாதென்பது அவர்களுடைய ஒப்பந்தமல்லவா?

காலை ஆகாரம் முடிந்தபின் ஹேமவதி சீமாட்டி தன் அறையில் தனியே உட்கார்ந்து கொண்டு மனமோகனரின் கடிதத்தைப்பற்றிப் பலவாறு சிந்தித்துக் கொண்டிருந்தாள். அக் கடிதத்தில் மனமோகனர் என்ன எழுதியிருப்பார் என் பதை வாசகர்கள் அறிந்திருக்கக்கூடும். மனமோகனர் அக் கடிதத்தில், செல்வநாதர் தன்னை வந்து கண்டதையும், அவ ருக்கு என்ன பதில் தெரிவிக்கவேண்டுமென்பதைச் சீமாட்டி ஒரு வாரத்திற்குள் தெரிவித்துவிட வேண்டுமென்றும் எழுதி யிருந்தார். ஹேமவதி சீமாட்டி எப்படிப்பட்ட காரியத்தை யும் எவ்வாறு செய்து முடிப்பது என்று முடிவு கட்டுவதில் சிறிதும் சளைக்காதவள். அப்படியிருந்தும் இவ்விஷயத்தில் உடனே எவ்வித முடிவுக்கும் வரமுடியவில்லை. அவள் சந்திர சேகரம் பிரபுவினிடம் அதிக பீதியடைந்தாள். அவன் ஹேம வதி சீமாட்டியைப் பழி வாங்குவதற்காக அவள் தனக்கு இட்ட கட்டளைகளையும் இதர நிலைமைகளையும் மோகன தாஸி

னிடமே சொல்லிவிட்டால், மோகனதாஸ் அந்த சாட்சியத்தைப் பலமான ஆதாரமாக வைத்துக்கொண்டு தன்னை நீதிஸ்தலத்தில் நசுக்கிவிடுவானே என்ன செய்வது என்று அஞ்சினாள். சந்திரசேகரன் எதையும் சொல்லவில்லையென்றால் மோகனதாஸ் தன்னைப்பற்றி எதையும் சரியாக ருஜுப்பிக்க முடியாது. என்பதையும் உணர்ந்தாள். ஆகவே தன் மானத்தை விற்றுவது சந்திரசேகரனுடைய சினேகத்தைப் பெறுமல் போனதற்கு அவள் மிகவும்வருந்தினாள். எனவே எப்படியாவது சந்திரசேகரனைச் சந்தித்துப்பேசி அவனுடைய சினேகத்தையடைவது எனத் தீர்மானித்தாள். ஆயினும் கலியாணமாகாத ஒரு வாலிபனை அவள், தன் மாளிகைக்கு வரும்படி அழைக்க முடியாதல்லவா? ஆகவே அவள் மதனவல்லிச் சீமாட்டிக்கே ஒரு கடிதம் எழுதி சந்திரசேகரம் பிரபு, ஷண்மகவல்லி ஆகிய இருவருடனும் கிருஷ்ணகிரிக்குவந்து சுந்தரவிலாச மாளிகையில் இரண்டொரு வாரங்கள் தங்கியிருக்கும்படி கேட்டுக்கொள்வதென யோசித்து அவ்வாறே ஒரு கடிதமும் எழுதி அன்றைய தபாலிலேயே போட்டு விட்டாள். அதே தபாலில் மனமோகனருக்கும் ஒரு கடிதம் எழுதி மோகனதாஸ் தன்மீது அபாண்டம் சுமத்துவதைக் காணத்தான் ஆத்திரப்படுவதாகவும், எனினும் இதர விவரங்களைப் பின்னால் தெரிவிப்பதாகவும் அறிவித்தாள்.

அன்று மாலை ஹேமவதி சீமாட்டியும் அவளது குமாரியும் மிக அழகாகத் தங்களை அலங்கரித்துக்கொண்டு பாக்கியம் வீட்டுக்குச் சென்றனர். அப்போது அங்கு ஒரு விருந்தும் நடனமும் நடந்தது, அதற்கு கிருஷ்ணகிரியிலும் அதையடுத்த இடங்களிலுமுள்ள பணக்காரர்கள் தங்கள் மனைவியுடனும் குமாரிகளுடனும் விஜயம் செய்திருந்தனர். பாக்கியம் குடும்பத்தார் கிருஷ்ணகிரியில் நீண்டகாலமாகவே அதிகசெல்

வத்துடன் கூடியவர்கள். பாக்கியமும் அவளது கணவனும் வயது முதிர்ந்தவர்களாதலால் அவர்களுடைய குமாரர்களும் குமாரிகளும் விவாகம் செய்யப்பட்டு ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஜீவியத்துறையில் இறங்கியிருந்தனர். அவர்களனைவரும் இந்த விருந்திலும் நடனத்திலும் கலந்துகொள்ள வந்திருந்தனர். அவ்வூரார் பலரும் விருந்துக்குவந்ததுடன் சிலர் நடனத்திலும் ஈடுபட்டிருந்தனர். அங்கு வந்திருந்த பல விருந்தாளிகளில் நமது தியாகராஜனும் ஒருவன். அவன் உயரமாகவும், நல்ல திடகாத்திரமுள்ளவனாகவும், சுமார் முப்பத்தாறு வயதானவனாயும் இருந்தான். சாதாரண ஊர்களில் நவீன நாகரிகர்கள் எப்படிப்பட்ட நடை, யுடை, பாவனைகளையுடையவராக இருப்பரோ அப்படியே இருந்தான். அவன் முரட்டுமனிதனாகவோ அல்லது அதிக பிற்போக்கானவனாகவோ இருக்கவில்லை. அவன் சதா அதிக சந்தோஷமுள்ளவனாகவும் கள்ளங்கபட மற்றவனாகவும் இருந்தான். ஆனால் அவனுக்குத் தளுக்கோ அல்லது நாஸுக்கோசெய்யத் தெரியாது. அவன் ஆடம்பரமாகவே உடைகளை அணிந்தானென்றாலும் தாசிகளின் தெருக்களில் அலையும் விட புருஷர்களைப்போல் உடைகளை அணியவில்லை. அவன் சதாகாலமும் வீட்டிலேயே இருந்துகொண்டு குதிரைகள், நாய், தேகாப்பியாசம் முதலியவைகளைப் பற்றித் தன்னைப் போன்ற ஆடவர்களுடன் பேசிக்கொண்டிருப்பானே யொழிய அற்ப விஷயங்களில் இடுபடுபவனல்ல.

தியாகராஜன் பெரிய பணக்காரன் அவனுடைய மாளிகையும் பெரிதாகவும் அழகாகவும் இருந்தது. அவன் பலரை வேலைக்கு வைத்துக்கொண்டிருந்தான். அவனுக்கு அதுவரை கலியாணமாகாமல் இருந்ததன் காரணம் தெரியவில்லை. அவனுக்குக் கலியாணத்தில் அதிக பிரியம் ஏற்பட்டிருக்கவில்லை.

அவ்வூரில் பற்பல பெண்களும் அவனை மயக்கி விவாகம் செய்துகொள்ள முயன்றும் பயன்படவில்லை. அப்படிப்பட்ட ஒருவனை நமது ராஜேஸ்வரி தனது கணவனாகக் கொள்ள வேண்டுமென்று தீர்மானித்தாள். தான் இரத்தின புரியில் ஆறுவருஷகாலமாகத் தன் வசீகரத்தையெல்லாம் காண்பித்தும் தன்க்கேற்ற ஒரு வரனைப்பெற அவளால் முடியவில்லையென்றுலும் கிருஷ்ணகிரியைப்போன்ற ஊரிலும் அவ்வாறே தன் சாமர்த்தியம் தோல்வியடையவேண்டுமென்பது அவசியமில்லையென்றும், தன்முயற்சி வெற்றிபெறுமென்றும ராஜேஸ்வரி நிச்சயமாக நம்பினாள். அதற்குக் காரணம் தன்னைப் போன்ற அவ்வளவு அழகும வசீகாமும் உடைய பெண் கிருஷ்ணகிரியில் வேறு யாருமில்லையென்று அவள் நினைத்ததே யாகும். உண்மையிலேயே பாக்கியம் குடும்பத்துக்கு அவள் விருந்துக்குப்போன அன்று ராஜேஸ்வரி மிக்க ரூபலாவண்ய முள்ளவளாகத்தான் காணப்பட்டாள். அவள் எப்படியாவது தியாகராஜனைத் தன் வசப்படுத்த வேண்டுமென்னும் உறுதியுடன் இருந்ததால் அவளது முகத்திலும் கண்களிலும் ஒளி வீசியது. அவள் தன் முயற்சியில் வெற்றியடைந்துவிட்டவள் போலவே திருப்தியுடன் காணப்பட்டாள்.

அங்கு வந்திருந்த பெண்களில் ராஜேஸ்வரியும், ஆண்களில் தியாகராஜனுமே அதிக அழகானவர்களாகவும் பிரபலமானவர்களாகவும் காணப்பட்டதால் அவனும் அவளும் பரஸ்பரம் அருகில் விருந்து மண்டபத்தில் ஆகாரத்துக்கு அமர்ந்தனர். அவள் சாப்பிடும்போது அவனுடன் பேச ஆரம்பித்து அவனுக்கு எவ்விஷயத்தில் பிரியமோ அதைப்பற்றியே அதிகமாகப்பேசி அவனைத்தன் சம்பாஷணையில் இழுத்துவிட்டாள் குதிரைப் பந்தயம், தேகாப்பியாசம் முதலியவைகளைப் பற்றி அவளுக்கு ஒன்றுமே தெரியாதென்றுலும் புத்திசாலியாத

வால் தியாகராஜன் சொல்லும் குறிப்புகளை வைத்துக் கொண்டே அதிகமாக விவரித்துப்பேசி அவனுக்கு அவருடன் பேசுவதில் அதிக சந்தோஷ முண்டாகும்படி செய்து விட்டாள். அப்படிப் பேசிக்கொண்டிருக்கும்போது அவன் தனக்கும் தெரியாமல் அவளுடைய வசீகரத்தில் சிக்கி அவளது அழகையே கண்டு பிரமிப்பதை யறிந்தான். அதுவரை அவன் எந்தப் பெண்ணையும் இவ்வாறு ஊன்றிப் பார்த்ததில்லை. அவனுடைய மனம் பெண்களிடம் நாடியது மில்லை. ஆனால் அன்று அவ்வளவு நேர சம்பாஷணைக்குப் பின்னர் அவனுக்கு வேறு விதமான எண்ணம் உதிக்கலாயிற்று. அவளுடைய பார்வையையும், அழகிய ஸ்தன பாரங்களையும், கழுத்தையும் பார்க்கப் பார்க்க அவனுக்கு மோகமும், தான் எப்போதும் காணாத அபூர்வமான பெண்ணைப் பார்ப்பது போன்ற எண்ணமும் உண்டாயிற்று. பின்னர் அவளுடைய ஒவ்வொரு உருவத்தைப் பார்க்கும் போதும் அவளது அழகு மேலும் மேலும் அதிகரிப்பது போல் தியாகராஜனுக்குத் தோன்றியது. இவ்வாறாக அவன் அவளுடைய மோகவலையில் சிக்கிக்கொண்டான்.

விருந்து முடிந்ததும் பெண்களெல்லாம் வேறு அறைக்குப் போய்விட்டார்கள். ஆடவர்கள் மட்டும் அங்கேயே உட்கார்ந்துகொண்டு மதுபானம் அருந்தினார்கள். தியாகராஜனுக்கு அவனுடைய வாழ்க்கையிலேயே அன்றுதான் அவனுக்கு அம் மதுபானத்திலோ அல்லது ஆடவர்களுடன் அங்கு உட்கார்ந்திருப்பதிலோ சிறிதும் திருப்தி ஏற்படவில்லை. அவனது மனமெல்லாம் சிறிது நேரத்துக்கு முன் அவனுடன் பேசிக்கொண்டிருந்த மெல்லியலாள்மீது சென்றிருந்தது. ஏதோ ஒரு புதிய சக்தி தன்னை ஆட்கொண்டு விட்டதாக அவன் நினைத்தான். சில தினங்களுக்கு முன்

அவன் கிருஷ்ணகிரியில் ராஜேஸ்வரியைப் பார்த்தபோது மற்ற பெண்களைப் பார்த்தால் எப்படி அலட்சியமாக இருப்பானே அப்படியே அலட்சியமாக இருந்தவன் இன்று மட்டும் அவள் விஷயத்தில் அவ்வளவு ஆசை ஏற்பட்டு விட்டதால் தான் நாவல்களில் படித்ததும், பிறரால் சொல்லக் கேட்டதுமான காதல் தன்னைப் பற்றிக்கொண்டுவிட்டதோ என்று பயந்தான். தியாகராஜன் இவ்வாறெல்லாம் மனக் குழப்பமடைந்திருப்பதை அறிந்ததைக் கண்ட அங்கிருந்த ஆடவர்கள் அவன் மறுபடியும் சந்தோஷமாக இருக்கும்படி செய்ய எவ்வளவோ முயன்றும் முடியவில்லை.

இதற்குள் அனைவரும் தேயிலைப்பானம் செய்யும் வேளை வந்தது. அப்போது மறுபடியும் ஆண்களும், பெண்களும் ஒன்ருகக் கூடுவார்கள். தியாகராஜன் இனி ராஜேஸ்வரியின் எதிரிலும் தென்படக் கூடாதென்றும், அவளுடைய மோகத்தில் தான் ஈடுபட்டு விட்டதாகப் பிறர் சந்தேகிக்காமலிருக்கும் பொருட்டுத் தான் மிக ஜாக்கிரதையாக இருக்கவேண்டுமென்றும் முடிவு செய்தான். ஆகவே பான அறையில் எல்லாரும் கூடியதும் அவன், ராஜேஸ்வரியைக் காண விரும்பாதவன்போல் தனக்கு அறிமுகமான இரண்டொரு ஆடவர்களுடன் மட்டும் பேசினன். ஆனல் அவ்வாறு பேசும்போது அவனுடைய கண்கள் மட்டும் அந்த அறை முழுவதிலும் வேட்டையாடின. யாரைத் தேடி அலைந்தன என்பது பற்றி நாம் கூறத் தேவையில்லை. ராஜேஸ்வரியோ தான் தனது முயற்சியில் வெற்றிபெற்று விட்டதாக அறிந்து தியாகராஜன் மனதில் எத்தகைய எண்ணங்கள் ஊசலாடிக் கொண்டிருக்க வேண்டுமென்பதையும் உணர்ந்து மனதுக்குள்ளேயே சந்தோஷமடைந்த வண்ணம் தன் பார்வையை மட்டும் ஜாக்கிரதையாக தியாகராஜன்மீது செலுத்தினள்.

அச்சமயத்தில் விருந்துக்கு வந்திருந்தவர்களில் இஷ்டப்பட்டவர்கள் நடன மாடலா மென்பதற்கு அறிகுறியாகத் திவ்வியமான பாண்டு வாத்தியம் வாசிக்கத் தொடங்கியது. உயர்குடியிற் பிறந்த ஒரு இளைஞன், ஆனால் பெரிய காலாடியைப்போல இருந்தவன் ராஜேஸ்வரியிடம் வந்து தன்னுடன் நடனமாட வரும்படி கேட்டான். தியாகராஜன் நடனமாடமாட்டான் என்பதை அறிந்த அவள் முதலில் வேறு எவருடனும் நடிக்க விரும்பவில்லை. ஆயினும் அவள் மனதில் ஒரு வித எண்ணம் தோன்றியது. அதாவது தியாகராஜன் தன்னையே கவனித்துவரும் இவ்வேளையில் நடினமாட ஆரம்பித்து அந்த உற்சாகத்தில் தன் அங்கங்களில் சிலபாகம் அவனுக்குத் தெரியும்படி செய்தால் அவன் பூர்த்தியாகத் தன் வசமாவானென்றும், மற்றொரு ஆடவனுடன்நடிப்பதால் தியாகராஜன் பொருமைகொண்டு விரைவில் தன்னை அடைந்துவிட முயற்சிப்பானென்றும் நினைத்தாள். ஆகவே அந்த ஆவனுடன் அவள் நடிக்க ஆரம்பித்தாள். அவள் எப்போதுமே நடனத்தில் அவ்வளவு உற்சாகமாக இருந்ததில்லை. அன்று அதிகமான உற்சாகத்துடன் மெய்மறந்தவள்போல் தன் முழுச் சாமர்த்தியத்தையும் பிரயோகித்து நடித்தாள். அப்போதெல்லாம் அவள் தன் பார்வையை மட்டும் தியாகராஜனிடம் செலுத்தி அவன் என்னசெய்கிருனென்பதைக் கவனித்தாள். அவன் மிக ஆர்வத்துடன் தன்னையே பார்ப்பதையும், தான் மற்றொரு ஆடவனுடன் நடிப்பதால் பொருமை கொண்டு விழிப்பதையும் அறிந்தாள். ராஜேஸ்வரியும் மற்றொரு ஆடவனும் ஏதோ வேடிக்கை பேசிக்கொண்டே சிறிது நேரம் நடித்தார்கள். அந்த ஆடவன் ராஜேஸ்வரியின்மீது சிறிது ஆசைப்பட்டா னென்ருலும் அவள் அவனை லட்சியம் செய்யாமல் தன் மனத்தை யெல்லாம் தியாகராஜன்மீதே செலுத்தினள்.

நடனம் முடிந்தபின் ராஜேஸ்வரி ஒரு ஆசனத்திலமர்ந்ததும் தியாகராஜன் அவளருகில் வந்து நின்றான். அவனது உண்மையான மனோநிலைமையை அறியாதவள்போல் ராஜேஸ்வரி அவனைப் பார்த்து, 'இதுவரை எங்கே போயிருந்தாய் நீ வீட்டுக்குப் போய் விட்டிருப்பாய் அல்லது இன்னும் சிற்றுண்டி அறையிலேயே பல கனவான்களுடன் பேசிக்கொண்டிருப்பாய் என்றல்லவோ நினைத்தேன்' என்றாள். அவள் அவ்வாறு கூறியதைக் கேட்டதும் அவள் தன் விஷயத்தில் அதிக அஜாக்கிரதையுடனிருக்கிறாளோ என்னும் சந்தேகம் கொண்டு அவன் மனம் கலங்கினான். அதையும் ராஜேஸ்வரி குறிப்பால் அறிந்துகொண்டாள். அவள் தன்னிடம் தியாகராஜனுக்கு ஏற்பட்டிருக்கும் அன்பை அதிகரிக்கச் செய்ய வேண்டுமென்னும் எண்ணத்துடனேயே அவள் அவ்வாறு பேசியதால் தியாகராஜனின் உணர்ச்சியை அறிந்ததும் காலங் கடத்தாமல், 'சரி, எப்படியாவது நீ என்னைச் சந்தித்துவிட்டதில் எனக்குமிகச் சந்தோஷம். என்னுடன் நடித்த இளைஞன் எனக்குப் பிடிக்கவில்லையாதலால் நான் அதிக விசாரத்துடன் இருந்தேன் உன்னுடன் சம்பாஷிக்கும் சமயமும் கிடைக்குமா என்று ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்,' என்றாள். அப்போது அவளிடம் அதிக பிரேமையடைந்த தியாகராஜன், 'நீ இவ்வாறு என்னைப் புகழ்ந்து பேசுவதைக் காண நான் அளவிலா சந்தோஷமடைகின்றேன். அதோ ஒருவன் வருகிறான். அவன் எனக்குத் தெரிந்தவனே. அவன் தன்னுடன் நடிக்க வரும்படி உன்னைக் கூப்பிடுகிறான்போலத் தெரிகிறது' என்று சொன்னதும் அவனுடைய முகம் சிறிது சுளித்தது.

ராஜேஸ்வரி தியாகராஜனிடம், 'உனக்கு நடனமாடத் தெரியாதோ' என்று கேட்டாளென்றாலும் அவனுக்கு அது

தெரியாதென்பது அவளுக்கு முன்பே தெரியும். அவனும், 'எனக்கு நடனமாடத் தெரியாது. இப்படிப்பட்ட நவீன நாகரிக சம்பந்தமான எந்த விஷயமுமே எனக்கு அனுபவ மில்லை.' என்றதும் அவனைச் சந்தோஷப்படுத்தும் பொருட்டு அவளும், 'ஆம், அதென்ன பிரமாதம் எனக்கும் அதில் அவ்வளவு பிரியமில்லைதான். ஆயினும் ஏதோ பொழுது போக்காக அதில் சிறிது ஈடுபடுவேன் என்று நடனத்தில் அலட்சிய முள்ளவள்போல் கூறினாள். இதற்குள் தியாகராஜன் குறிப்பிட்ட அம்மனிதன் அங்கு வந்து தன்னுடன் நடனமாட வரும்படி ராஜேஸ்வரியைக் கேட்டான். அதற்கு அவள் அடக்கமான பதிலில், தான் அன்றுமாலை இனிவேறு யாருடனும் நடனம் புரிவதில்லையென்று தீர்மானித்துவிட்டிருப்பதாகத் தெரிவித்துவிடவே அவனும் ஒன்றும் பேசாமல்போய் விட்டான். பிறகு ராஜேஸ்வரி தியாகராஜனுடைய கையைப் பிடித்துக்கொண்டு அம்மாளிகையின் தோட்டத்துக்குத் தனியாக உலாவ அழைத்துச் சென்றாள். அவளது கை தன் மீது பட்டமாத்திரத்தில் தியாகராஜன் அளவிலாச் சந்தோஷமடைந்து அவள் பின்னாலேயே சென்றான். தோட்டத்தில் தனியான ஒரு ஆசனத்தில் ராஜேஸ்வரி அமர்ந்தாள். தியாகராஜனும் அவளருகில் நின்றுகொண்டான். அப்போது அவள், 'அந்த அறைகளில் இருந்தது மிகக் கஷ்டமாக இருந்தது. நல்ல, தாராளமான காற்று கிடைக்கவில்லை. நான் எப்போதும் இவ்வாறு திறந்த வெளியில் நல்ல காற்று வாங்குவது வழக்கம். நீ அக்கட்டடத்தில், ஜன நெருக்கடியில் இருந்து வந்ததைக் கண்டு நான் ஆச்சரியமடைந்தேன்,' என்றதும் அவன், 'எப்படியோ இன்று நான் இங்கு வந்து உன்னைச் சந்திக்கும்படியான சந்தர்ப்பம் ஏற்பட்டதற்காக நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன்! என் உள்ளத்தில் ஒரு விதமான ஆனந்தம் பொங்குகிறது.' என்று சொல்லி மகிழ்ந்

தான். அதன் உட்கருத்தை அவள் அறியாதவள்போல், 'இந்த இடத்தில் எந்த குறிப்பிட்ட விசேஷம் உனக்கு அத்தகைய சந்தோஷத்தைக் கொடுக்கிறது என்பதைச் சொல்ல முடியுமா' என்று ஆவலுடன் கேட்டாள்.

அச்சமயத்தில் வேறு சில மாதர்கள் அதே தோட்டத்தில் உலாவிக்கொண்டே இவர்களிருந்த இடத்துக்கு வந்து சேர்ந்தார்கள். அந்த நல்ல சமயத்தில் அவர்கள் அங்கு வந்ததற்காக அவள் உண்மையில்வருந்தினளென்றாலும் மேலுக்கு அவர்களுடன் ஏதோ உபசார வார்த்தை பேசினுள். பிறகு அன்றுமாலை முழுதுமே தியாகராஜனுடன் தனியாகப் பேசக்கூடிய சந்தர்ப்பம் நமது ராஜேஸ்வரிக்குக் கிடைக்கவில்லை. ஹேமவதிசீமாட்டியும் ராஜேஸ்வரியும் வீட்டிற்குச் செல்வதற்காகத் தங்கள் வண்டியில் ஏறிக்கொண்டார்கள். அப்போது ராஜேஸ்வரியின் கையைக் குலுக்கிய தியாகராஜன் அதை சிறிது மோகத்துடன் அழுத்தாமல்விட அவன்மனம் துணியவில்லை. பிறகு அவன் தன் வீட்டுக்குச் சென்றுனென்றாலும் அவனது மனக்கண்முன் சதாகாலமும் ராஜேஸ்வரியின் உருவமே தாண்டவமாடிக் கொண்டிருந்தது. பெண்களைப்பற்றி லட்சியம் செய்யாமலும், கலியாணமென்றால் வெறுப்படைந்தும் இருந்த தியாகராஜன் ராஜேஸ்வரியின் மோகமென்னும் கடலில் மூழ்கிக் கரையேறமுடியாமல் தவிக்கலானுன். சதா அவளுடைய ஞாபகமே. விருந்தில் அவளுடன் பேசியதும் உட்கார்ந்ததுமே அவன் மனதில் அடிக்கடி ஞாபகத்துக்கு வந்து அவனுக்கு ராஜேஸ்வரியின்மீது அதிக ஆசையைப் பெருக்கிக்கொண்டிருந்தது.

61-வது அத்தியாயம்

சந்திர சேகரம் பிரபு

இவ்வாறு ஹேமவதி சீமாட்டியும், ராஜேஸ்வரியும் பாக்கியம் குடும்பத்துக்கு விருந்துக்குப் போய்த் திரும்பிய இரண்டுநாட்களுக்குப் பிறகு கிருஷ்ணகிரியில் சுந்தர விலாசம் மாளிகையின் முன் மாலை ஆறுமணி சுமாருக்கு ஒரு வண்டி வந்து நின்றது. மதனவல்லிச் சீமாட்டி, ஷண்பகவல்லி, சந்திரசேகரம் பிரபு ஆகிய மூவரும் அந்த வண்டியை விட்டு இறங்கினர். ஹேமவதி சீமாட்டி அவர்களை மிக்க அன்போடு வரவேற்பதுபோல் வரவேற்றாள். ராஜேஸ்வரி உண்மையான ஆர்வத்துடன் அவர்களை வரவேற்றுபசரித்தாள். ஏனெனின், பட்டணத்தில் வசித்த அவளுக்குக் கிருஷ்ணகிரி சுந்தரவிலாச மாளிகையில் வசிப்பது மிகக் கஷ்டமாக இருந்தது. யாரேனும் துணைஅகப்பட்டால் போதுமென்று இருந்த அவளுக்கு இவர்களைக் கண்டதும் சந்தோஷம் அதிகமாய் விட்டது. தியாகராஜன் இரண்டு தினங்களாகத் தினசரி காலை வேளைகளில் வந்து சிறிதுநேரம் ராஜேஸ்வரியுடன் பேசிக் கொண்டிருப்பான். பகலில் அவள் யாருடன் பேசுவது?

அவர்கள் மாளிகையில் நுழைந்ததும் ஹேமவதி சீமாட்டி ஷண்பகவல்லியின் முகத்தை உற்றுப்பார்த்தாள். அவள் வாடி வதங்கி யிருப்பதையும் மனங்கலங்கி இருப்பதையும் கண்டாள். மோகனதாஸை இழந்துவிட்ட வருத்தத்தால் தான் அவள் அவ்வாறு இருப்பதாக அறிந்து அவனை அடைவதில் தனக்குப் போட்டியாக வந்து சேர்ந்த ஷண்பகவல்லியும் தன் நோக்கம் சித்திபெற முடியாமல் தோற்றுப் போய்

வருந்துவதைக்கண்டு சந்தோஷப்பட்டாள். பிறகு மதனவல்லிச் சீமாட்டியுடன் ஹேமவதி தனியாகப் பல விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தபோது மெதுவாக மோகனதாஸ் பின்னரும் மதனவல்லியின் மாளிகைக்கு வருகிருனே என்று விசாரித்தாள். அதற்கு இல்லை என்று பதில் அளிக்கப்பட்டது. ஹேமவதி சீமாட்டி ஷண்பகவல்லியிடம் சிறிதும் வருத்தமில்லாதவள் போல் நடந்து, எதிர்காலத்தில் மருமகளாகப் போகும் அவளை எவ்வாறு நடத்தவேண்டுமோ அவ்வாறும் நடத்தினள். ஷண்பகவல்லி மோகனதாஸை அதிகம் காதலித்தாலும் அவனைப்பெற முடியாமல் தன் குமாரனையே அவள் விவாகம் செய்துகொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டிருப்பதற்காக ஹேமவதி சந்தோஷமடைந்தாள்.

ஹேமவதியும் சந்திரசேகரம் பிரபுவும் பரஸ்பரம் எப்படி நடந்துகொண்டார்கள் என்பதுதான் இப்போது முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயம். உள்ளத்தில் இருவருக்கும் எப்படிப்பட்ட எண்ணமிருந்தாலும் வெளிக்கு அவ்விருவரிடையேயும் எத்தகைய மனஸ்தாபமும் இல்லாதவர்கள்போல் நடந்துகொண்டார்கள். அவனை வரவேற்கும்போது ஹேமவதி சீமாட்டி அவன் கையைக் குலுக்கிய மாதிரியிலிருந்தே அவள் தன்னுடன் ஏதோ சமாதானம்செய்துகொள்வதற்காகவே தன் சிற்றன்னை, சகோதரி ஆகியவர்களுடன் தனக்கும் அழைப்பு அனுப்பியிருக்கவேண்டும் என்று உணர்ந்தான். சீமாட்டியும் அவன் தன்னுடன் சமாதானம் செய்துகொள்ளத் தயாராக இருக்கிருன் என்றும், ஆகவே அவனைத் தன் காரியத்துக்குப் பயன் படுத்திக் கொள்ளவேண்டு மென்றும் அவள் நினைத்தாள்.

அன்றிரவு எட்டு மணிக்கு எல்லாருடைய ஆகாரமும் முடிந்தது. பிறகுவேடிக்கையாகப் பேசுவதற்காக அனைவரும் தோட்டத்தில் உலாவச் சென்றார்கள். சிறிது நேரத்துக்கெல்லாம், தனது பிரயாணத்தால் களைப்பு அடைந்திருந்த மதன வல்லிச் சீமாட்டி தோட்டத்திலிருந்து திரும்பி விட்டாள். பிறகு ஷண்பகவல்லியும், ராஜேஸ்வரியும் தனியாகப் பேசிக் கொண்டே ஒரு இடத்தில் உட்கார்ந்து விட்டார்கள். ஆகவே ஹேமவதி சீமாட்டியும், சந்திரசேகரம் பிரபுவும் தனியாகப் பேசுவதற்குச் சௌகரியமான சந்தர்ப்பம் ஏற்பட்டது. அப்போது சந்திரசேகரன் ஹேமவதியின் கையைப் பிடித்துக் கொண்டு, 'நான் உன் அழைப்புக் கடிதத்தின் மர்மத்தை உணர்ந்து கொண்டேனல்லவா? என்று கேட்டுக்கொண்டே தோட்டத்தின் ஒரு மூலையில் அவளை அழைத்துச்சென்றான். அச்சமயம் ஹேமவதியும் அவனை மயக்கும்வகையில் சிரித்துக் கொண்டே, 'என்ன உணர்ந்துகொண்டாய் என்பதைச்சொல் பார்க்கலாம்' என்று வேடிக்கையாகக் கேட்டாள். அதற்கு அவன், நீ என் விஷயத்தில் செய்து விட்ட தவறுதலுக்காக என்னிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு சமாதானம் செய்து கொள்ளவே இங்கு என்னையும் அழைத்திருக்கிறாய் என்று நினைக்கிறேன்' என்றான். உடனே ஹேமவதியும் மிகவும் அடக்கத்துடன் பேசுபவள்போல், 'சரி, அப்படியானால் அவ்வாறு சமாதானம் செய்துகொள்ள இன்னும் காலம் கடந்து விடவில்லை என்று ஏற்படுகிறதல்லவா?' எனக் கேட்டாள்.

அதற்கு அவன், அவளுடைய மோகத்தில் மூழ்கியவனாய், 'நீ இவ்வாறு பேசுவதிலிருந்து உன்னுடைய வசீகரத் தன்மையின் சிறப்பையும் உன் அழகின் மேன்மையையும் நீயே அறிந்து கொள்ளவில்லை யென்று தெரிகிறது. நான் உன்னை எப்படியாவது பழி வாங்கவேண்டுமென்று முடிவு

செய்து உன் விஷயத்தையெல்லாம் உனது குமாரனாகிய தினகரனிடமும் சொல்லிவிட்டேன். அப்போது நான் எவ்வளவு மனக் குழப்பமடைந் திருப்பேன் என்பதை நீ கவனித்தால் நான் அவ்வாறு சொல்லிவிட்டதில் நீ ஆச்சரியப்படமாட்டாய். உனக்காக நான் என் உயிரையும் திரணமாக மதித்து மற்றொருவன் உயிரையும் கொள்ளைகொள்ள முயன்றேன் அல்லவா?' என்று சொல்லி முடிப்பதற்குள் 'சரிதான். நீ காரியத்தை ஒழுங்காக முடித்திருந்தாலும் பரவாயில்லையே' என்றதும் அவன், 'இன்னும் உனக்கு மோகனதாஸினிடம் உள்ள விரோதம் குறையவில்லையா? அவன் உன் போன்ற அழகுடைய ஒருமாதின் விரோதத்தை எப்படிப் பெற்றான், என்பதில்தான் எனக்கு ஆச்சர்யமாக இருக்கிறது' என்றான். அவள், 'என் அழகைப்பற்றி நீ அதிகமாகப் பேசாதே' என்றாள். அப்போது சந்திரசேகரன், 'நீ என்னை நேசிக்கிறாய் என்று நான் வீண் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. மோகனதாஸின்மீது மோகங்கொண்ட நீ என்னை அவனுக்குப் பதிலாகக் கொள்வாய் என்று நான் நினைக்கவேயில்லை. ஆகவே என்னுடன் சமாதானம் செய்து கொள்ள விரும்புவதிலும் ஏதோ உள்வயணமிருக்கிறது. ஆதலின் வெட்ட வெளிச்சமாகப் பேசி உண்மையைச் சொல்' என்று கேட்டான்.

அதற்கு ஹேமவதிசீமாட்டி, 'உன் விஷயத்தில் நான் தாராளமான நோக்கத்துடன் இருக்கிறேன் என்றால் அதை நீ நம்பவேமாட்டாய் போலும். சமாதானம் செய்து கொள்ளும் விஷயத்திலும் நான் ஏதோ சுயநலத்தை மனதில்கொண்டிருப்பதாகக் கருதுகிறாயோ?' என்றாள். உடனே அவனும் 'ஆம்; என்மீது நீ எள்ளளவு அபிமானத்துடன் இருக்கிறாய் என்றாலும் அதையும் நம்ப என்னால் முடியவில்லை. உன் வீட்டில் நீ அன்று நடந்துகொண்ட நடத்தை எனக்கு அத்தகைய

எண்ணத்தைக் கொடுத்துவிட் டிருக்கிறது. எனினும் என்னுடன் சமாதானம் செய்துகொள்வதில் உன்னுடைய உத்தேசம்தான் என்ன?' என்று வினவ ஹேமவதி அதிக சாமர்த்தியத்துடன், 'நண்பனே! நீ இப்போது ஒருகாதலியைத் தேடுகின்றாய். என்மீதும் உனக்குக் காதல் ஏற்பட்டிருக்கிறது. என்னைப் பெறுவதற்காக எத்தகைய தியாகத்தையேனும் செய்யத் தயாராக இருக்கிறாய். ஆதலால் உன் எண்ணம் நிறைவேறும் பொருட்டே சமாதானம் செய்துகொள்ள விரும்புகிறேன். அதிருக்கட்டும், நான் வெளியுலகில் கண்டிப்பான பரிசுத்தமானவள்போல் காணப்பட்டாலும் அந்தரங்கத்திலேனும் வழிதவறி நடந்திருப்பேன் என்று நீ நம்புகிறாயா என்பதைச் சத்தியமாகச் சொல்' என்றாள்.

அதற்கு அவன், 'சொற்ப காலத்துக்கு முன்வரை நீ உண்மையான பதிவிரதை என்றே நம்பியிருந்தேன். ஆனால் இப்போது, உன் கணவன் இறந்த பின்னர் நீ முதன் முதலாக மோகிப்பது என்மீதுதான்என்று நான் பெருமை சொல்லிக்கொள்ள முடியாதவனாக இருக்கிறேன் என்பதை நீயே அறிந்திருப்பாய் என்று நம்புகிறேன்,' என்றான். அதைக் கேட்டதும், 'நான் சத்தியமாகச் சொல்கிறேன். என் விஷயத்தில் நீ தவறுதலாக உணர்ந்துகொண் டிருக்கிறாய். ஏதோ எனக்குள் ஏற்பட்ட பலஹீனத்தால் நான் மோகனதாஸின் மீது ஆசைகொண்டு அதன் காரணமாக அவனுக்கு அடங்கிவிட வேண்டியவ ளானேன். இப்போது நீ நம்பமாட்டாயா? உன்னை ஏமாற்றவேண்டுமென்று நான் நினைக்கவேயில்லை. உன்னிடம் இப்போது இவ்வாறு ஏன் பேசுகிறேன் என்பதே எனக்குத் தெரியாது. ஒரு மாது யாரிடம் பணியப்போகின்றாளோ அவரிடமும் தன்னுடைய கற்பைப்பற்றிப் பேசுவது சகஜம் என்பதை நீ அறிந்திருப்பாய்,' என்று கூறினாள். அப்

போது சந்திரசேகரன், 'எனக்கு இந்த விஷயத்தி லெல்லாம் அதிக அனுபவமிருக்கிறது. நான் உண்மையில் இப்போது உன்னை நம்புகிறேன். உன்னை என் இருகரங்களாலும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.' என்று சொல்லிக்கொண்டே அவன் அவள்மீது தன் கையைப்போட்டு தோட்டத்தின் ஒரு மூலையில் அவளை அணைத்துக் கொண்டான். சிறிதுநேரம் இருவரும் பேசாமல் மௌனமாக இருந்து இரண்டடி அப்பால் நடந்து சென்றனர்.

பிறகு சந்திரசேகரம், 'சரிதான். நான் உனக்குச்செய்ய வேண்டியது இன்னதுதானென்று நீ இன்னமும் என்னிடம் சொல்லவில்லையே. நான் செய்யவேண்டிய வேலை எதையோ நீ எதிர்பார்க்கிறாய் என்றே தெரிகிறது' என்று கேட்டான். அதற்கு அவள், 'நீ செய்யவேண்டிய வேலை இப்போது ஒன்றும் இல்லை. அதிருக்கட்டும் உண்மையாகச் சொல். என் மீது நீ ஏன் கோபித்துக்கொண்டாய் என்னும் சந்தர்ப்பத்தை உன் ஆத்திரத்தில் என் குமாரன் தவிர இன்னும் யாரிடம் சொல்லிவிட்டிருக்கிறாய் என்பதை ஒளிக்காமல் சொல். என்னை ஏமாற்றவேண்டாம்; நீ யாரிடமேனும் சொல்லிவிட்டிருந்தாலும் பாதகமில்லை நான் அதற்குத் தக்கபடி நடந்துகொள்ள ஏற்பாடு செய்வேன். யாரிடமும் சொல்ல வில்லையென்றால் சந்தோஷம்தான்,' என்றாள். அவன், 'அவ்விஷயம் அவ்வளவு முக்கியமானதா?' என்று கேட்கவும் ஹேமவதி சீமாட்டி, 'நீ யாரிடமோ சொல்லிவிட்டிருக்கிறாய்போ லிருக்கிறது. சந்திர சேகரம்! இவ்விஷயத்தில் நீ என்னை இருட்டில் விடலாகாது. என்னை எவ்வளவு தூரம் காட்டிக் கொடுத்துவிட்டிருக்கிறாய் என்பதைத் தெளிவாகச் சொல்லிவிட வேண்டும். நான் என்னை உனக்கே தத்தம் செய்துவிடத் தயாராக இருக்கிறேன். உன்னை நேசிக்கவும் முயற்சி செய்வேன். என்

நன்மைக்காக நீ உழைக்கத் தயாராக இருந்தால் நான் உனக்காக எதையும் செய்யத் தயாராக இருக்கிறேன். ஆகையால் உண்மையைச் சொல்லிவிடு. பிறகு நான் ஏன் இவ்வாறு கேட்கிறேன் என்பதன் காரணத்தைச்சொல்கிறேன்.' என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள்.

அதைக் கேட்ட அவன், 'நான் உண்மையைச் சொல்லி விடுகிறேன். நீ அன்று நடந்துகொண்ட மாதிரியில் எனக்கு அதிக வெறுப்பும், ஆத்திரமும் ஏற்பட்டுவிட்டபடியால் அந்த வேளையில் நான்செய்வது இன்னதென்று எனக்கே தெரியாத நிலைமையில் இவரிடம் சொல்லிவிட்டேன். தினகரம் பிரபு தவிர மற்றும் இருவரிடம் சொல்லிவிட்டிருக்கிறேன்' என்றதும் ஹேமவதி, 'ஐயோ, இருவரிடமா? அவர்கள் யார்?' என்று பரபரப்புடன் கேட்டாள். அப்போது அவன், 'முதலாவது தினகரம் பிரபுவின் வைப்பாட்டி, அவன் ஒரு வைப்பாட்டியை யுடையவனுய் இருக்கிருன் என்று நீ அறிந்திருப்பாய் என்றே நம்புகிறேன். மற்ருெருவன் என் அந்தரங்க வேலைக்காரனுகிய ஆறுமுகம். இந்த இருவரிடம்தான் சொல்லியிருக்கிறேன்' என்ருன். அதைக்கேட்ட அவள் திடுக்கிட்டு, 'ஆ, கஷ்டமான நிலைமையில் என்னை வைத்து விட்டாயே' என்ருள். அதற்கு அவன், 'என்ன கஷ்டம்?' என்று கேட்கவும் ஹேமவதி சீமாட்டி, 'மோகனதாஸ் என்மீது மான நஷ்ட தாவா செய்யப் போவதாகப் பயமுறுத்துகிருன். மூர்க்கமும் பிடிவாதமும் உடைய செல்வநாதர் என்னும் கிழவன் இவ்விஷயத்தில் அவனுக்கு ஆதரவாக இருக்கிருன். செல்வநாதர் பணக்காரனுதலால் மோகனதாஸ் இவ்வழக்கில் வெற்றி பெறவுங்கூடும். அவன் தக்க சாட்சிகளைப் பெற்று விட்டால் பிறகு எனக்கு அவமானம்தானே! அத்துடன் என் வாழ்க்கையே அதோகதியாகும்? என் மானத்தைக் காப்

பாற்றிக் கொள்வதற்காக நான் தற்கொலை செய்துகொள்ள வேண்டியதுதான். நான் செய்த தவறுதலை ஒப்புக்கொண்டு ஒரு கடிதத்தில் எழுதிக் கொடுத்தால் அதைப் பிரத்யேகமாக இவ்விஷயத்தை அறிந்த சிலருக்கு மட்டும் காண்பித்துத் தன் மீது ஏற்பட்டுள்ள அபவாதத்தை நீக்கிக்கொள்ளப் போகிறுணும். எந்தவழி போனுலும் எனக்குக் கஷ்டம்தான்! என்று முறையிட்டுக் கொண்டாள்.

அப்போது சந்திரசேகரம் பிரபு, 'இல்லவே இல்லை. நீ அவ்வாறு எழுதிக் கொடுக்கக்கூடாது. இதனுல் ஏற்படும் அவமானம் பொல்லாதது. வழக்கில் தோல்வியுற்ருலும் பாதகமில்லை. நமது கட்சி நியாயமானதென்றும், ஆனுல் வழக்கில் ஜெயம்பெற முடியவில்லையென்றும் பிடிவாதமாகச் சொல்லித் தப்பிக்கலாம்' என்று சொன்னுன். அதைக்கேட்ட ஹேமவதியும், 'மனமோகனரின் கடிதம் கிடைத்ததும் நானும் இந்த முடிவுக்குத்தான் வந்தேன். மனமோகனரும் மோகனதாஸின் கதையை நம்பவில்லை, நான் மோகனதாஸ் கேட்கிறபடி என் குற்றத்தை நான் ஒப்புக்கொள்வதாக எழுதிக்கொடுத்து விட்டால் பிறகு நான் மனமோகனரின் முகத்தை எப்படிப் பார்ப்பது?'' என்ருள். அப்போது சந்திரசேகரன், 'ஆம், உன்னுடைய நிலைமை கஷ்டமாகத்தான் இருக்கிறது. என் சேவகன் ஆறுமுகம் இச்சமாசாரத்தை எங்கும் சொல்ல மாட்டான் என்பது நிச்சயம். தினகரனுடைய வைப்பாட்டிக்குத்தான் நாம் பயப்படவேண்டும்.' என்று சொல்லிமுடிப்பதற்குள் ஹேமவதி, 'ஆறுமுகத்தை உன்னுடன் அழைத்துக் கொண்டு வந்திருக்கிருயோ, அவனைப் பார்க்கவும் எனக்கு வெட்கமாக இருக்கிறதே' என்ருள். அதற்கு அவன், 'இல்லை. நான் அழைத்துக்கொண்டு வரவில்லை. எனது சித்தியும் சகோதரியும் அவர்களுடைய தோழிகளை அழைத்துக்

கொண்டு வந்தார்கள். ஆகவே அதிக கூட்டம் வேண்டா மென்று சொன்னதால் நான் என்னை அழைத்துக்கொண்டு வரச் சௌகரியப்படவில்லை. மேலும் அவனிடம் உன் சங்கதிகளையெல்லாம் ஆத்திரத்தில் சொல்லி விட்டதால் அவனை அழைத்துவர எனக்கே வெட்கமாக இருந்தது' என்று விடையளித்தான்.

அப்போது ஹேமவதி சீமாட்டி, 'சரி, தினகரனுடைய வைப்பாட்டி யென்பது யார்? அவன் இவ்வாறு யாருடனேனும் சம்பந்தம் வைத்துக்கொண்டிருக்க வேண்டுமென்று நான் சந்தேகப்பட்டதுண்டு. இப்பால் சிலகாலமாக இராக் காலங்களில் அவன் வீட்டில் தங்கியதே இல்லை' என்று இன்னும் ஏதோ சொல்ல முயன்றபோது சந்திரசேகரன், 'அவள் நாடகத்தில் நடிக்கும் ஒருமாது அவளுக்கு நாடக உலகில் கமல குமாரி என்று பெயர். அவளது சொந்தப் பெயர் பங்கஜம். அவளையும் எப்படியாவது சமாளித்துவிடலாம். அவள் பேராசை பிடித்தவ ளாதலால் பணம் கொடுத்துச் சரிப்படுத்திவிடலாம்' என்றான். அதற்குச் சீமாட்டி, 'ஆனல், அவள் இதற்கு முன்பே யாரிடமாவது இதைப்பற்றிப் பிரஸ்தாபித்து விட்டிருந்தால், என்ன செய்வது?' என்று ஆவலுடன் வினவினள். அவன், 'அவள் அவ்வாறு சொல்லியிருக்கமாட்டாள் என்றே நினைக்கிறேன். ஆயினும் அவள் என்ன செய்திருப்பாள் என்பதுபற்றி நிச்சயமாக என்னல் சொல்ல முடியாது. வீண் நம்பிக்கைகளை உனக்கு உண்டாக்குவதற்கு எனக்குச் சம்மதமில்லை.' என்ருன். அப்போது அச்சீமாட்டியும், 'ஆம் வீண் நம்பிக்கை எனக்கு உண்டாக்குவது தவறுதான். நீ இப்போது இரத்தினபுரிக்குச் சென்று அவளைப்பார்க்கிருயா? உன் சித்தியிடம் ஏதேனும் ஒரு அவசர காரணத்தைச் சொல்லிவிட்டுப் புறப்படு. உனக்கு வேண்டிய பணத்துக்கு நான்

என் பாங்கிக்கு செக் தருகிறேன். ஏதோ அவசர வேலையாகக் கடிதம் வந்திருக்கிறதெனச் சொல்லி நாளையே புறப்பட மாட்டாயா?' என்று கேட்டாள். அதற்கு அவன், 'அப்படியே ஆகட்டும். அவ்விஷயத்தை என்னிடம் ஒப்படைத்து விடு நான் பார்த்துக் கொள்கிறேன்' என்றான். அவர்கள் அவ்வாறு பேசிக்கொண்டே நடந்து சென்றதில் ஷண்பகவல்லியும், ராஜேஸ்வரியும் பேசிக்கொண்டிருந்த இடத்துக்குச் சமீபத்தில் வந்துவிட்டதால் அவர்கள் பேசும் சத்தம் கேட்கவே சந்திரசேகரனும் ஹேமவதியின் தோள்மீது போட்டிருந்த தன் கையை அப்புறப்படுத்தினான்.

இவ்வாறாக அன்றிரவு கழிந்தது. மறுநாள் காலை சந்திரசேகரம் பிரபுவுக்கு இரத்தினபுரியிலிருந்து ஒரு நண்பனுடைய கடிதம் கிடைத்தது. எல்லாருமாகக் காலை ஆகாரத்துக்கு உட்கார்ந்திருந்தபோது அக்கடிதம் அவனிடம் கொடுக்கப்பட்டது. உடனே அவனும் தன் நண்பனிடமிருந்து கடிதம் வந்திருப்பதாயும் அவன் மிகக் கஷ்டத்தில் அகப்பட்டுக் கொண்டிருப்பதால்தான் உடனே இரத்தினபுரிக்குப் போக வேண்டியிருக்கிறதென்றும் தெரிவித்தான். அவனுடைய சித்தி அவ்வாறு இதரர்கள் விஷயத்தில் அநாவசியமாகத் தலையிடவேண்டியதில்லையென்றும், அதற்காக இப்போது ஓடுவது தகாதுஎன்றும் தெரிவித்தாள். ஆயினும் அவன் ஏதோ பல விஷயங்களை அவளிடம் வற்புறுத்திச் சொல்லி இரத்தினபுரிக்குச் செல்ல அனுமதி வாங்கிவிட்டான். ஆகாரம்முடிந்த பின்னர்ஷண்பகவல்லியும் ராஜேஸ்வரியும்தோட்டத்தில் உலாவப்போய் விட்டார்கள். மதனவல்லியும் வெளியில் எங்கும் போகப் பிரியப்படாமல் மற்றொரு அறையில் நாவல் படிக்கப் போய்விட்டாள். ஆகவே ஹேமவதியும் சந்திரசேகரனும் மீண்டும் ஒரு தனியறையில் சந்தித்தார்கள். ஹேமவதி

சிமோட்டி சந்திரசேகரனிடம், 'என தன்புள்ள சந்திரசேகரா! நீ சொன்னபடி நான் இப்போது உன்னுடைய சொத்து என் பதை நீ அறிந்துகொள். பரஸ்பரம் கலியாணம் செய்துகொள் ளவில்லை யென்னும் ஒருகுறை தவிர மற்ற வகைகளில் நான் உன்னைச் சேர்ந்தவளே. நான் இன்று உனக்குப் பணிந்து விட்டபடியால் என் வாழ்க்கையிலேயே என் கணவனுடைய மரணத்துக்குப் பின்னர் நான் பணிவது முதல் முதலாக உனக்குத்தான் என்பதைத் தெரிவிக்க வேண்டியது அவசிய மாக இருக்கிறது. ஆதலால் எனக்காக நீ உன்னால் இயன் றதையெல்லாம் செய்யக் கடமைப் பட்டிருக்கிறாய் என்பது தெரிகிறதல்லவா? இன்னும் ஏன் ஏதோ சந்தேக முடையவ னைப்போல் பார்க்கிறாய்' என்று கேட்டாள்.

அப்போது அவன், அவள்மீது ஏதோ அதிகாரம் செய் யக்கூடிய நிலைமையில் உள்ளவன்போல் மிக்க உறுதியுடன், இனி நாம் இவ்வாறே மர்மமாகப் பேசிக்கொள்வதில் பய னில்லை. இன்னும் சிறிது விட்டுப் பேசி ஒருவருக்கொருவர் மர்மங்களை வெளியிடவேண்டும்!' என்று கண்டிப்பாகக் கேட் டதால் அவள் ஏதோ கஷ்டம் தனக்கு நேரப்போகிறது என்பதை உணர்ந்தவள்போல் தன் தேகம் முழுதும் நடுங்க 'நீ சொல்வதன் தாத்பர்யம் எனக்கு விளங்கவில்லையே? நீ சொல்வதுதான் என்ன? விளக்கமாகக் கூறிவிடு' என்றுகேட் டாள். அதற்கு அவன், 'இப்போதே நாம் இவ்விஷயத்தில் ஒருவித முடிவுக்கு வந்துவிட்டால் உனக்குத்தான் சௌகரிய மாக இருக்கும். நீ இனி என்னுடைய சொத்து என்று ஒப் புக் கொண்டுவிட்டாய். ஏன் நாம் பரஸ்பரம் ஒருவருக்கொரு வர் விவாக வாக்குதத்தம் செய்து கொள்ளலாகாது? 'என்று கேட்டான். இதைக் கேட்டதும் ஹேமவதி திடுக்கிட்டுப்

போனாள். ஆகவே மனக்குழப்பத்துடன் சந்திரசேகரனைப் பார்த்தாள். அப்போது அவன், 'எனதன்புள்ள சீமாட்டியே! விளையாட்டுத் தனமாக இருக்கவேண்டாம். நாம் கண்டிப்பாகப் பேசி ஒருவித முடிவுக்கு வந்துவிட வேண்டும். நான் உன்னைத் திடமாக நம்பும்படி செய்துவிட்டாய் உன் கணவன் மரணத்துக்குப் பின்னர் எந்த ஆடவனுடனும் நீ சம்பந்தம் வைத்துக்கொண்டதில்லை என்று ருஜுப்பித்தாய் மோகன தாஸினிடம் ஏதோ ஆசைப்பட்டாயே தவிர, காரியம் ஒன்றும் நடைபெறவில்லை. நான்தான் உனது முதல் காதலனாக இருப்பதால் உன்னை மணந்துகொள்வதில் எனக்கு அகௌரவமோ, தடையோ இல்லை. நான் இளையவனாயினும் தோற்றத்தில் வயது முதிர்ந்தவன்போல் காணப்படுகிறேன். நீயோ வயது முதிர்ந்தும் இளமையோடு கூடியவள் போலக் காணப்படுகிறாய். ஆகையால் நாம் சரியான தம்பதிகளே என்பதற்கும் ஆட்சேபமில்லை. மேலும் அழகில் நீ யாருக்கும் பின்வாங்கியவளல்ல. உன்னைப்போல் ஒருத்தி எனக்கு மனைவியாகக் கிடைப்பது என் அதிர்ஷ்டமே. ஆதலால் நாம் கணவனும் மனைவியுமாக இருக்கப் போவதாகப் பரஸ்பரம் சத்தியம் செய்துகொள்வதே நலம் என்று விவரமாகக் கூறிமுடித்தான்.

இதையெல்லாம்கேட்ட ஹேமவதி சீமாட்டி மதிமயங்கி, 'சந்திரசேகரம்! நீ உண்மையிலேயே கண்டிப்பாகப் பேசுகிறாயா? என்னுடன் வேடிக்கை பேசவேண்டாம். அதற்கு இது காலமல்ல என்மனம் புண்பட்டிருக்கிறது' என்று இரக்கத்துடன் கேட்டாள். அதற்கு அவன், 'நான் என் வாழ்க்கையிலேயே இதற்கு முன் எப்போதும் இவ்வளவு கண்டிப்பாக இருந்ததில்லை யென்றே கூறலாம். நீயும் மனவமைதியடையும்போது நான் செய்தது சரி என்பதை உணர்வாய். நான் சொத்தில்லாமல் பிறர் கையை எதிர்பார்த்துக்கொண்டி

ருப்பவனுதலால் உன்னைப்போன்ற ஒருபணக்காரி அகப்படும் போது நான் தக்கபடி ஏற்பாடு செய்துகொள்ளவில்லையென்ருல் அது முட்டாள்தன மாகுமல்லவா?' என்ருன். அப்போது ஹேமவதி சீமாட்டி அதிக ஆத்திரத்துடன் தன் காலால் பூமியை அறைந்து,, சந்திரசேகரம்! நீ ஒரு பைத்தியக் காரனுகத்தான் இருக்கவேண்டும். நீ என்னைக் கலியாணம் செய்துகொண்டால் எனது குமாரன் தினகரன் எப்படி உன் சகோதரியை விவாகம் செய்துகொள்ள முடியும்?' என்று கேட்க, அவன் 'மாதே! நான் முதலில் என்னைப் பற்றிக் கவனித்துக்கொண்ட பிறகுதானே என் சகோதரியைப் பற்றிக் கவனிக்கவேண்டும். தினகரனும் ஷண்பகவல்லியும் கலியாணம் செய்துகொள்ளப் போவதால் எனக்கேதேனும் பணம் கிடைக்கப்போகிறதா? உன்னை நான் கலியாணம் செய்து கொண்டு விட்டால் எனது அந்தஸ்து உயர்ந்து விடும். பிறகு தினகரனுக்கு ஒரு சரியான பெண்ணையும் என் சகோதரிக்குப் பணக்காரனுன பையனையும் தேடினுல் போகிறது. ஆகவே நான் இப்போது செய்யும் ஏற்பாடுதான் மிகச் சிலாக்கியமானது. ஆதலின் இப்போது நாம் இருவரும் கணவனும் மனைவியும்தான் என்பதில் ஆக்ஷேபமில்லை. விவாகச் சடங்குதான் பாக்கி. அதையும் விரைவில் முடித்துக் கொண்டு விடுவோம்' என்று கூறினுன்.

அதைக்கேட்ட ஹேமவதி இனி மேற்போக்காகப் பேசுவதில் பயனில்லை யென்பதை அறிந்தவளாய், 'இப்போது நீ சொல்வது யோசனைதானே. அதை நான் ஒப்புக் கொள்ளவோ அல்லது மறுக்கவோ எனக்கு உரிமை உண்டல்லவா? அல்லது 'நீ ஒரே பிடிவாதமாகக் கட்டளையிடுகிருயா? அதற்குதான் வணங்கித்தான் ஆகவேண்டுமா? என்று விசாரித்தாள். அதற்கு அவன் 'நீ நமக்குள் கடுமையான வார்த்

தைகள் பேசவேண்டிய நிலைமை ஏற்படாதபடி நடந்து கொள். வேண்டுமாயின் நான் என் மனதிலுள்ளதை விட்டுச் சொல்லி விடுகிறேன்' என்றதும் அவளும், 'ஆம்; அப்படியே சொல்லிவிடு. நீ என்ன சொல்லப் போகிறாய் என்பதைத் தெரிந்துகொண்டு விடுவதே நலம்' என்றாள். அதற்கு அவன், 'சரிதான். முதன் முதலாக மோகனதாஸைக் கொல்வதற்கு நீ என்னை ஏவினாய். நான் அதில் ஈடுபட்டால் நீ எனது காதலியாக இருந்து உன்னுடன் இன்பத்தை அனுபவிக்க இடம் தருவதாகச் சொன்னாய். அதன்படியே நான் என் கடமையை முடித்தேன். ஆனால் நீ என்னைக் கேவலமாக நடத்தி என்னை ஏமாற்றவும் முயற்சித்தாய். இப்போதும் நீ என்னை வரவழைத்து உன் காரியத்தைச் சாதித்துக் கொள்ளப் பார்க்கிறாய். நீ உன் சுய நலத்தையே அதிகம் காட்டிக்கொள்கிறாயே தவிர என்னிடம் ஏதோ ஆசைகொண்டிருப்பதாகத் தெரியவில்லை. நான் உனக்காகக் கூலிக்கு வேலை செய்வேன் என்று நீ நினைத்துக் கொண்டாயா? நான் உன் வேலையைச் செய்து முடித்த பிறகு மறுபடியும் என்னை அலட்சியமாகப் புறக்கணித்து விட்டால் நான் என்ன செய்வது நீ என் இஷ்டப்படி நடக்க நான் வழிபார்த்துக் கொள்ள வேண்டாமா? ஆதலால் உன்னை நான் என் மனைவியாக்கிக் கொண்டுவிட வேண்டும். ஆகவே நீ என் மனைவியாக இருக்கச் சம்மதப்படுவதாக எழுதிக் கொடுத்த பிறகு தான் நான் இரத்தினபுரிக்குப்போய் உன் காரியங்களையெல்லாம் கவனிக்க முடியும்' என்று விவரமாகக் கூறி விட்டான்.

அதைக் கேட்ட ஹேமவதி உள்ளே அதிக ஆத்திரமடைந்தவளாய் ஆனால் அதைக் காட்டிக் கொள்ளாமல் ஏதோ ஒருவித கொடிய சிந்தனை செய்தவள் போன்ற முகத்

துடன், 'நீ இத்தகைய ஏற்பாட்டைச் செய்துகொள்ள விரும்புவது இயற்கைதான். இதிலொன்றும் ஆச்சர்யமில்லை' என்ருள். அதற்கு அவன், 'நான் ஆத்திரப்பட்டோ, கெட்ட எண்ணத்துடனே எதைவும் பேசிவிடவில்லை. நிதானமாக ஆராய்ந்து பார்த்து அமைதியான முறையிலேயே எல்லாவற்றையும் பேசியிருக்கிறேன்,' என்று சொன்னுளே யொழிய அவளது முகக்குறியிலிருந்தே அவள் அதிகம் கோபித்துக் கொண்டிருக்கிருள் என்பதையும் தான் ஒன்றும் செய்ய முடியாத நிலைமையில் இருப்பதால் வருத்தப்பட்டிருக்கிருள் என்பதையும் தெரிந்துகொண்டான். எனினும் அதை அவன் பொருட்படுத்தாமலில்லை. தன்க ருமத்திலேயே கண்ணுயிருந்தான். அம்மாதும், 'நீ இவ்வளவு பிடிவாதமாக இருப்பதால் நான் அதற்குச் சம்மதித்திருப்பதைத் தவிர வேறு வழி எனக்கு இல்லை. மேலும் நான் இப்போது உன்னிடம் அடங்கி நடக்க வேண்டியவளாகவும் இருக்கிறேன். என்ன செய்வது?'' என்று தெரிவித்தாள்.

அப்போது சந்திரசேகரன், உன் நிலைமையை நீ அறிந்து கொள். நான் விரும்பினுல் ஒரு நிமிஷத்தில் உன்னை அடியோடு அழித்துவிடுவேன். மோகனதாஸ் சார்பாக நானே சாட்சியாகப் போய்விட்டால் உன்பாடு தகராறுதான். நீ விருந்து மண்டபத்துக்கு என்னைச் சந்திக்க வந்தபோது உடுத்திருந்த ஆடையையும் நானே வைத்திருக்கிறேன் என்பது உன் ஞாபகத்தில் இருக்கட்டும்' என்ருன். அதைக்கேட்டுத் தன் நிலைமைக்காக அதிகம் வருத்தப்பட்ட அவள் தன்உதட்டைக் கடித்துக்கொண்டு 'போதும், போதும். அதிகம் பேச வேண்டாம். உன் இஷ்டப்படியே ஆகட்டும்' என்று கூறிக் கொண்டே வெறுப்புடன் அருகிலிருந்த மேஜையினருகில்

உட்கார்ந்து ஏதோ எழுத ஆரம்பித்தாள். உடனே திடீரென்று எழுதுவதை நிறுத்தி, சந்திரசேகரனைப்பார்த்து, 'விவாக உறுதிமொழியை நீயே உன்இஷ்டப்படி எழுது. அதை நான் மறுமுறை எழுதுகிறேன், அல்லது அதிலேயே கையெழுத்து போட்டுவிடுகிறேன்,' என்றாள். அதற்கு அவன் 'இதற்காக அவ்வளவு சிரமப்பட வேண்டியதில்லை. நான் சொல்லிக் கொண்டே வருகிறேன். நீ எழுது!' என்றான். அவளும் அப்படியே ஆகட்டும்' என்று ஒப்புக்கொண்டாள். சந்திரசேகரன் பின் வருமாறு சொன்னான். அதை ஹேமவதி சீமாட்டி எழுதினாள்.—'அடியிற் கையொப்பமிட்ட ஹேமவதி சீமாட்டியாகிய யான் பலவிதங்களிலும் சந்திரசேகரம் பிரபுவுக்குக் கடமைப்பட்டவளாக இருப்பதாலும், அப் பிரபு எனக்குப் பலவித உதவிகளைச் செய்திருப்பதால் அவரிடம் எனக்கு அன்பும் விசுவாசமும் ஏற்பட்டிருப்பதாலும் நான் இன்று முதல் ஒரு மாதத்துக்குள்ளாக அப்பிரபுவைக் கலியாணம்செய்துகொள்வதாக இதன்மூலம் ஒப்புக்கொள்கிறேன். இந்த விவாக ஒப்பந்த மூலம் பிரபுவுக்கு நஷ்ட மேற்படலாமாதலால் நான் இவ் வாக்கு தத்தத்தை நிறைவேற்றா விட்டால் லட்சம் பவுன் கொடுத்துவிட ஒப்புக் கொள்கிறேன்' இவ்வாறு எழுதி முடிந்ததும் ஹேமவதி 'இவ்வளவுதானா' என்று கேட்டாள். அதற்கு அவன், 'இவ்வளவு போதும் இதுதான் வியாபார முறை. நீ என்னை நேசிப்பதாகவும், எனக்கு ஏதோ நஷ்ட மேற்படுமென்றும் கூறுவதெல்லாம் வெறுங் கதை. சாதாரணமாக எந்த ஒரு வக்கீலிடம் போனாலும் இப்படித்தான் பல விஷயங்களைச் சேர்ப்பார்' என்று சொன்னான்.

186578

அதைக் கண்ட ஹேமவதி 'சரிதானா' இந்த ஒப்பந்தம் எழுதிவிட்டதிலேயே சந்தோஷப்பட்டுக்கொண்டிருக்க

186578

வேண்டாம்; காரியத்தை முடிக்கவேண்டாமா? வண்டி தயாராக இருக்கிறது. புறப்படு' என்ருள். அவனும், 'நான் ஏதோ சந்தோஷத்தில் இருந்து விட்டேன். மன்னித்து விடு. இந்த ஒப்பந்தத்துக்கு உன் அழகிய கரத்தால் கையெழுத்திட வேண்டாமா? நீ கையெழுத்து போட்டதும் நான் புறப்பட்டு விடுகிறேன்' என்ருன். அப்போது அவள், 'இதோ முடிந்து விட்டது. ஆயிரம் பவுனுக்குச் செக்கும் எழுதியிருக்கிறேன். அது போதுமல்லவா?' என்ருள். அதற்கு அவன் இன்னும் வேண்டுமாயினும் எழுதிக் கேட்கிறேன். ஆனல் விரைவிலேயே நம் இருவருக்கும் பொதுவான சொத்தாக மாறிப் போகும் இதில் அதிகம் செலவழிக்க நான் விரும்பவில்லை என்று கூறினன். பிறகு அவன் ஹேமவதியைக் கட்டித்தழுவிக்கொண்டான். அவளும் திரும்பி யணைத்துக் கொள்ளா விட்டாலும் அவனது செய்கையில் வெறுப்படையாதவள் போல் வெறுமனே நின்றிருந்தாள். பின்னர் சந்திரசேகரன், தன் சித்தி, சகோதரி முதலிய பலருடைய அனுமதியையும் பெற்றுத் தெருவில் காத்திருந்த வண்டியில் ஏறி அதில் அமர்ந்து இரத்தினபுரிக்குப் புறப்பட்டான்.

சந்திரசேகரம் பிரபு சுந்தர விலாச மாளிகையினின்றும் புறப்பட்டுப் போனதும் ஹேமவதி சீமாட்டி தனியாக ஒரு அறையில் உட்கார்ந்து நடுக்கத்துடன் ஒரு கடிதத்தை எழுதி முடித்தாள். பிறகு அவள் ஒருவண்டியை வரவழைத்து, அவ் ஆருக்கடுத்த மிதுனபுரிக்கு ஒரு பாங்கரிடம் வேலையிருப்பதாகச் சொல்லிப் புறப்பட்டாள். தியாகராஜன் வருவானென்று ராஜேஸ்வரி எதிர்பார்த்ததால் அவளும் தன் தாயினுடன் செல்லவில்லை. சீமாட்டி சொந்த வேலையாகச் சென்றதால் அவளுடன் செல்ல ஷண்பகவல்லியும் பிரியப்படவில்லை. மதனவல்லியும் அதற்கு முன்னாள் இரத்தினபுரியிலிருந்து

வண்டியில் வந்த அலைப்பால் வெளியில் எங்கும் செல்லத்தயாராக இருக்கவில்லை. எனவே ஹேமவதி சீமாட்டி தனியே செல்ல வசதி ஏற்பட்டது. உண்மையில் சீமாட்டிக்கு அங்கு எத்தகைய வேலையும் இல்லை. தான் எழுதிய கடிதத்தைத் தன் கையாலேயே மிதுனபுரி தபாலாபீசில் போடவேண்டுமென்பது தவிர வேறு எவ்விதக் காரணமுமில்லை. ஆட்கள் எவரேனும் தபாலில் போட்டால் அவர்கள் அக்கடிதம் யாருக்கு எழுதப்பட்டிருக்கிறதென்பதையேனும் அறிந்துகொண்டு விடுவார்க ளல்லவா?

62-வது அத்தியாயம்

—:():—

மிதுனபுரி தபாலாபீஸ்

இப்போது நாம் மிதுனபுரி தபாலாபீஸில் என்ன நடக்கிறதென்பதைக் கவனிப்போம். அங்கு மணியார்டர்களைக் கவனிப்பவனும், கடிதங்களைப் பிரித்து வைப்பதுடன் பல விஷயங்களையும் விசாரிப்பவர்களுக்குப் பதில்சொல்பவனுமாக இரு குமாஸ்தாக்கள் தங்கள் வேலைகளைக் கவனித்துக் கொண்டே ஊர்வம்புகளையும் பேசிக்கொண்டிருந்தனர். அவர்கள் அவ்வாறு பேசிக்கொண்டிருந்தபோது அதே தபாலாபீஸில் வேலை செய்பவனும் ஆனல் ரஜாவில் சென்றிருந்தவனுமான சோமேசன் என்பவன் காரியாலயத்தில் புகுந்து தனது சகாக்களுக்கு வந்தனம் செலுத்தினன். உடனே இருவருமாக ஒரே மூச்சில், 'சோமேசா! ரஜாவை எவ்வாறு இன்பமாகக் கழித்தாய்?' என்று கேட்டனர். அதற்கு அவன், 'ஏன்?

மிகவும் இன்பமாகத்தான் கழித்தேன். பதினைந்து தினங்களுக்குப் பதிலாக ஒருமாத ரஜா வாங்காமற் போனேனே யென்றும் வருந்துகிறேன். அது இருக்கட்டும். ஹேமவதி சீமாட்டி கிருஷ்ணகிரி மாளிகையில் வந்து தங்கி இருப்பதாகக் கேள்விப்பட்டேனே அது மெய்தானா?' என்று ஆர்வத்துடன் கேட்டான். அப்போது சோமேசனுடைய சகாக்களில் ஒருவன், 'ஆம், சில நாட்களாக அச்சீமாட்டி இங்கு வந்து தங்கியிருக்கிறாள். அவளுடைய இளையகுமாரி கற்பகம் யாரோ ஆடவனுடன் ஓடிப்போய்விட்டாளாமே. அது மெய்தானா?' என்று கேட்டான். அதற்கு அவன், 'ஆம், மெய்தான். இரத்தினபுரியில் எங்கும் இதே பேச்சாக இருக்கிறது. சீமாட்டி கிருஷ்ணகிரிக்குப் புறப்படுவதற்காக வண்டியில் ஏறும் சமயத்தில் முன்னதாகவே எல்லா ஏற்பாடுகளையும் செய்து வைத்துக்கொண்டிருந்து தன் தாயை ஏமாற்றிவிட்டுப் போய் விட்டாளாம்.' என்று சொன்னான்.

அப்போது அந்த சகா, 'போனால் போகட்டும். அடித்துக்கொண்டுபோனவன் கற்பகத்துக்கு ஏற்ற ஆடவன்தானா? அது சம்பந்தமாக உனக்கு ஏதேனும் தெரியுமா?' என்று கேட்க, சோமேசன், 'சரியான ஆள்தான். துளசிங்கம் பிரபுவுடன் அவள் போய்விட்டாள். அவன் சுமார் இருபத்தேழு வயதானவனே. மிக அழகானவன். பெரிய உத்தியோகத்தையும் வகிக்கின்றான், ஆனால் அவனுக்குச்சொத்து ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. அது தவிர மற்ற விஷயங்களிலெல்லாம் அவன் ஏற்றவனே!' என்று கூறிமுடித்தான். அப்போது மற்றொருசகா, 'அதெல்லாம் நமக்கேன்? நீ எப்போது திரும்பி வந்தாய்?' என்று கேட்டான். அதற்குச் சேமேசன் 'நேற்றிரவுதான் வந்தேன். என்னுடன் ஒரு வாலிபன் பிரயாணம் செய்தான். அவன் அழகிலும் அறிவிலும் தேர்ந்த

வன். அவனுடன் பேசிக்கொண்டே பிரயாணம் செய்ததில் பொழுது போனதே தெரியவில்லை. சமீபத்தில் இரத்தினபுரி யில் சந்திரசேகரம் பிரபு என்பவனுக்கும் மோகனதாஸ் என் பவனுக்கும் துப்பாக்கிச் சண்டை நடந்ததாக நீங்கள் வாசித் திருக்கலாமல்லவா?' என்று கேட்கவும், அவர்கள் இருவரும், 'ஆமாம், தெரியும். முதலில் மோகனதாஸ் இறந்து விட்டா னென்று வெளியாயிற்று. பிறகு அவன் இறக்கவில்லையென் றும், பலத்த காயமடைந்து ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருவதாகவும் வெளிவந்தது' என்றார்கள்.

அப்போது சோமேசன், 'ஆம், அந்த மோகனதாஸ் என்பவன்தான் என்னுடன் நேற்று பிரயாணம் செய்தது. இப்போதும் அவன் பலஹீனமாகவும், வெளுத்தும் இருக் கிறானென்றாலும் காயத்தினின்றும் அதிகமாகவே சொஸ்த மடைந்திருக்கிறான்! என்றதும் சகாக்களில் ஒருவன், 'அவன் நமது மிதுனபுரிக்கு வந்ததன் காரண மென்னவோ?; என்று விசாரித்தான். அதற்குச் சோமேசன், 'அது எனக்குத் தெரி யாது அவனாக ஒன்றும் சொல்லவில்லை. நானும் கேட்க வில்லை' என்று பதில் அளித்தான். அப்போது மற்றொரு கா, 'இச்சமயத்தில் சந்திரசேகரம் பிரபுவும் கிருஷ்ணகிரி சுந் தரவிலாச மாளிகையில் இருப்பதாகத் தெரிகிறது. இன்று அவனுக்கு வந்த ஒரு கடிதத்தை நாங்கள் அம்மாளிகைக்கு அனுப்பினோம்,' என்று சொன்னதும் சோமேசன், 'இதெ ன்ன, ஆச்சர்யமாக இருக்கிறது. பாவம், மோகனதாஸ் சுந் தரவிலாச மாளிகையையும் அதன் சுற்றுப் பக்கத்தையும் பார்க்கவேண்டுமென்று விரும்பினான். நானும்உடன் இருந்து அதைக் காண்பிப்பதாகச் சொன்னேனே; அவனும் இங்கு இப்போது வருவான். மிதுனபுரிக்கு அவன் புதியவனாதலால் என் உதவியை வேண்டினான். நானும் அவனுடன் இருப்

பதாக ஒப்புக் கொண்டேன்,' என்றான். அப்போது சகாக்களில் ஒருவன், 'அப்படியானால் நீ இன்று ஆபீஸ் வேலையை ஒப்புக் கொள்ளமாட்டாய் என்று தோன்றுகிறதே' என்று கேட்டதற்கு அவனும், 'ஆம், ஒப்புக்கொள்வதில்லை. இன்று இரவுவரை எனக்கு லீவ் இருக்கிறதே; அப்படியிருக்க நான் ஏன் இப்போதே வேலை செய்யவேண்டும்' என்றான்.

அவர்கள் அவ்வாறு பேசிக்கொண்டிருந்தபோது ஒரு ஆள் வெளியே நின்று சோமேசனை விசாரித்தான், அந்த ஆள் மோகனதாஸ் என்று சோமேசன் அறிந்துகொண்டு, 'மோகனதாஸ்! வந்து விட்டாயா? ரொம்பவும் சந்தோஷம். உள்ளே வா; சிலநிமிஷங்களுக்குள் புறப்படுவோம்' என்றான். அப்படியே மோகனதாஸனும் உள்ளே சென்றதும் சோமேசன் அவனை மற்ற இரு நண்பர்களுக்கு அறிமுகப் படுத்தி வைத்தான். அவர்கள் நால்வருமாகப் பேசிக்கொண்டிருந்த போது யாரோ கதவைத்தட்டி எதையோ விசாரித்ததால் அது சம்பந்தப்பட்ட குமாஸ்தா பதில் சொல்லிக் கொண்டிருந்த போது அவ்வழியே சென்ற ஒருமாது ஒரு கடிதத்தைத் தபால்பெட்டியில் போட்டாள். அது பலமாகத் தள்ளப்பட்டபடியால் பெட்டிக்கு வெளியில் இருந்த இங்கி புட்டியின்மீது விழுந்தது. யார் அப்படிப் போட்டது எனக் கவனித்ததில் ஹேமவதி சீமாட்டி என்று அறிந்துகொண்டார்கள். ஹேமவதியின் பெயரைக் கேட்டதுமே மோகனதாஸ் ஒருவித உணர்ச்சியை அடைந்தான். ஆனால் அதை அவனுடைய நண்பர்கள் அறியவில்லை. ஆங்கிருந்த குமாஸ்தாக்களில் ஒருவன், சீமாட்டி போட்ட கடிதத்தின்மீது எழுதப்பட்டிருந்த விலாசத்தைப் படித்துப் பார்த்துவிட்டு ஆச்சர்யத்துடன், 'இதென்ன விநோதமாயிருக்கிறது இக்கடிதம்இரத்தினபுரியை அடுத்த நடுக்குப்பத்தைச் சேர்ந்த கோபாலன் தம்பதிகள்

என்னும் நவீன விலாசத்துக்கு எழுதப்பட்டிருக்கிறதே அவளுக்கும் அவர்களுக்கும் என்ன சம்பந்தம்?'' என்று ஆச்சர்யத்துடன் கேட்டான்.

அதற்குச் சோமேசன், அவன் சீமாட்டியிடம் எப்போதாவது வேலைசெய்த சேவகனாகஇருக்கலாம். அல்லது யாரேனும் தர்மம் செய்யும்படி கேட்டுக்கொண்டிருந்து அவர்களுக்குப் பதில் எழுதப்பட்டிருக்கலாம். இதில் ஆச்சர்ய மென்ன இருக்கிறது' என்று அசிரத்தையுடன் பேசுபவன்போல் கூறினான். அதற்கு அந்த குமாஸ்தா இது சீமாட்டியின் கையெழுத்துதான். ஆனால் சிறிது நடுக்கத்துடன் எழுதப்பட்டிருக்கிறது. அவள் ஏதோ சூழ்ச்சி செய்திருக்கிறாள் என்பது நிச்சயம். அவ்வளவு நான் அறிந்து கொள்ளாவிட்டால் என்னை முட்டாள் என்றுதான் சொல்லவேண்டும். மோகனதாஸ்! நான் சொல்வதைக்கேள். எங்களுக்குப்பலருடைய கையெழுத்தும் நன்றாகத் தெரியும்! என்றான். அச்சமயத்தில் சோமேசன் 'மோகனதாஸ் இந்த விவகாரங்களையெல்லாம் கேட்டுக்கொண்டிருக்க விரும்பமாட்டான்! என்று சொல்லி அந்தக் குமாஸ்தா மேற்கொண்டு பேசுவதைத் தடுத்தும் அவன் அதைப் பொருட்படுத்தாமல், 'இக்கடிதம் முறைப்படி சீல் போடப்படவில்லை. பென்சிலின் பின்பக்கத்தால் அரக்கின்மீது அழுத்தப்பட்டிருக்கிறது. மேலும் இக்கடிதத்தை வேறு எவரிடமேனும் கொடுக்கவும் சம்மதியாமல் அவளே தபாலாபீசுக்கு வந்திருக்கிறாள் என்பதையும் இச்சமயத்தில் கவனிக்க வேண்டும்' என்று பிரசங்கம் செய்ய ஆரம்பித்தான்.

ஆகவே சோமேசன், 'மோகனதாஸ், நான் உன்னுடன் வரத்தயாராக இருக்கிறேன். நீ இந்த நீண்ட பிரசங்கத்தைக் கேட்பதில் வெறுப்பு அடைந்திருப்பாய் என்று நம்புகிறேன்'

என்றான். உடனே சோமேசனும் மோகனதாஸும் தபாலாபீசை விட்டுப் புறப்பட்டார்கள். பிறகு அவர்கள் இருவரும் மோகனதாஸ் தங்கியிருந்த ஓட்டலுக்குச் சென்று பின்னர் அங்கிருந்து ஒரு வண்டியில் ஏறிக்கொண்டு சுந்தரவிலாச மாளிகையை நோக்கிச்சென்றார்கள். சிறிது நேரத்துக்குமுன் தபாலாபீசில் நடைபெற்ற சம்பவத்தில் மோகனதாஸ் அதிக சிரத்தை யெடுத்திருப்பான் எனச் சோமேசன் நினைக்கவில்லை யென்றாலும் மோகனதாஸ் மட்டும் அதுவே சிந்தனையாக இருந்தான். அந்தக் குமாஸ்தாக்களைவிட அதிகமாக மோகனதாஸ் ஹேமவதி சீமாட்டியின் குணத்தை அறிவானாதலாலும் நடுக்குப்பத்தில் சமீபத்தில் ஒரு குடும்பமே கொலை செய்யப்பட்டுக் கிடந்ததென்பதை பத்திரிகை மூலம் படித்து அந்தப் பிரதேசம் போக்கிரிகளும், அயோக்கியர்களுமே தங்கியிருக்குமிடமென்பதை அறிவானாதலாலும், அந்த இடத்தில் ஹேமவதி சீமாட்டிக்கு அறிமுகமானவனும், அவளுடன் கடிதப் போக்குவரத்து வைத்துக்கொள்பவனும் ஒருவன் இருக்கிறான் என்பதை யறிந்து மோகனதாஸ் அளவிலா ஆச்சர்யப் பட்டதுடன் பிரமையும் அடைந்தான். மேலும் தபாலாபீஸ் குமாஸ்தாசொன்னதுபோல் சீமாட்டியே அக்கடிதத்தைக்கொண்டு வந்து தபாலாபீசில் போட்ட தையும், எழுத்து நடுக்கத்துடன் எழுதப்பட்டிருப்பதையும் கவனிக்கும்போது அது சீமாட்டியின் அந்தஸ்துக் கேற்ற வகையில் நல்லெண்ணத்துடனே, யோக்கியப் பொறுப்புடனே எழுதப்படவில்லை என்பதையும் அறிந்தான். இவ்வாறெல்லாம் பலவிதமாக மனதில் சிந்தித்தானென்றாலும் அதைத்தன் நண்பன் சோமேசனிடம் வெளியிடவில்லை.

அவர்களிருவரும் ஏறிக்கொண்டு வந்த வண்டி சுந்தரவிலாச மாளிகைக்குச் சிறிது தூரத்தில் இருந்தபோதே

மோகனதாஸ், தன் நண்பனிடம் வண்டியில் உட்கார்ந்தபடியே மாளிகையின் அருகில் சென்றால் பலரும் தங்களையே கூர்ந்து கவனிக்க நேருமாதலால் தூரத்திலிருக்கும்போதே வண்டியை விட்டு இறங்கிவிடலாமென்றும், தூரத்திலிருந்தே கட்டடத்தையும் அதைச் சுற்றியுள்ள தோட்டத்தையும் பார்த்து விட்டால் போதுமென்றும் தெரிவித்தான். அதற்குச்சோமேசன் அன்னியர் எவரும் எவ்வளவுசமீபத்தில் சென்றாலும் யாரும் கவனிக்க மாட்டார்களென்றும், சேவகர்களுக்கு ஏதேனும் சிறிது சில்லறை கொடுத்தால் பின்புறத்தின் வழியே தோட்டத்தில் நுழைந்து மாளிகையைச் சேர்ந்தாற் போலுள்ள மடம், இருட்டறை, பூமிக்குள் கட்டப்பட்டிருக்கும் பாதாள அறைமுதலிய சுந்தரவிலாச மாளிகைக்குள்ள பிரத்யேகமான ஆச்சர்யங்களைப் பார்க்கலாமென்றும் யோசனை கூறினான். ஆயினும் மோகனதாஸ் அந்த யோசனையின்படி செய்ய இஷ்டப்படவில்லை. தூரத்திலிருந்துகொண்டே கட்டடத்தையும் தோட்டத்தையும் பார்த்தால் போதுமென்று கூறினான். அப்படியே சோமேசன் முன்னே செல்ல மோகனதாஸ் பின்தொடர்ந்து சென்று சிறிதுதூரத்தில் இருந்தபடியே சுந்தரவிலாச மாளிகையையும், அதனையடுத்த தோட்டத்தையும் பார்த்துவிட்டுத் திரும்பினான். இருவருமாக வண்டியில் ஏறிக்கொண்டு மிதுனபுரிக்குத் திரும்பியபோது வழியில் ஹேமவதி சீமாட்டி தனது வண்டியில் மிதுனபுரியிலிருந்து கிருஷ்ணகிரிக்குத் திரும்பி வருவதைப் பார்த்தார்கள். அவள் வண்டியில் சாய்ந்திருந்தபடியால் அவளது முகம் மோகனதாஸுக்குத் தெரியாததுபோலவே அவளும் தன்னைப் பார்த்திருக்கமாட்டாளென மோகனதாஸ் நினைத்தான்.

இதே சந்தர்ப்பத்தில் சுந்தரவிலாச மாளிகையில் என்ன நடந்துகொண்டிருந்ததென்பதைக் கவனிப்போம். தியாக

ராஜன் ராஜேஸ்வரியைக் கண்டு பேசும்பொருட்டு அம் மாளிகைக்கு வந்திருந்தான். அவன் அவ்வாறு வருவானென முன்னதாகவே ராஜேஸ்வரி ஷண்பகவல்லியிடம் தெரிவித்திருந்தாள். ஷண்பகமும் அவள் தனியே தன் காதலனைச் சந்தித்துக் குலாவட்டும் என்னும் எண்ணத்துடன் ராஜேஸ்வரியைத் தனியே தோட்டத்தில் உலாவ விட்டு அவள் மாளிகையில் தங்கி இருந்தாள். ராஜேஸ்வரியும் தன்னுலியன்ற ஜாலங்களையெல்லாம் செய்து தியாகராஜனுக்குத் தன்னிடம் அதிக மோகமும் அன்பும் உண்டாகும்படி செய்திருந்தாள். தியாகராஜனும் உண்மையிலேயே அவளிடம் தணியாக் காதலும், அன்பும் உடையவனு யிருந்தானென்றாலும் ஒரு சில தினங்களே பழகியதைக் கொண்டே விவாகப் பேச்சு பேசிவிடுவது ஆத்திரப்பட்ட செய்யலாகும் என்று கருதினுன். ராஜேஸ்வரி சிறு பெண்ணுக இருந்தது முதலே அவளைத் தியாகராஜன் அறிவானென்றாலும் நான்கு தினங்களுக்கு முன்னர் அவளைப் பாக்கியம் குடும்பத்து விருந்தில் சந்தித்த போதுதான் அவனுக்கு அவளிடம் ஒருவித பிரேமையும் அபிமானமும் உண்டானதை யறிந்தான். காதல் சம்பந்தமான சில நாவல்களை அவன் படித்திருக்கிறு னென்றாலும் காதல் விஷயத்தில் ஈடுபட அவன் அறியாதவனுதலால் சொற்ப தினங்களின் பழக்கத்திலேயே எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்பதை யறியாமல் திகைத்தான். அப்படி யாயினும் தான் ராஜேஸ்வரியை மணப்பதாக ஒப்புக்கொள்ள இன்னும் ஒருமாதகாலமாவது கழியவேண்டுமென்று நினைத்தான். அதுபோலவே அவளும் அவசரப்பட்டு வேலையைக் கெடுத்துவிடக் கூடாதென்றும், நாளுக்கு நாள் தன்னிடம் அவனுக்கு அன்பு அதிகரிக்கும்படி செய்யவேண்டுமென்றும் நினைத்து அதற்குத் தக்கபடி பேசியும் நடந்தும் வந்தாள். இருவருக்கும் பரஸ்பரம் அன்பு ஏற்பட்டிருந்ததென்றாலும்

சரியான காலம் ஏற்படாமல் இருந்ததுதான் அவர்களைக் கணவனும் மனைவியுமாக ஆகாதபடி தடுத்து வைத்திருந்தது. இதற்குத்தான் எதற்கும் காலம் வரவேண்டும் என்று கூறுவது. எவ்வளவுதான் நாம் ஓடியாடி அவஸ்தைப் பட்டாலும் காலம் வந்தாலொழிய எக்காரியமும் நிறைவேறாது. ஆனால் காலம் வரவேண்டுமென்று நாம் சோம்பேரித்தனமாக உட்கார்ந்திருப்பதும் தவறு.

மிதுனபுரிக்குச் சென்ற ஹேமவதி சீமாட்டி திரும்பி வந்ததும் தியாகராஜனை அங்கேயே பகல் போஜனத்துக்கு இருக்கும்படி கேட்டுக்கொண்டாள். அவனும் அதை மறுக்க முடியாமல் ஒப்புக்கொண்டான், பிறகு அன்று மாலை அவன் வீட்டுக்குப் போகும்போது அவனது அன்பு எல்லை கடந்ததாக அதிகரித்து விட்டதால் இன்னும் பதினைந்து தினங்களுக்குள் விவாக ஏற்பாடு செய்துவிட வேண்டும் என்று நினைத்துக் கொண்டான். தியாகராஜன் மறுநாள் காலை பதினொருமணி சுமாருக்கு ஹேமவதியின் மாளிகைக்கு வந்து ராஜேஸ்வரியுடன் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்த பின்னர் இருவருமாக வண்டியி லேறிக்கொண்டு சிறிது தூரம் பிரயாணம் செய்துவிட்டுத் திரும்புவதென்று ஏற்பாடுசெய்து கொண்டனர். அதன்படி ராஜேஸ்வரியும் தியாகராஜனும் புறப்பட்டு விட்டார்கள். ஹேமவதி சீமாட்டி பல கடிதங்களை எழுதவேண்டி யிருந்ததால் தன் அறையில்போய் உட்கார்ந்து கொண்டாள். மதனவல்லிச் சீமாட்டியோ எப்போதுமே எங்கும் செல்லப் பிரியப்படாமல் தனியே இருக்க விரும்புவா ளாதலால் அவளுக்கென்று ஒதுக்கப்பட்ட அறையில் நாவல்களை வாசிக்க ஆரம்பித்தாள். ஆகவே தனியே விடப்பட்ட ஷண்பகவல்லி தோட்டத்தில் நுழைந்து தனி

யாக அமர்ந்து, துக்கத்துடன் தன்னைப் பற்றிய பல விஷயங்களையெல்லாம் சிந்திக்க ஆரம்பித்தாள். மோகனதாஸை அடியோடு மறந்துவிட வேண்டுமென அவள் நினைத்தாலும் அது சாத்தியப்படவில்லை. அவனுடைய ஞாபகமே அவளுக்கு அதிகமாக இருந்தது. ஆனால் அவள் மோகனதாஸ், நாடகக் கணிகையான ராஜலட்சுமியுடன் வசிக்கிறான் என்பதையும், ஹேமவதி அவன்மீது கூறிய புகார் உண்மையாக இருக்கலாமென்றும் இன்னமும் நம்பினாள். அவளுடைய சகோதரன் சந்திரசேகரம் பிரபு, அவள் மோகனதாஸைக் காதலிக்கிறாள் என்பதை அறியவில்லை. முன்பு ஒரு முறை அவன் மோகனதாஸைத் தன் சிற்றன்னையின் வீட்டுத் தோட்டத்தில் பார்த்தானென்றாலும் அவன் ஷண்பகவல்லியுடன் சந்தித்தது அவனுக்குத் தெரியாது. ஏதோ மதனவல்லியிடம் சமாதானம் சொல்லிக்கொள்ளவே வந்திருக்கிறானென நினைத்தான். ஆகவே ஷண்பகவல்லி மோகனதாஸை நேசிக்கிறாள் என்பது சந்திரசேகரனுக்குத் தெரியாது. அவளாகவும் அதை யாரிடமும் சொல்லிக்கொள்ளவில்லை. தன் சகோதரனுக்கும் தன் காதலனுக்குமிடையில் துப்பாக்கிச் சண்டை ஏற்பட்டது என்பதை அறிந்தபோதும், அதிலும் தன் சகோதரன் கையாலேயே தன் காதலன் மாண்டான் என்பதையும் கேள்விப்பட்டபோது அவள் அளவிலாத் துக்கமடைந்தாள். ஆனால் பிறகு அவன் மரணமடையவில்லையென்றும் பலத்த காயமடைந்து ஆஸ்பத்திரியில் சிகிச்சையில் இருப்பதாக கேள்விப்பட்டு அதிக சந்தோஷமடைந்து தினசரி அவனுடைய தேக நிலைமையை அறிவதற்காகப் பத்திரிகைகளைப் பார்த்து வந்தாள். அவனிடம் அவள் சில சந்தேகங்களைக் கொண்டாளென்றாலும் விரைவில் அவற்றை

நிவர்த்தி செய்துகொள்ளலா மென்றும், அவனை மணந்து கொள்வதால் மட்டுமே தனக்கு இன்ப வாழ்க்கை ஏற்படு மென்றும், தனக்காகவே அவன் சாகாமல் மீண்டானென் றும் பலவாறு நினைத்தாள்.

இவ்வாறு நினைத்துக்கொண்டே அவள் தோட்டத்தில் அமர்ந்த இடத்திலிருந்து எழுந்து தோட்டத்தைச் சுற்றியும் நடந்தாள். அப்போது மற்றொரு எண்ணமும் அவள் மனதில் தோன்றியது. அதாவது தியாகராஜன் ராஜேஸ்வரியை நேசிக் கிறான். ராஜேஸ்வரியும் அவனைக் காதலிக்கிறாள். ஆகவே அக்காதலர் இருவரும் தாங்கள் நினைக்கிறபடி பரஸ்பரம் இன் பம் நுகர்கின்றனர். ஆனால் தான் மட்டும தன் காதலனைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டே அழவேண்டியிருக்கிறது. தான் தினகரம் பிரபுவை மணந்துகொள்வது என்னும் யோசனையை யே அவள் வெறுத்தாள். அவனை மணந்துகொள்வதைவிட இறந்துபோவதே மேல் என்று அவள் நினைத்தாளென்றாலும் அதைத் தன் சித்தியிடம் சொல்லிக் கொள்ள முடியவில்லை. எனினும் தான் எப்படியாவது தினகரனை மணந்து கொள்வ தைத் தடுத்துவிட வேண்டுமென்று தன்னுள் நிச்சயித்தாள். இவ்வாறாகப் பலவாறு சிந்தித்துக்கொண்டே தோட்டத்தைச் சுற்றி நடந்து பிறகு ஒரு இடத்தில் அமர்ந்தாள். அவள் அன்று சுற்றிய இடங்களில்தான் அதற்கு முன் நாள் மாலை ஹேமவதி சீமாட்டியும் சந்திரசேகரம் பிரபுவும் சுற்றினார்கள். இதற்குள் சூரியன் மேற்கே அஸ்தமிக்கும் தருவாயில் இருந் தான். எங்கும் நிசப்தமா யிருந்தது. ஆனால் ஷண்பகவல்லி யின் மனம்மட்டும் நிம்மதியை அடையவில்லை. ஆகவே அவள் ஓரிடத்தில் உட்கார்ந்தவண்ணம், 'ஆ! என்னுடைய அதிர்ஷ் டம் சரியாக இல்லை. நான் இன்னும் பலவித துயரங்களை அனுபவிக்க வேண்டும் போலும்! ஆனால் சொற்பகாலம்

நான் எவ்வளவு சந்தோஷத்துடன் இன்பமாக இருந்தேன். அப்போது திடீரென்று இத்தகைய கஷ்டம் வருமென்று நான் நினைத்ததேயில்லை. ஆ! மோகனதாஸ் உன்னை நான் ஏன் நேசிக்கவேண்டும்? உன்னுடைய வஞ்சனையை நான் அறியும்படியான சந்தர்ப்பம் ஏன் ஏற்படவேண்டும்' என்று வாய்விட்டு அலறினாள்.

அப்போது, 'ஷண்பகவல்லி! அப்படி யொன்று மில்லை. எனக்கு வஞ்சனை, சூது என்பதே தெரியாது' என்று ஒரு ஆடவன் பதில் சொல்வதுபோல் கேட்டது. மறு நிமிஷமே மோகனதாஸ் ஷண்பகவல்லியின் முன் முழந்தாளிட்டுப் பணிந்து நிற்பதை அவள் கண்டாள். அதைக் கண்டதும் ஷண்பகவல்லி ஒன்று மறியாதவளாய்த் திக்பிரமை யடைந் தாள். உடனே தன் நிலைமையினின்றும் தெளிந்து அவ் விடத்தை விட்டுப்போய்விட எழுந்தாள். அச்சமயம் மோகன தாஸ் கெஞ்சும் தோரணையில், 'ஷண்பகவல்லி' போய் விடா தே. நான் சொல்வதைச் சிறிதுகேள். நான் வஞ்சனையும் சூதும் இல்லாதவன். எனக்கு ஒன்றுமே தெரியாது. கடவுள் சாட்சியாக நான் குற்றமற்றவன்' என்று முறையிட்டான். அவன் பேசியபோது அவன் உண்மையையே பேசுகிறான் என்று பிறர் அறியத்தக்க வண்ணம் அவனது தோற்றம் காணப்பட்டது. மேலும் அவன் தன்னுடைய நிலைமையைப் பற்றிச் சமாதானம் சொல்லிக் கொள்ளச் சாவகாசம் தர வேண்டியது அவசிய மல்லவா என்று அவளது புத்தியிற் பட்டது. அது மட்டுமா, மோகனதாஸின் அழகை நேரில் காணும் எவரும் அவனை விட்டுச் செல்ல மனந் துணியார். ஆதலின் ஷண்பகவல்லியும் அவனை விட்டுப் போய்விடத் துணியவில்லை. அவள் முகம் வெளுத்து விட்டது. மனம் குழப்பமடைந்தது. அவனுடன் பேசாமல் கௌரவத்தைக்

காப்பாற்றிக்கொள்ள வேண்டுமென நினைத்தாளாயினும் அவள் மனம் மட்டும் உருகியது.

அவளது நிலைமையை அறிந்த மோகனதாஸ், 'நான் சொல்லப்போவதை நீ கேள். அவ்வாறு கேட்டபின்னர் நீ ்ந்த எண்ணத்துடன் என்னை விட்டுப் பிரிந்தாலும் நான்மட்டும் உன்னுடைய நல்லெண்ணத்தையே என்னுடன் கொண்டு செல்வேன் என்பது நிச்சயம்' என்றான். அதைக் கேட்ட அவள், 'இதுவும் சாத்தியமாகக் கூடியதா? ஹேமவதி சீமாட்டி உன்னைப்பற்றி வெளியிட்டுள்ள புகாருக்கு நீ என்ன பதில் சொல்லப்போகிறாய்' என்று கேட்டதும் மோகனதாஸ், தன் சட்டையினின்றும் ஒரு ரிகார்ட்டை எடுத்து வைத்துக்கொண்டு, 'என்னுடைய கௌரவத்தைக் கெடுத்ததற்காக நான் அவள்மீது மானநஷ்ட வழக்கு தொடரப் போவதாக நோட்டீஸ் கொடுத்திருக்கிறேன் என்பது உனக்குத் தெரியுமா' இதை யெல்லாம் அவள் பிறரிடம் சொல்லிக் கொள்வாளா? ஷண்பகம்! அவள் செய்த அக்கிரமங்களைக் கேட்டாலல்லவோ?' என்று ஏதோ சொல்லி முடிப்பதற்குள் ஷண்பகவல்லி, 'இப்போது நான் சீமாட்டியின் வீட்டில் விருந்தாளியாகத் தங்கியிருப்பதால் அவளைப்பற்றி யாரேனும் அவதூறு கூறினால் அதை ருஜூப்பித்தாலொழிய நான் கேட்டுக்கொண்டிருப்பது சரியல்ல' என்றாள். அதற்கு அவன், 'நான் இந்த ரிகார்டை உன்னிடம் கொடுக்காததால் நீ அப்படி நினைக்கிறாய் போலும். இதைப் படித்துப்பார். இதிலுள்ள விஷயத்தைக் கண்டு நீ பிரமிக்கப்போகிறாய். உன்னைச் சேர்ந்த ஒருவரைப் பற்றியே நீ அறிந்து விசனப்படப்போகிறாய்' என்றதும் ஷண்பகம், 'ஆ! இன்னும் என்ன விதமான துக்கச் செய்தியை என்னிடம் சொல்லப் போகிறாய். யாரைப்பற்றி நான் அறிந்து விசனப்படவேண்டும். அதை

ஒளிக்காமல் சொல்லிவிடு' என்றாள். அதற்கு மோனதாஸ், 'உன் சகோதரன் சந்திரசேகரம் பிரபு, அந்த ஹேமவதி சீமாட்டியின் தூண்டுதலின்பேரிலேயே என்னை வலிய துப்பாக்கிச் சண்டைக்கு இழுத்தான்' என்றதும் அவள், 'ஆ, அப்படியா இதுவும் நான் செய்த பாவமா? அவ்வாறாயின் என் சகோதரன் சார்பில் நான் உனக்கு என் கடமையைத் தீர்க்கக்கட்டுப் பட்டவளாகிறேன்' என்று கூறிக் கண்ணீர் வடித்தாள்.

அப்போது மோகனதாஸ், 'நான் சொல்வது வெறும் பேச்சு என்று நினைக்கவேண்டாம். என்னிடம் அபிமானமுள்ளவனும், பெருந்தகையாளனுமான செல்வநாதர் இந்த சூழ்ச்சிகளையும் தந்திரங்களையும் கண்டுபிடித்தார். ஆனால் உனக்காக நான் உன் சகோதரனை மன்னித்து அவனது செயல் வெளியாகாதபடி மறைக்கவும் தயாராக இருக்கிறேன். அவன் அவ்வாறு நடந்து கொண்டதில் ஆச்சர்யமொன்றுமில்லை; ஹேமவதி தன் குற்றத்தை மறைத்துக் கொள்ளும்பொருட்டு என்னையே ஒழித்து விடுவதென்று தீர்மானித்தாள். உன் சகோதரன் அவளிடம் ஏமாந்து அவள் வார்த்தையில் மயங்கி அவளுக்கு ஏஜெண்டாக அமர்ந்தான்' என்று சொல்லி முடித்ததும், ஷண்பகவல்லி, 'ஆ, இதென்ன கொடுமை. அவள் மீது இத்தகைய அபாண்டம் சுமத்துகிறாயே' என்றாள். அப்போது மோகனதாஸ் தன் கையிலிருந்த ரிகார்டை அவளிடம் கொடுத்து, 'இதோ இதைப் படித்துப் பார். ஹேமவதி எளிதில் சமாதானத்துக்கு வாராமல் வழக்கு கோர்ட்டுக்குப் போகும்படி நடந்துகொண்டால் அப்போது அவளுக்கு விரோதமாகவும், எனக்குச் சாதகமாகவும் வரப்போகும் ஒரு சாட்சியினுடைய அறிக்கை இது,' என்றான். அவளும் அதை மேற்போக்காகப் படித்துப் பார்த்தாள்.

அதில் ஆதிமுதல் அந்தம்வரை எல்லா விஷயங்களும் விவரிக்கப்பட்டிருந்தன. நாகலாபுரம் ஜமீன்தார் வீட்டு விருந்தில் ஹேமவதி சீமாட்டி பாஞ்சால ராஜ குமாரரியைப் போல் வேடமணிந்து சந்திரசேகரனைச் சந்தித்ததும், பிறகு அவள் தன் கடிதத்தின் மூலம் அவனுக்குப் பணமனுப்பி மோகன தாஸாகிய எதிரியுடன் துப்பாக்கிச் சண்டைசெய்து அவனைக் கொல்லும்படி தூண்டியதும், ஹேமவதி சந்திரசேகரனை ஏமாற்றி ஆத்திர மூட்டியதும், அவளைப் பழிவாங்குவதற்காகச் சந்திரசேகரன் தன் நண்பனும், ஹேமவதியின் குமாரனுமாகிய தினகரம் பிரபுவின் மூலமே, முன்பு ஹேமவதி அணிந்து சென்ற பாஞ்சால இராஜ குமாரியினுடையதைப் போன்ற உடையை அபகரித்ததும் மற்றும் பல விஷயங்களும் உள்ளது உள்ளபடியே வரையப்பட்டிருந்ததைக் கண்டாள். அந்த அறிக்கையையே அவள் பலவித குழப்பமான எண்ணத்துடன் கூர்ந்து நோக்கினாள். தன்னுடைய சொந்தச் சகோதரனுடைய அயோக்கியத்தனம் விவரிக்கப்பட்ட கடிதம் கையில் இருப்பது கண்டு பிரமை யடைந்தாள். அவளுடைய உணர்ச்சிகளையெல்லாம் மோகனதாஸ் அவளது முகக் குறியிலிருந்தே அறிந்துகொண்டான். அவள் மனத்துய ரடைவதைக் கண்டு சகிக்காமல் அக் கடிதத்தை அவள் மேற்கொண்டு படிக்காதபடி வாங்கிக்கொண்டு விடலாமா என்றும் நினைத்தான். ஆயினும் தன் மீதுள்ள பழியை நீக்கிக்கொள்ள அதைத் தவிர வேறு வழியில்லை யாதலால் சிறிது நேரம் ஒன்றும் சொல்லாமல் நின்றிருந்தான்.

அவள் அந்த அறிக்கை முழுதும படித்து முடித்ததும், 'இந்த உண்மையை உனக்கு அறிவித்ததற்காக நீ என்னைத் தூற்றலாம். ஆயினும் என் நிலைமையை உனக்கு அறிவிக்க

வேறு வழியில்லையே. இதற்குமுன்பு நான் உன்னைக் கடைசி முறையாக எப்போது பார்த்தேனே அன்றுதான் உன் சகோதரனும் என்னை வலிய சண்டைக்கு இழுத்தான். நீயும் என்னுடன் பேசாமல் வீட்டுக்குள் நுழைந்து விட்டாய். அநியாயமாக என்மீது நீ சந்தேகங்கொண்டிருக்கிருய் என்பதை நான் உணர்ந்து கொண்டேன்' என்றுன். அப்போது ஷண்பகவல்லி கண்ணீர் வடித்துக்கொண்டே 'ஓ, மோகனதாஸரே! என் சகோதரனின் மீது எவ்வளவு அதிகமான மனஸ்தாபத்தையும் கொள்ள உனக்குக் காரணமிருக்கிறது. ஹேமவதி சீமாட்டி மிகவும் கெட்டவளாதலால் தான் உன்னைப்பற்றிப் பழிகூறியதுடன் உன்னைக் கொல்லவும் முயற்சித்தாள். ஆயினும் நான், முன்பு எனக்கு உன்னிடமிருந்த பூரண அன்பையோ, நம்பிக்கையையோ காண்பிக்க முடியாததற்கு வருந்துகிறேன்' என்றுள். அதைக்கேட்டு அவன் அதிக வருத்தமடைந்தானென்றுலும் அதை வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல் மிக்க பெருந்தன்மையான முறையில், ஷண்பகவல்லியே! நான் இப்போது உன்னைச் சந்தித்ததும் ஆரம்பத்திலேயே, நாம் எவ்வாறு பிரிந்தாலும், உன்னுடைய நல்லெண்ணத்தை மட்டும் பெற்றுக்கொண்டே திரும்புவேன் என்று சொன்னது ஞாபக மிருக்கிறதல்லவா? சொற்ப காலத்துக்கு முன்பு நீ என்னைக் கௌரவித்தாய், புகழ்ந்தாய், கொண்டாடினுய், மனமார நேசிப்பதாகச் சொன்னுய். நானும் அதெல்லாம் உண்மைதா னென்று நம்பினேன். ஆனுல் என்னைப்பற்றி ஏதோ ஒரு தவறுன செய்தி வெளிப்பட்டதால் நீ வெறுப்படைந்ததில் ஆச்சர்யமொன்றுமில்லை. இப்போது நான் என்னுடைய குற்றமற்ற நிலைமையை ருஜுப்பித்து விட்டபடியால் நீ பழையபடி என்னை நேசிக்கக் கடமைப்பட்டிருக்கிருய். ஆனுல், இந்த இடைக்காலத்தில் நீ என்னை முன்பு நேசித்ததற்காக வருந்தியிருந்தாலும் இப்போது அந்த அன்

யைத் திரும்பிப்பெற எனக்கு உரிமை இருக்கிறது. ஆனால் உன் நலத்துக்காக நான் எப்படிப்பட்ட தியாகத்தையும் செய்யத் தயாராக இருப்பதால் நீ இஷ்டப்படவில்லை யென்றால் உன்னையும் துறக்கத் தயாராகத்தான் இருக்கிறேன்' எனக் கூறிக்கொண்டே அவ்விடத்தை விட்டுச் செல்லப் புறப்பட்டான்.

அப்போது ஷண்பகவல்லி அழுதுகொண்டே இருந்தபடியால் தன் கண்ணீரைத் துடைத்த வண்ணம், 'மோகனதாஸரே, நாம் இவ்வாறு ஒருவரையொருவர்பிரியலாகாது. இப்போது நீ என்மீது குற்றம் சுமத்துகிறாய். ஆனால் நான்கொண்டுள்ள நிலைமைக்குக் காரணமிருக்கிற தென்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்,' என்று கூறியதும், வேகமாகச் செல்லப் புறப்பட்ட மோகனதாஸ் திரும்பிப் பார்த்து ஷண்பகவல்லியின் எதிரில் வந்து நின்றான். அப்போது ஷண்பகம், 'ஹேமவதி சீமாட்டி உன்னைப் பற்றிக் கூறிய அவதூறு மட்டும் எனது வெறுப்புக்குக் காரணமாக இருப்பின் நீ இப்போது சொன்னகாரணத்தால் நான் திருப்தியடைந்துவிட்டிருப்பேன். ஆனால் மற்றொரு விஷயத்துக்கும் உன்னிடமிருந்து சமாதானம் தெரிந்துகொள்ளவேண்டியிருக்கிறது. அதாவது ஹேமவதி சீமாட்டி உன்னைப்பற்றித் தவறான புகாரை என் சித்தியிடம் சொன்னதும், எனக்கு உன்னிடமிருந்த அளவிலா அன்பின்காரணமாக நேரில் உன்னிடமிருந்தே சமாதானம் தெரிந்துகொள்ள வேண்டுமென்னும் எண்ணத்துடன் அன்றுமாலையே யாருக்கும் தெரியாமல் என் வீட்டிலிருந்து உன் இருப்பிடத்துக்கு வரப் புறப்பட்டேன்; என்று சொல்லி முடிப்பதற்குள், அச் சொற்களைக் கேட்டுச் சந்தோஷமும் நம்பிக்கையும் கொண்ட மோகனதாஸ், 'ஆ!

இப்படியா செய்தாய்! ஓ, அப்படியானால் நீ உண்மையிலேயே என்னை நேசித்தாய் என்பதில் எத்தகைய ஆட்சேபமுமில்லை. அவ்வாறாயின் நீ ஏன் என் வீட்டுக்கு வந்திருக்கக்கூடாது; வந்தவள் ஏன் திரும்பிவிட்டாய்? நீ வந்து என்னுடன் பேசி விட்டிருந்தால் இந்தத் துன்பங்களெல்லாம் ஏற்பட்டிராதல்லவா? என்று ஆர்வத்துடன் கேட்டான். அவன் சந்தோஷத்துடன் பேசியதால் அவன் முகத்தில் வீசிய ஒளியால் அவனது அழகு அதிகப்பட்டது. அவ்வழகைக் கண்டு ஷண்பகவல்லி ஆச்சர்ய மடைந்தாளென்றாலும், அன்று அவனுடைய வீட்டுக்குப் போனபோது அவள் கேட்ட சத்தமும் கண்ட விசேஷமும் அவளது மனதைவிட்டு அகலவில்லையாதலால் அப்போதும் அவன் ஏதோ வஞ்சிக்கிறான் என நினைத்து ஆத்திரப்பட்டாள். எனினும் அவள் பொறுமையுடன், 'அன்று இரவு நான் திரும்பி வந்துவிடவில்லை. வழியிலும் எங்கும் எதற்கும் பயப்படவில்லை. பிடிவாதத்துடன் உன் வீட்டுக்கு வந்தேன். வீட்டின் முன் உள்ள தோட்டத்தில் நுழைந்தேன். வீட்டின் வெளிவாயிற் கதவும் திறக்கப்பட்டிருந்தது. வீட்டில் இருவர் பேசுவது என்காதில் விழுந்தது. பிறகு நான் பார்த்ததிலிருந்தும் நீ என்னைத்தவிர வேறு யாரையும் மனத்தாலும் நினைத்ததில்லை என்று சொன்னதில் சந்தேகம் ஏற்பட்டுவிட்டது' என்று கூறியதும் அவன் ஏதோ சந்தேகமாக இருந்த விஷயத்தை அறிந்து கொண்டு விட்டவன்போல் தெளிவடைந்து, 'ஆ! நான் விஷயத்தைத் தெரிந்துகொண்டு விட்டேன். நீ தவறுதலாக விஷயத்தை நிச்சயித்துக் கொண்டாய். ஷண்பகம்! நீ கேட்டதும் பார்த்ததும் ராஜலட்சுமியைத்தான். அவள் எனது அன்பார்ந்த சகோதரியாயிற்றே' என்றான்.

உடனே ஷண்பகவல்லியின் வாயினின்றும் ஒரு வித

மான பயங்கரக் கூச்சல் கிளம்பியது. அவளும் எதிரில் நின்றிருந்த மோகனதாஸின் கரத்தில் சாய்ந்தாள். 'என தன்புள்ள மோகனதாஸே! என்னைத்தயவுசெய்து மன்னித்துவிடு' என்று அழுதாள். எத்தகைய அபவாதம் பாருங்கள்! பாவம் சகோதரியைக்கண்டு காதலி என்று நினைத்து விட்டாள். இப்படித்தான் எத்தனையோ விதமான தவறுகள் வாழ்க்கையில் நிகழ்கின்றன. சிறிது அவசரத்தாலும், நிதானபுத்தியின்மையாலும் ஏற்படும் தவறுகளால் எவ்வளவு மகத்தான கஷ்டங்கள் விளைகின்றன. 'ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு' என்பது போல ஷண்பகம் ஆத்திரப்பட்டு ஒருவித முடிவுக்கு வந்து சகோதரியைக் காதலி என்று நினைத்து விட்டதால் தானே பின்னர் இவ்வளவு கஷ்டங்களும் நிகழவேண்டியதாயிற்று ஆதலன் நாம் ஒவ்வொருவரும் நமது வாழ்க்கையில் சர்வஜாக்கிரதையுடன் இருக்கவேண்டும். ஆத்திரம் அல்லது அவசரம் என்பது நமது அகராதியினின்றும் ஒழிதல் வேண்டும்.

63-வது அத்தியாயம்

—:(o):—

மோகனதாஸின் வரலாறு.

உலகத்தில் எத்தனையோ விதமான இன்பங்கள் இருக்கின்றன. அவரவர்களுக்கு எந்த இன்பத்தில் பிரியமோ அந்த இன்பம் கிடைக்கும்போது அவர்கள் அடையும் உள்ள நெகிழ்ச்சியை என்னென்று கூறுவது! ஆயினும் எல்லாவகை இன்பத்தையும்விட காதலர் இருவர் தமக்குள் ஏற்பட்ட மனஸ்தாபம் நீங்கி மீண்டும் ஒன்று கூடும்போது ஏற்படும்

ஆனந்தத்துக்குப் பின் வாங்கியதுதான். ஆகவே, ஷண்பக வல்லி தன் காதலன்மீதுகொண்ட சந்தேகம் நிவர்த்தியாகும் படியான ஒரு சொல் கேட்டதும் அளவிலா மகிழ்ச்சியடைந் தாள். தன் மனமார்ந்த காதலனைத்தான் வெறுக்க இனி எத் தகைய காரணமுமில்லை யென்பதை உணர்ந்தாள். மோகன தாஸும் இழந்த புதையலை கிடைக்கப்பெற்றவனே போல் சந்தோஷமடைந்து தன் கரத்தில் வீழ்ந்த அவ் விலையிலா மாணிக்கமாகிய காதலியைப் பலமுறை இறுகத் தழுவிக் கொண்டதுடன் அவளுடைய கன்னங்களிலும், உதடுகளி லும், நெற்றியிலும் முத்தங்களால் நிரப்பிவிட்டான். பிறகு அவன் அங்கிருந்த ஒரு பெஞ்சியின்மீது உட்கார்ந்துகொண்டு அவளையும் தன் பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டு அவ ளது இரு கரங்களைவும் தன் கரத்தால் பிடித்துக்கொண்ட வண்ணம் அவளது முகத்தை அன்புடனும் ஆர்வத்துடனும் கூர்ந்து நோக்கினான். பல நிமிஷங்கள்வரை அவர்களிரு வரும் மௌனத்துடன் ஒருவரையொருவர் பார்த்துக்கொண் டனர். அப்போது அவர்கள் உள்ளத்தில் சந்தோஷ ஒளி பிர காசித்தது. ஏதேனும் பேசினால்கூட அச் சந்தோஷம் குறைந்து விடுமோ என்று நினைத்தனர். மோகனதாஸின் கன்னங்களிலும், ஷண்பகவல்லியின் கண்களிலும் அன்பு பிரகாசித்தது. மோகனதாஸின் வாழ்விலேயே அன்று தான் அதிக இன்பமான நாளாகத் தோன்றியது.

சொற்ப நேரத்துக்குப் பின்னர், ஷண்பகவல்லி முதலில் பேச ஆரம்பித்து, 'ஆ! என்ன கொடுமை, உன் விஷயத்தில் நான் எவ்வளவு அக்கிரமமாக நடந்து கொண்டு விட்டேன். 'நீ எனது சித்தி வீட்டுத் தோட்டத்தில் என்னைச் சந்தித்த போதே நீ கூறவந்த சமாதானத்தைக் கேட்டுவிட்டிருந்தால் நம் இருவருக்குமே இவ்வளவு கஷ்டங்கள் அனுவசியமாக

நேர்கிராதல்லவா?' என்ருள். அப்போது மோகன்தாஸ் அவளது காத்தைத் தன் உதட்டின்மீது வைத்து அழுத்திக் கொண்டே, 'கண்மணி! இப்போது நீ உன்னைச் சபித்துக் கொள்ள வேண்டாம். இந்த நிமிஷத்தில் நான் அனுபவிக்கும் இன்பத்துக்கு முன் இதற்கு முன் நேர்ந்த கஷ்டங்களெல் லாம் எம் மாத்திரம்! நாம் பரஸ்பரம் தூஷித்துக் கொள்ள வேண்டாம். காலபலனை எவரும் அனுபவித்துத் தான் ஆக வேண்டும். சமீபத்தில் நமக்கு நல்லகாலம் வரப்போகிறது. நான் அதிக துக்கத்துடன் இருந்தபோதும் என்னைத் தேற் றுவதற்கு அருகில் ஆட்களிருந்தார்கள். அழகிலும் குணத் திலும் லட்சுமியாக விளங்கும் ராஜலட்சுமி, என் சகோதரி சதா காலமும் என் அருகிலேயே இருந்து எனக்கு வேண்டிய உபசரணைகளைச் செய்து வந்தாள். அதுபோலவே தாராள நோக்கமும், தயாளகுணமும் மிக்க செல்வநாதர் என் தேவை களைத் தக்கபடி கவனித்து வந்தார். அவர் உனக்கும் தெரி யும். நீயும் அவரைப் பார்த்திருக்கிருய். அவரும் உன்னைப் பற்றி நல்லெண்ணமே கொண்டிருக்கிருர். நம்முடைய இரக சியக் காதல் சமாசாரம் அவருக்குத் தெரியும். அவர் ஏதோ திட்டம்போட்டு இவ்விஷயத்தில் வேலை செய்துதான் வந் தார். நான் இவ்விஷயத்தில் கவலைப்பட வேண்டியதில்லை யென்றும், நீ எப்படியாவது என்னிடம் சேர்வாய் என்றும் அவர் சொல்லித் தைரியமூட்டி வந்தார்' என்று கூறினுன்.

அப்போது அவளும், 'ஆம்; நான் உன்னைச் சேர்ந்த வளே. அதில் சந்தேக மொன்றுமில்லை' என்று கூறிக் கொண்டே அதிக ஆத்திரத்துடன், 'மகா பொல்லாதவளாகிய ஹேமவதி சீமாட்டியின் மகனுக்காக நான் உன்னைத் துறப் பேனு?' என்ருள். அவனும் 'நீ கேவலம் அவனுக்காக என் னைத் துறக்கவேண்டியதில்லை யென்றுதான் அனுதாபியான

செல்வநாதரும் கூறுகிறார், அவர் தக்க ஆதாரமின்றி எதையும் அவசரப்பட்டுச்சொல்லிவிடமாட்டார், 'என்றதும் ஷண்பகம்' 'ஆம், அவர் என் சிற்றப்பனான மனோகரம் பிரபுவின் தோழராதலால் இவ்விஷயத்தில் அவர் தலையிடும்படிசெய்து வெற்றி கொள்ள நினைத்தார்போலிருக்கிறது' என்றாள். மோகனதாஸனும், 'ஆம்; அப்படியும் இருக்கலாம். எனக்கு உடம்பு சொஸ்தமானதும் நான் எப்படியாவது ஒருமுறை உன்னைச் சந்தித்துப் பேசவேண்டும் என்று விரும்பினேன். அவரும் அப்படியே யோசனை சொன்னார். இதற்குள் நீயும், உன்சித்தியும், சகோதரனும் இங்கு வந்திருக்கிறீர்களென்று எப்படியோ அவருக்குச் செய்தி எட்டியதும் என்னைப் போகும்படி தூண்டினார். தற்செயலாக மிதுனபுரியைச் சேர்ந்த ஒரு இளைஞன் எனக்குச் சினேகமானான். அவனுடைய துணை கொண்டுதான் நேற்று மாலை இங்குவந்து இந்த இடத்தையெல்லாம் சுற்றிப் பார்த்தேன். நீ எப்போதாவது தனியாகத் தோட்டத்தில் வந்தால் உன்னைச் சந்திக்கமுடியுமா என்றும் யோசித்தேன். அந்த எண்ணத்துடன்தான் இன்றுகாலை மறுபடியும் இங்குவந்தேன். என் எண்ணம் வீணாகவில்லை. ஹேமவதி சீமாட்டியின் சூழ்ச்சியும் வஞ்சனையும் உனக்குத்தெரிந்துவிட்டதென்பதை நீ அவளிடம் காண்பித்துக்கொள்ள வேண்டாம், இந்தக்கட்டளை அந்தப்பெரியார் செல்வநாதருடையது என்பது உன் ஞாபகத்தில் இருக்கட்டும். இதற்குக் காரணம் என்ன என்பது எனக்குத் தெரியாதாயினும் அவர் ஏதோ தக்க காரணத்துடன் தான் இப்படிச் சொல்லியிருப்பாரென்பது மட்டும் நிச்சயம். ஹேமவதி சீமாட்டி கோர்ட்டுக்குப் போகும்படி வைத்துக் கொள்ள மாட்டாள் என்று அவர் நினைக்கிறார். அப்படிப் போகும்படியான நிலைமை ஏற்பட்டா

னும் அவர் உன் சகோதரன்மீது அதிகபழி ஏற்படாதபடி காப்பாற்றுவார் என்ருன்.

அப்போது அவள் அழுதுகொண்டே, 'ஓ, மோகனதாஸ் அவனை நான் என் சகோதரன் என்று இனி பாவிக்கவே மாட்டேன், சகோதரனுகவே இருந்தாலும் அவனை மன்னிக்கும்படி கேட்பது நியாயமாகாது' என்ருள். அதற்கு அவன் 'எனதன்புள்ள கண்மணியே! நானுக அவனை மன்னித்தால் அதை மறுத்துக்கூற உன்னுல் முடியாது. ஆனுல் ஹேமவதி சீமாட்டி, மதனவல்லிக்கும் உனக்கும் அழைப்பு அனுப்பியதில் சந்திரசேகரனையும் சேர்த்துக் கொண்டதில் ஆச்சர்யமொன்றுமில்லை' என்றதும் அவள், 'முந்தாநாள் கூட நாங்கள் இங்குவந்து சேர்ந்த சொற்ப நேரத்துக்கெல்லாம் சந்திர சேகரனும், ஹேமவதி சீமாட்டியும் தனியாகத் தோட்டத்தில் உலாவச்சென்றனர். நேற்று காலையில்தான் சந்திரசேகரனும் திடீரென்று இரத்தினபுரிக்குப் புறப்பட்டான்,' என்று தெரிவித்தாள். அப்போது அவன், 'மீண்டும் ஹேமவதியின் வேலையாகத்தான் அவன் சென்றிருக்க வேண்டும். பெரும்பாலும் இந்த வழக்கு சம்பந்தமான வேலையில்தான் ஈடுபட்டிருப்பானென நினைக்கிறேன்; எனினும் அவன் செய்யப்போகும் வேலையை நமது செல்வநாதர் எப்படியாவது தெரிந்துகொண்டு விடுவார் என்பதுமட்டும் நிச்சயம். இப்போது நான் உன்னிடம் கொடுத்த அறிக்கையில் கையெழுத்துப் போட்டிருக்கும் ஆசாமி செல்வநாதர் கொடுக்கும் சம்பளம் பெற்று வந்தாலும் உன் தம்பிக்குமட்டும் செல்வநாதர் எத்தகைய தீங்கையும் செய்யமாட்டார். அவர் மிகவும் நல்லவர்; என்று கூறினுன்.

அதைக்கேட்ட அவள், 'அவரிடம் நீ அவ்வளவு நம்பிக்கையுடையவனுய் இருப்பதால் நானும் அவ்வாறே நம்பிக்கை

கொள்ளுகிறேன். அவராக ஒருநாள் நாடகக் கொட்டகையில் எங்களிடம் வந்து தன்னை அறிமுகம் செய்வித்துக் கொண்ட போது என்சகோதரன் அவரை அலட்சியமாகவும் குறும்பாக வும் நடத்தினன். நான் மட்டும் மரியாதையாகவே நடத்தினேன்' என்றதும் மோகனதாஸ், 'அவர் உன் னுடைய பெருந் தன்மையையும் நல்ல குணத்தையும் தெரிந்து கொள்ளத் தவறவில்லை' என்றான். பிறகு அவள், 'அழகிற் சிறந்தவளும், ஆடலிலும் பாடலி லும் நிபுணத்வம் வாய்ந்தவளும், கண்டோர் மனதை வசீ கரிக்கத் தக்க தோற்றமுடையவளுமான ராஜலட்சுமி உன் சகோதரியா ?' என்று கேட்க, மோகனதாஸ், 'ஆம்; என் சகோதரியே யாவாள். அவளைச் சகோதரியாகப் பெற்றதில் நான் ஒருவித பெருமையையே அடைகிறேன். நாங்கள் இரு வரும் பரஸ்பரம் சகோதரர்களைப்போல் காணப்படவில்லை யென்றாலும் என் சகோதரி கற்பிற் சிறந்தவள். அவளே கற் பின் அவதாரமென்று கூறலாம். நாடக உலகிலுள்ள ஒருத்தி கற்புடையவள் என்றால் எல்லாரும் எளிதில் நம்பிவிட மாட் டார்கள். ஷண்பகம்! நீ எங்கள் வீட்டு வாயில்வரை வந்த அன்று இரவு வீட்டில் நுழைந்து பார்த்திருந்தால் அவள் முகத்தின் ஒளியிலிருந்தே அவள் எத்தகைய உத்தமி என் பதைத் தெரிந்துகொண்டிருக்கலாம். அவள் நல்ல அந்தஸ் தோடு கூடிய இடத்தில் வளர்ந்தவள். நீயும் அவளை நாடக மேடையில் பார்த்திருக்கிறாயல்லவா? எப்போதாவது அவள் எந்த ஆடவனையேனும் அநாவசியமாகவும், கெட்ட எண்ணத் துடன் பார்த்ததை நீ கண்டிருக்கிறாயா? என்று கேட்டான்.

அதற்கு ஷண்பகவல்லி, 'இல்லவே இல்லை. மேலும் ராஜலட்சுமி கற்பில் சிறந்தவள் என்னும் பெயர் உலகப் பிர சித்தமாய் இருக்கிறது. ஆனால் ஏதோ அசந்தர்ப்பத்தால்

உனக்கும் அவளுக்கும் அபவாதம் தரத்தக்க முறையில் நான் சந்தேகம் கொண்டேன் என்பதை இப்போது அறிந்ததும் என் மனம் என்ன பாடுபட்டது தெரியுமா? அவளுக்கும் நம்முடைய இரகசியம் தெரியுமோ? தெரிந்திருக்கலாம். இதை நீ அவளிடம் சொல்லிக் கொண்டிருப்பதில் ஆச்சர்ய மொன்றுமில்லை?' என்று கூறியதும், மோகனதாஸ், 'அப்படி யொன்று மில்லை. உனக்கு இவ்விஷயத்தில் அனுமதி கிடைக்கும்வரை அதை என் சகோதரியிடத்திலும் கூடச் சொல்ல லாகாதென்றுதான் அதை என் இரகசிய மல்லாமல் உன் இரகசியமாகவே கொண்டு யாரிடமும் சொல்லாமலிருந்தேன். ஆனால் துப்பாக்கிச்சண்டை ஏற்பட்ட சமயத்தில் அது வெளிப்பட வேண்டிய அவசியம் நேரிட்டு விட்டது. துப்பாக்கிச் சண்டை ஏற்பட்டிராவிட்டால் நீயாக அதை வெளியில் சொல்லலாமென்று அனுமதி கொடுக்கும்வரை எங்கும் வெளியிட்டிருக்க மாட்டேன்,' என்றான். அதற்கு அவள், 'நீ அதிக நிதானஸ்தன், பெருந்தன்மையும் நிதானமுமுடையவன், நற்குணங்க ளனைத்தும் ஒருங்கே உன்னிடம் அமைந்திருக்கின்றன' என்று அவனைப் பாராட்டியவண்ணம் அவனது முகத்தை அன்பு கனிந்த பார்வையுடன் பார்த்தாள்.

அப்போது மோகனதாஸ் மேலும் பேசத்தொடங்கி, 'துப்பாக்கிச் சண்டை போடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டபோது நான் மரணத்தையே வரவேற்பவன்போன்ற நிலைமையில் இருந்தபடியால் நான் சில கடிதங்களை எழுதிவைத்து, நான் சண்டையில் இறந்து விடுவேனாயின் அக்கடிதங்களை அந்தந்த விலாசதாருக்குக் கொடுத்துவிட வேண்டுமெனக் குறிப்பிட்டிருந்தேன். அதில் உனக்கும் ஒன்று எழுதியிருந்தேன். உனக்கு எழுதியகடிதத்தில் நான் குற்றமற்றவனென்

றும், எனக்கு உன்பால் அளவிலா அன்பு இருப்பதாகவும், உன்னிடம் அத்தகைய காதல் கொண்டிருந்த என்னை எப்போதாவது சிந்திக்க வேண்டு மென்றும் எழுதியிருந்தேன்' என்று சொல்லி முடித்ததும் ஷண்பகவல்லி, 'ஆ! காதல! நீ என்ன கஷ்டங்களை அடைந்தாய்! என்று கூறிக்கொண்டே கூச்சத்தையும் விட்டுத் தானாகவே குனிந்து அவனது கன்னத்தில் ஒரு முத்தம் கொடுத்தாள். ஆனால் அவள் முத்தங் கொடுத்தபின் தன் முகத்தை அப்புறப்படுத்திய போது அவனுடைய கன்னத்தில் அவளது கண்ணீரும் ஒரு சொட்டு விழுந்திருந்தது. அப்போது அவன், 'என் கண்மணியே! நீயாக வெட்கத்தையும் விட்டு ஒரு முத்தம் தந்தாயே. அதுவே என் கஷ்டங்களுக்குக்கெல்லாம் பரிகாரமாக இல்லையா? மேலும் என் விஷயத்தைச் சொல்லுகிறேன். மற்றொரு கடிதம் என் சகோதரி ராஜலட்சுமிக்கு எழுதிவைத்தேன். அதில் அவளிடம் பிரிந்து செல்வதற்கு உத்தரவு கேட்டிருந்தேன். மூன்றாவது கடிதம் செல்வநாதருக்கு எழுதிவைத்திருந்தேன். அதில் துப்பாக்கிச் சண்டை ஏற்பட்டதன் காரணத்தையும், உன்னிடம் எனக்குண்டான காதலையும், தெரிவித்து நான் இறந்துவிட்டால் உனக்காக எழுதிய கடிதத்தை நேரில் கொண்டுபோய்க் கொடுக்கும்படியும் எழுதியிருந்தேன். நான் செத்திருந்தால் அவரே உன்னை நேரில் சந்தித்து என் குணதிசயத்தைப் பற்றிச் சொல்லி யிருப்பார். நான் காயமடைந்து ஆஸ்பத்திரியில் மூர்ச்சையடைந்து கிடந்தபோது 'அவர் இக் கடிதங்களை யெல்லாம் பார்த்து நமது விஷயத்தை அறிந்து கொண்டுவிட்டார்,' என்று விவரமாகத் தெரிவித்தான்.

அப்போது அவள், 'அப்படியானால் அவர் ஏன் அக்கடிதத்தை என்னிடம் கொண்டுவந்து கொடுக்கவில்லை' என்று கேட்டதற்கு அவன், 'நான் துப்பாக்கிச் சண்டையில்

இறந்துவிட்டால் அக்கடிதம் உன்னிடம் சேர்ப்பிக்கப்பட வேண்டும் என்று அக்கவரின்மீது எழுதியிருந்தேன். ஆதலால் அவர் அதை உன்னிடம் கொடுக்கவில்லை.' என்றதும் அழகிலும் குணத்திலும் நிகரற்ற அவள், ',ஐயோ! அந்தத் துயரமும் ஏற்பட்டிருந்தாலோ' என்று சொன்னபோது அவளுடைய தேகம் முழுதும் அச்சத்தால் நடுங்கியது. அப்போது மோகனதாஸ், 'என் அன்பே! உன்னுடைய நேசத்தையும் அனுதாபத்தையும் பெறவே நான் உயிர் தப்பினேன்' என்று கூறிக்கொண்டே அவளை மீண்டும் மார்புறத் தழுவிக் கொண்டு, 'நீ மாளிகையைவிட்டு வெளியே வந்து நீண்டநேரமாகிவிட வில்லையா? யாரேனும் உன்னைத் தேடினால் என்ன செய்வது? நாம் இருவரும் இங்கிருப்பதை யாரேனும் அறிந்தால் கஷ்டமல்லவா?' என்று பரிந்து பேசினன். அதற்கு அவள், 'இல்லை. யாரும் தேடிக்கொண்டு வரமாட்டார்கள். என் சித்தி இப்போது வெளியே வரவே மாட்டாள். ராஜேஸ்வரியோ இவ்வூரைச் சேர்ந்த ஒரு தனவந்தனுடன் வெளியே சுற்றப்போயிருக்கிருள். ஹேமவதி சீமாட்டியும் பல மணி நேரம்வரை கடிதம் எழுத வேண்டிய வேலை இருக்கிறதெனத் தெரிவித்தாள்' என்று கூறினள்.

அதைக் கேட்ட அவன், 'அப்படியானல் நாம் இன்னும் அரைமணி நேரம் வரை இங்கேயேயிருந்து பரஸ்பரம் உறவாடலாம் அல்லவா? நான் எனது சகோதரி ராஜலட்சுமி சம்பந்தமான சில விஷயங்களைச் சொல்லுகிறேன் கேள். இப்போதுதான் எத்தகைய சந்தேகமுமில்லாமல் பூரண நம்பிக்கையுடன் எல்லாவற்றையும் சொல்லலாம்,' என்று சொன்னன். அதற்கு அவள், 'அப்படியே ஆகட்டும். நான் மிக்க கவனத்துடன் கேட்கிறேன். உன் சம்பந்தப்பட்ட விஷயங்க

ளெல்லாம் இனி எனக்கும் சேர்ந்தவை தானே. நீ ஏதேனும் துயரங்களைச் சொல்லிக்கொண்டால் நானும் துக்கப்படுவேன். அல்லது நீ ஏதேனும் சந்தோஷச் செய்திகளைத் தெரிவித்துக் கொண்டால் நானும் உன்னுடன் சந்தோஷப் படுவேன்! என்றாள்.

அப்போது மோகனதாஸ், 'எனதன்புள்ள ஷண்பகம்! நான் ஓர் உயர்தர அல்லது பணக்காரக் குடும்பத்தில் பிறந்தவனென்று நீ எதிர்பார்க்க வேண்டாம். நீ அன்று முதல் முதலில் என் நேசத்தை ஒப்புக் கொள்வதாகச் சொன்னபோதே ராஜலட்சுமி என் சகோதரி என்பதைச் சொல்லிவிடலாமென நினைத்தேன். ஆனால் அவ்வாறு சொல்வதால் எனது பெருமைக்கு ஏதேனும் பங்கம்வரும் என்று நினைத்தே சும்மா இருந்து விட்டேன். ஆனால் நீ சாதாரண சம்பிரதாயங்களுக்கும் பழக்க வழக்கங்களுக்கும் கட்டுப்பட்டவளல்ல என்பதை நான் பின்னரே அறிந்து கொண்டேன். எனினும் நான் என் வரலாற்றைச் சொல்கிறேன் கேள். எனது பெற்றோர்கள் சாதாரண தெருக் கூத்தாடும் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள். எனது தாயார் நல்லகுடும்பத்தில் பிறந்தவளாயினும் சாதாரண ஏழை குமாஸ்தாவாகயிருந்த என் தந்தையை மணந்துகொண்டதால் அவளுடைய பந்துக்கள் அவளைத் திரஸ்கரித்து விட்டனர். எனினும் எனது தாயும் தந்தையும் ஒற்றுமையுடனும் அன்புடனும் வாழ்ந்து வந்தார்கள். நான் என் சகோதரி ராஜலட்சுமியைவிட ஒரு வயது மூத்தவன். அவள் குழந்தையாயிருக்கும் போதும் மிக அழகுள்ளவளாக இருந்தாள். அப்படிப்பட்ட அழகிய ஒருபெண்ணைப் பெற்றதையே என் பெற்றோர்கள் இன்பமாகக் கருதினார்கள். என் பெற்றோர்கள், எங்களிடம் அதிக அன்புடனும் ஆர்வத்துடனும் இருந்தார்கள். என் தந்தை பணவிஷயத்தில் மிக அலட்சியமாக இருந்

தாலும், உபாய வரும்படியை யுடையவராக இருந்தாலும் விரைவில் கடன் ஏற்பட்டுக் கடன்காரர் தொந்திரவு பொறுக்க முடியாமல் தன் மனைவியுடன் தன் சொந்த ஊரை விட்டுப் போய்விட்டார். போன இடத்தில் எத்தகைய வேலையும் அகப்படாமல் திண்டாடியதன் மீது தெருக்கூத்து நடிக்கும் கோஷ்டியில் கலந்துகொண்டார். எனது தாயும் தகப்பனும் அழகுடையவர்களாகவும், பார்வைக்கு வசீகரத் தோற்றமு டையவர்களாகவும் இருந்ததால் அக்கோஷ்டியினர் இவர்களை அதிக ஆர்வத்துடன் சேர்த்துக்கொண்டனர். என் தாய், வறுமையிலும், சாதாரண ஜனங்கள் அடங்கியகோஷ்டியிலும் இருந்தாளாயினும், அவள் அழகைக் கண்டு பலர் அவள்மீது ஆசைப்படக் காரணமிருந்தும் அவள் இறுதிவரை கற்புடன் பரிசுத்தமாக விளங்கினாள் என்பதைப் பெருமையுடன் சொல் லிக் கொள்கிறேன். என் தாயார் சிறிது கல்வி கற்றவளாத லால் அவளுக்கு ஓய்வு ஏற்பட்ட போதெல்லாம் எனக்கும் ராஜலட்சுமிக்கும் படிப்பு சொல்லிக் கொடுத்து வந்தாள்.

எனக்கு எட்டாவது வயதில் என் தாயார் இறந்து விட் டாள். அவள் இறந்தபோது நான் அடைந்த துக்கம் இப்போ தும் எனக்கு ஞாபகத்துக்கு வருகிறது. என் தந்தையும் ஆற் றாத துயரமுடையவராய் வருத்தப்பட்டுச் சொற்பகாலம் தன் தொழிலிலும் ஈடுபடாமல் இருந்தார். இதனாலெல்லாம் எங் கள் குடும்பத்துக்கு இன்னும் அதிகமான கஷ்டங்கள் ஏற்பட லாயின. ஆகவே என் தந்தை துக்கத்தைப் பொறுத்துக் கொண்டு தெருக் கூத்தில் ஈடுபடவேண்டிய தாயிற்று. பெரிய நகரமொன்றில் கூத்தாடியபோது அன்னிய நாட்டார் ஒருவர் எனது தந்தையின் திறமையைப் பார்த்துப் பாராட்டித் தன்னுடன் வந்தால் அதிக வருவாய் பெறும்படி செய்வதா கவும், என் தந்தைக்கும் எங்களுக்கும் பிரயாணச் செலவு

முதலியவற்றைக் கொடுப்பதாகவும் ஒப்புக்கொண்டு தாராள மாகப் பணமும் கொடுத்தார். ஆகவே என் தந்தையும் அதை ஒப்புக்கொண்டார். அந்த அன்னியருடையபெயர் ராஜாராஜன் அவருடன் நாங்கள் புறப்பட்டோம். வங்க நாட்டுக்குப் போய்ச்சேர்ந்தோம். அவர் வாக்களித்தபடியே தாராளமான உதவியைச் செய்தார். ராஜாராஜன் வயதானவராயினும் அவர் வரைந்து வந்த சித்திரப் படங்களுக்கெல்லாம் அதிகமான பணத்தைப் பெற்று வந்ததால் நிறைந்த வருவாயை உடைய ராகவே இருந்தார். ஆயினும் பந்துக்கள் பலர் அவரை நம்பி யிருந்ததால் அவர்களுக்கெல்லாம் செலவு செய்ததால் அவர் அதிக பொருளைச் சேர்த்துவைக்க முடியவில்லை. என் தகப்ப ஞர் தமக்கு முன் ஏற்பட்ட அனுபவத்தின் பயனைப் பணத் தில் கருத்தைப் பெற்றுச் செட்டாகச் செலவு செய்து வந்த தால் எனக்கும் ராஜலட்சுமிக்கும் தக்க கல்வியை அளிப்பதில் தாராளமாகச் செலவு செய்தார். ராஜலட்சுமிக்கு நடனத்தி லும் ஆடல் பாடல்களிலும் இணையானவர் யாரும் இல்லை யெனச் சொல்லும்படி அக்கலையில் தக்க தேர்ச்சியை அவ ளுக்கு அளித்துவிட வேண்டுமென என் தந்தை முடிவு செய் தார். ராஜலட்சுமியும் குழந்தைப்பருவம்முதலே ஆடல்பாடல் களில் ஆசையுடையவளாக இருந்ததால் என் தந்தையின் எண்ணம் நிறைவேறச் சௌகரியமாக இருந்தது. ஆகவே உயர்தர ஆசிரியர்களை நியமித்துப் பாடம் கற்பிக்க ஏற்பாடு செய்தார்.

இதற்கிடையில் ராஜ ராஜன் என் விஷயத்தில் அதிக அக்கரைகொண்டு என் முன்னேற்றத்துக்கான வழியில் சிரத்தை யெடுத்தார். சதா காலமும் என்னை அவரது சித்தி ரச் சாலையில் உட்கார வைத்து சித்திரம் வரைவதில் எனக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் ஊட்டினர். நாளடைவில்

எனக்கும் அத் தொழிலில் அதிக ஆர்வம் ஏற்பட்டு விட்டது. சித்திரம் வரைவதிலும், சங்கீதத்திலும் நிபுணரான ராஜராஜன் எனக்கு உடதேசித்த படியால் நானும் அதில் திறமை பெற்றேன். அவர் செய்யவேண்டிய பல வேலைகளை நான் எடுத்துச் செய்ததால் அவரும் சந்தோஷப் பட்டார். இவ்வாருக எனக்கு வயது பதினேழும், என் சகோதரிக்கு வயது பதினைலும் ஆயிற்று. இச்சமயத்தில் எங்களுக்கு மறுபடியும் பெரிய ஆபத்து ஏற்பட்டது. திடீரென்று என் தகப்பனர் முடக்குவாதத்தால் தாக்கப்பட்டார். அவர் மூன்று, நான்கு வாரங்கள் அவஸ்தைப் பட்டுக் கடைசியில் இறந்து விட்டார். ஆ! நானென்ன சொல்வேன். அப்போது நாங்கள் அடைந்த துக்கத்துக்கு அளவேயில்லை. அவர் இறப்பதற்குச் சிறிதுமுன் தன்படுக்கையில் இருக்கையில் டாக்டர்கள் எதிரிலும் எங்கள் எதிரிலும் தனது வாழ்க்கை சம்பந்தமான ஒரு இரகசியமிருப்பதாகக் கூறினர். அப்போது அவர் என் முகத்தை உற்று நோக்கி என்னைப் பற்றியே அவ்விஷயம் இருக்கிறதென்றும் சொன்னர். இதற்குள் அவருக்கு மயக்கம் வரும்போலிருந்தது. கண்களை மூடிக்கொண்டார். மரணம் சமீபித்து விட்டது. இதற்கிடையில் அவர், தான் முன்பு சேர்ந்திருந்த தெருக்கூத்து நாடகக் கம்பெனியின் மானேஜர் கோவிந்தன் இவ்விஷயத்தைச் சொல்வார் எனக் கூறி முடித்ததும் அவரது பிராணனும் வெளியேறி விட்டது' என்று மோகனதாஸ் சொல்லி முடித்ததும் சிறிதுநேரம் வரை மேற்கொண்டு பேச அவரது நாவெழவில்லை. துக்கத்தால் கண்ணீர் வடித்தான். ஷண்பகவல்லியும் மௌனத்துடன் அன்புக் கறி குறியாக அவனுடைய கையை அழுத்தினுள். அவனுடைய துக்கம் பரிசுத்தமானதென்றும், அவ் வேளையில் குறுக்கிட்டுப் பேசுவது தவறு என்றும் நினைத்தாள். ஆயினும் அவள் கண்களிலிருந்து சொட்டிய கண்ணீரானது அவனிடம் அவள்

எவ்வளவு அனுதாபத்துடன் இருக்கிறாள் என்பதைக் காட்டிற்று.

மேலும் பேசத்தொடங்கி மோகனதாஸ் கூறியதாவது: என் தந்தை பிரஸ்தாபித்த இரகசியம் அவரதுவாயால் வெளிவாராமற் போகவே அதை அறிவது மிகக் கஷ்டமாய்ப் போய் விட்டது. என் சகோதரியை விட எனக்கே அதிக சம்பந்தப் பட்ட அந்த விஷயம் யாதாயிருக்குமோ என்பதில் அதிக ஆவலுண்டாயிற்று. நாங்கள் என் தந்தையின் பிரேதத்தை அடக்கம் செய்து விட்டோம். எங்களைக் காப்பாற்ற நண்பர்கள் இல்லாமற் போகவில்லை. அதிக செலவில் எங்களைப் படிக்க வைத்ததால் தந்தை செலவாளியாகி ஏழையாகவே இருந்தார். ஆகவே அவரது மரணச் சடங்கை முடித்த பின்னர் எங்களிடம் ஒரு பைசாவும் இருக்கவில்லை. ராஜலட்சுமி நாடக மேடைகளில் நடிக்க இன்னும் ஆறுமாத காலமாவது பயிற்சிபெற வேண்டியதா யிருந்தது. ராஜ ராஜன் இவ் விஷயத்திலும் எங்களுக்கு உதவிசெய்தார். ராஜலட்சுமியின் படிப்புக்கு வேண்டிய செலவையும் அவரேதந்தார். என் விஷயத்திலும் அவர் அதிக சிரத்தை வைத்து அத்தொழிலில் நான் இன்னும் அதிக பயிற்சி பெறும்படியான வழிகளை ஏற்படுத்திக் கொடுத்தார். இவ்வாறு சில மாதங்கள் கழிந்த பின்னர் நான் என் வேலையில் அதிக திறமை பெற்று விட்டபடியால் நான் எழுதிய சித்திரப்படங்களை சுமாரான விலைக்கு விற்க ஆரம்பித்தேன். எனது கண்மணி! இச் சந்தர்ப்பத்தில் நான் ஒரு விஷயத்தைச் சொல்கிறேன், கேள். என் கையால் எழுதப்பட்டு விற்கப்பட்ட சித்திரத்தை விற்று அதன் மூலம் கிடைத்த பணத்தைக் கொண்டு வாங்கிய ஆகாரம்தான் எனக்கு அதிக ருசியாய் இருந்தது. ராஜராஜன் செல

வில் நான் சாப்பிட்டதெல்லாம் வெட்கத்தையே கொடுத்தது. இவர் மிக்க நல்லவராயினும், தாராள புத்தியுடையவராயினும் பிறர் செலவில் நாம் தங்குவதென்றால் நமக்கு அவமான மல்லவா? எனது சகோதரியும் தக்கபடி தேர்ச்சி பெற்று விட்டபடியால் வங்க நாட்டு நாடக மேடைகளில் நடிப்பது என்று முடிவு செய்தோம். அப்படியே அவள் நாடக மேடைகளில் ஏறி ஆட்டங்களில் தனது சாமர்த்தியத்தைக் காட்டியதும் எல்லாரும் அவளைப் பாராட்டலானார்கள். பல பிரபுக்களும் அறிஞர்களும் எங்களிடம் அதிக அபிமானத்தையும் காண்பித்தனர். இவ்வாறு என் சகோதரி நல்லபெயர் வாங்கிய போது இரத்தினபுரியிலிருந்து அத்தேசத்துக்கு வந்த நாடகக் கம்பெனியின் சொந்தக்காரர் ஒருவர் ராஜலட்சுமியின் புகழையும் கீர்த்தியையும் அறிந்து எங்கள் வீட்டுக்கு வந்து ராஜலட்சுமியைத் தன்னுடன் இரத்தினபுரிக்கு வரும்படி அழைத்தார். அதிக பணம் கொடுப்பதாகவும் சௌகரியமான நிலைமையில் வைப்பதாகவும் வாக்களித்தார்.

நாங்கள் திடீரென்று அதை ஒப்புக்கொண்டுவிட முடியவில்லை. அங்கும் பலர் எங்களை ஆதரிப்பவர்கள் இருந்தபடியால் அவர்களுடைய யோசனையை எல்லாம் கேட்கவேண்டியிருந்தது. ஆகவே, அவரது யோசனையை ஒப்புக்கொள்ள முடியவில்லையென்றும், மற்றொரு முறை வந்து கேட்டால் அப்படியே செய்யத் தயாராக இருப்பதாகவும் சொல்லி அவரை அனுப்பிவிட்டோம். அந்தக் கம்பெனி மானேஜர் என் தங்கையைப் பாராட்டிப்பேசியதால் உற்சாகமடைந்த அவள் இன்னும் தீவிரமாகஅத்தொழிலில் ஈடுபட்டு அவளுக்கு இணையானவர் உலகிலேயே இல்லை எனப் பெயர் வாங்கவேண்டு

மென்னும் எண்ணத்துடன் பற்பல முறைகளையும் கற்றுக் கொண்டாள். ஆகவே அவளுக்கு இன்னும் அதிகமான பெயரும் கீர்த்தியும் நிலைக்கலாயிற்று. ஆயினும் அப்படிப்பட்ட சமயத்திலும் எங்கள் உற்சாகம் குறையக் கூடிய வகையில் ஒரு அசந்தர்ப்பம் ஏற்பட்டது. அதாவது எங்களுக்கு இவ்வளவு உதவி செய்துவந்த ராஜராஜன் இறந்துபோனதேயாகும். அவரும் ஏழையாகவே இறந்துவிட்டார். போதாக் குறைக்குக் கொஞ்சம் கடனும் வைத்துவிட்டார். ஆனால் அவர் நான்கைந்து சித்திரங்கள் மிகத் திறமையாக எழுதி வைத்திருந்தார். அவற்றில் ஒன்றுமட்டும் முக்காற்பங்குதான் எழுதப்பட்டிருந்தது. கடன்காரர்களுக்குக் கடன் கொடுப்பதற்காக அவருடைய அச்சித்திரங்களை விற்பதென முடிவு செய்து பத்திரிகைகளிலும் விளம்பரம் செய்யப்பட்டது. அவற்றை வாங்க வந்தவர்களில் நமது செல்வநாதரும் ஒருவர். அவரைப் பார்த்தால் பைத்தியக்காரர் போலத் தோன்றலாம். அவருக்குச் சித்திரத்திலும், சங்கீதத்திலும் பிரியமிருக்குமா என்று நினைக்கலாம். ஆயினும் நமது கண்டத்திலேயே அவற்றில் அவ்வளவு பிரீதியுடையவர் வேறு எவருமே இல்லையென்றும் சொல்லலாம். பெருந்தொகையைச் செலவழித்து அவர் வங்க நாட்டுச் சித்திரங்கள் பலவற்றை வாங்கியிருக்கிறார். அவருக்கு ராஜராஜனுடைய சித்திரங்களில் அதிக பிரேமை ஏற்பட்டதால் அவற்றையெல்லாம் அவரே அதிக விலைகொடுத்து வாங்கினர். முக்கால்வாசி வேலையே நடந்திருந்த சித்திரத்தையும் அவர் வாங்கினர். அதுதான் என்னை அவருடன் அறிமுகப் படுத்தியது.

மறுநாள் அவர், தான் வாங்கிய சித்திரங்களையெல்லாம் எடுத்துச்செல்ல, காலஞ்சென்ற ராஜராஜனின் சித்திரசாலைக்கு வந்தபோது நான் அந்தப் பூர்த்தியாகாத சித்திரத்தைப் எழு

திக்கொண்டிருந்ததைப் பார்த்தார். நான் அதை முடித்தவிதத்தைக் கண்டு அவர் ஆச்சர்யப்பட்டார். பிறகு அவர் அத்தொழிலில் எனக்கு எவ்வளவு பயிற்சி உண்டு என்பதை விசாரித்தார். தினசரி என் இருப்பிடத்துக்கு வரலானர். இவ்வாருக எங்களுக்குள் சிநேகம் அதிகப்பட்டது. என்னிடத்திலும் என் தங்கை ராஜலட்சுமியிடமும் அவர் அதிக அன்பும் அனுதாபமும் காண்பிக்கலானர். அவர் பண உதவியும் செய்து வந்தார். ராஜராஜன் இறந்து போனதற்காக இடையில் சொற்பகாலம் மேடையில் நடிக்காமலிருந்த என் சகோதரி மறுபடியும் நடிக்க ஆரம்பித்தபோது செல்வநாதரும் அங்கு போய் என் சகோதரியின் ஆடல்பாடல்களைக் கண்டு அதிக ஆச்சர்யமடைந்து அவளிடம் அதிக அபிமானத்தைக் கொண்டார். அவரிடம் நாங்கள் இரத்தினபுரி நாடகசாலை சொந்தக்காரர் ஒருவர் கூறிய யோசனையைத் தெரிவித்தோம். உடனே அவர் அதை ஒப்புக்கொள்ளும் படியும், தானும் விரைவில் இரத்தினபுரிக்குப் புறப்படப் போவதாகவும் தெரிவித்தார் பிறகு அவர் அவ்வூரை விட்டுப் போய்விட்டார். எங்களிடம் அதிக அபிமானத்துடனும் அனுதாபத்துடனும் இருந்த அவர் போய்விட்டதால் நாங்கள் உண்மையில் விசனப்பட்டோம். அவர் கூறிய யோசனையின்படியே நாங்கள் இரத்தினபுரியைச் சேர்ந்த நாடகக் கம்பெனியின் சொந்தக்காரரை வரவழைத்து அவரிடம்போய்ப்பேச ஆரம்பித்தோம். அவர் ராஜலட்சுமிக்கு வேண்டிய சௌகரியங்களை யெல்லாம் அளிப்பதாகவும் ஒப்புக்கொண்டார். நாங்களும் புறப்பட்டு விடுவது என்று நினைத்தோம். நாங்கள் சிறு குழந்தைகளாயிருந்தபோதே இரத்தினபுரியை விட்டுச் சென்றவர்களாதலால் ஏதேனும் காரணத்தைக் கொண்டு தாய் நாடு திரும்ப வேண்டுமென்று எண்ணினேம். மேலும் நமது நகரிலும் பல பிரபல குடும்பங்களில் சித்திரம் கற்பதில் அதிக ஆர்வமிருப்ப

தாகக்கேள்விப்பட்டதால் நான் இங்குவந்தால் நல்ல தொழில் ஏற்படுமென்றும் நம்பினேன். அதிலும் முக்கியமாக என் தகப்பனார் மரணப் படுக்கையில் கூறிவிட்டுப்போன இரகசியத்தை அறிவதற்கும் சௌகரியமாய் இருக்குமென்று நம்பினேன்.

ஆகவே நாங்கள் இரத்தின புரிக்குப் புறப்பட்டோம். இங்கு வந்தபின்னர் என் சகோதரி நாடகக் கணிகையாய் இருப்பதால் நான் அவளுடைய சகோதரன் எனத்தெரிந்தால் என்னை உயர் குடும்பத்தார் தங்கள் வீட்டுப் பெண்களுக்குப் பாடம் சொல்லச் சேர்த்துக் கொள்ள மாட்டார்களென்று தோன்றியதால் எங்கள் உறவை இரகசியமாகவே வைத்துக் கொள்வதென்றும், வெளியுலகில் ஒருவருக்கொருவர் அறிமுகம் இல்லாதவர்கள்போல் நடந்து கொள்வதென்றும் தீர்மானித்தோம். ஆதலால் 'நானும் நகருக்கப்பால் ஒரு மூலையில் சிறு வீட்டை வாடகைக்கு வாங்கி என் வேலைகளைக் கவனிப்பதற்கு நகரின் மத்தியில் ஒரு கடையையும் வாங்கினேன். இவ்வாறு நாங்கள் தனியே வசித்து வரும்போது செல்வநாதரும் இங்கு வந்து சேர்ந்தார். அவர் நாடகமேடையில் என் சகோதரியைக் கண்டதும் விலாசத்தை விசாரித்து அறிந்து வீட்டுக்கு வந்தார். அதுமுதல் அவர் எங்களுக்கு அளவிலா உதவி செய்துவந்தார். எனதன்புள்ள ஷண்பகவல்லியே! என் வாழ்க்கையைப் பற்றிய உண்மையைச் சொல்லி விட்டேன். நான் உயர்குடும்பத்தைச் சேர்ந்தவனென்று பொய்ப் பெருமையைச் சொல்லிக்கொள்ள விரும்பவில்லை.

இவ்வாறு மோகனதாஸ்கூறிமுடித்ததும், ஷண்பகவல்லி அவனிடம், 'அன்பா! நீ இவ்வாறு உண்மையைக் கூறியதற்காக நான் இன்னும் அதிகம் உன்னை நேசிக்கிறேன். ஆனால்

உன் தகப்பனார் மரணப் படுக்கையில் உன்னிடம் சொன்ன வார்த்தைகள் இப்போது என்னிடம் சொன்னதுபோல் என் காதுகளில் ஒலிக்கிறதே' என்றாள். அதற்கு அவன், 'ஆம், நானும் அப்படியே அடிக்கடி நினைக்கிறேன். என் தகப்பனார் குறிப்பிட்ட இரகசியம் அக்காலத்தில் தெருக்கூத்து கம்பெனி ஒன்றின் மானேஜராயிருந்த கோவிந்தனுக்குத் தெரியும்போ லிருக்கிறது. நான் இரத்தினபுரிக்கு வந்ததும் அந்த ஆளைக் கண்டுபிடிக்க எவ்வளவோ முயற்சி செய்தேன்; பத்திரிகை களிலும் விளம்பரம் செய்து பார்த்தேன்: எவ்வளவு பிரயா சைப் பட்டும் அந்த ஆள் அகப்படவில்லை. அதனால் என் தந்தை சொன்ன இரகசியமும் அவருடனேயே இறந்து விட் டதோ என்று நினைக்கிறேன்' எனக் கூறினான்.

அவர்களிருவரும் அவ்வாறு பேசிக்கொண்டிருந்த வேளையில் சுந்தரவிலாச மாளிகையின்மீது வைக்கப்பட் டிருந்த பெரிய கடிகாரத்தில் ஒரு மணி அடித்தது. அப் போதுதான் அவர்களுக்குத் தாங்கள் இரண்டு மணி நேரம் வரை பேசிக்கொண் டிருந்ததாகத் தெரிந்தது. உடனே அம் மாளிகையில், அனைவரையும் சாப்பாட்டுக்கு அழைக்கும் மணி யும் அடிக்கப்பட்டது. அச் சத்தத்தைக் கேட்டதும் ஷண்பக வல்லி திடுக்கிட்டு எழுந்து, 'காதல! நாம் பிரியவேண்டிய சம யம் வந்து விட்டது. இனியும் நான் போகவில்லை யென்றால் என்னைத் தேடிக்கொண்டு யாரேனும் வந்துவிடுவார்கள்' என் றாள். அதற்கு மோகனதாஸ், 'எனதன்புள்ள கண்மணியே! நீ இன்னும் எவ்வளவுகாலம் இங்கே இருப்பாய்?' என்று கேட்க, அவள் 'நாங்கள் சிலவாரங்கள் வரை இங்கே இருக்க வேண்டுமென்று சீமாட்டி அழைத்திருக்கிறாள். ஆனால் அவ ளுடைய சங்கதிகளை யெல்லாம் கேட்ட பிற்பாடு இங்கிருக்க வே எனக்கு அதிக வெறுப்பாக யிருக்கிறது. விரைவில்

திரும்பிவிடலாமென்றாலும் என் சித்தியின் இஷ்டப்படி தானே நான் நடக்க வேண்டும். ஆதலால் ஒன்றும் சொல்ல முடியவில்லை,' என்றாள். அப்போது அவன், 'இந்த சங்கதியெல்லாம் செல்வநாதருக்கும் தெரிந்து அவர் தன்னுடைய சிநேகிதரான மனோகராம்பிரபுவுக்கு எழுதி அவருடைய மனைவியாகிய உன் சித்தியை ஹேமவதி சீமாட்டியுடன் சிநேகம் செய்வதில் ஜாக்கிரதையாக இருக்கும்படி தெரிவிக்கச் சொன்னால் அப்போது உன் சித்தி என்ன செய்வாள்' என்று கேட்டான். அதற்கு அவள், 'அப்படி ஏதேனும் தெரிந்தால் என் சித்தி உடனே புறப்பட்டுவிடுவாள். அவள் மிகவும் நல்லவள். உலக விஷயங்களில் சிறிது பற்றுடையவளென்றாலும் மனச்சாட்சிக்குப் பயந்து நியாயத்துடன் நடப்பவள்' என்றாள். மோகனதாஸ், 'சரி, எப்படி ஆகிறதோ பார்ப்போம். அது வரையில் நீ ஹேமவதி சீமாட்டியை வெறுப்பது போல் காட்டிக்கொள்ள வேண்டாம். கண்மணி! நான் போய்வருகிறேன். நாளையதினம் நான் இரத்தினபுரிக்குப் போகிறேன்' என்றான். அவளும், 'வந்தனம், போய்வா, என்றாள். இருவரும் அன்புடன் ஆலிங்கனம் செய்து கொண்டதும் பிரிந்தனர்.

64-வது அத்தியாயம்

—:(o):—

ஆபத்தும் காப்பாற்றலும்

மோகனதாஸ் தனது காதலியாகிய ஷண்பகவல்லியை விட்டுப் பிரிந்ததும் அங்கிருந்த சிறிய வேலியைத் தாண்டிச் சென்று, ஆற்றோரமாகவே நடந்து குறுக்கு வழியாக மிதுனபுரிக்குச் சென்றான். வண்டியில் வந்தால் அவ் வண்டி

மாளிகைக்குச் சிறிது தூரத்தில் நின்றிருக்குமானல் அது யாருடையதென்று பலரும் விசாரிப்பார்கள். மேலும் சில மைல்கள் வரை நடப்பதும் அவனது ஆரோக்கியத்துக்கு அவசியமென்றே தோன்றியது, துப்பாக்கிச் சண்டையில் நேர்ந்த விபத்தால் அவன் இன்னமும் பலஹீனனுகவே இருந்தானென்ருலும் தன் காதலியாகிய ஷண்பகவல்லியைச் சந்திப்பதற்காக அவ்வளவுதூரம் நடந்ததை அவன் ஒரு கஷ்டமாகக் கொள்வானு? சிறிது நேரத்துக்கு முன் அவன் முத்தமிட்டானே அதற்குச் சமமாகுமா இக் கஷ்டங்களுக்கெல்லாம், அவன், தன் பழைய விஷயங்களை யெல்லாம் மறந்து இப்போது ஒரு புது மனிதனைப்போல் தன்னை நினைத்துக் கொண்டான், அதிக சந்தோஷமும் உற்சாகமும் அடைந்தான். அவன் சிறிது நேரத்துக்கு முன் சுந்தரவிலாச மாளிகையின் தோட்டத்தில் அனுபவித்த இன்பங்களை யெல்லாம் நினைத்துக் கொண்டே ஆற்ருேரமாக நடந்துசென்றபோது சொற்ப தூரத்துக் கப்பால் அவனுடைய எதிரில் ஒரு மாது எளிய உடைகளை அணிந்து வருவதைக் கண்டான். அவள் காட்டுமிராண்டிபோலவும், அற்ப குணங்களை யுடையவளாகவும் காணப்பட்டாள். அவள்தோற்றமே பார்வைக்கு ஆச்சர்யமாயிருந்தது. அவள் அவனை யணுகி, ‘அதோ அருகில் தெரிகிற கட்டடம் சுந்தரவிலாச மாளிகை என்று நினைக்கிறேன்’ அது சரிதானு? என்று கேட்டாள். அதற்கு மோகனதாஸ், ‘ஆம், அக்கட்டிடம்தான்’ என்ருன். அவள் வந்தனம் செலுத்திவிட்டு நேராக நடக்கலானுள்.

மோகனதாஸ், அவள் அம்மாளிகைக்கு என்ன வேலையாகப் போகிருளோ என்று நினைத்தான். ஒருகால் பணக்கார வீட்டுக்குச் சென்று பிச்சைகேட்கும் எண்ணத்துடனும் போயிருக்கலா மல்லவா,’ என்று எண்ணினுன். சிறிது நேரத்துக்

கெல்லாம் பின் பக்கத்தில் ஆற்று நீரில் ஏதோ விழுந்த சத்தம் கேட்டது. உடனே திரும்பிப் பார்த்தான். அம்மாது காணப்படவில்லை; ஆயினும் அவள் எவ்வளவுதூரம் நடந்திருக்க வேண்டுமோ அந்த தூரத்தில் சில மரங்கள் இருந்தபடியால் அவளுக்கு என்ன நேர்ந்தது என்றும் தெரிந்து கொள்ள முடியவில்லை. ஆகவே, அவன் மேற்கொண்டு நடக்கக் காலெடுத்து வைத்தான். அப்போது யாரோ அழுவது போல் கேட்டது. மறுபடியும் திரும்பிப் பார்த்தான். ஆற்று நீரில் அம்மாது நீந்துவதையும் சொற்ப நேரத்தில் மூழ்கியதையும் கண்டான். உடனே மோகனதாஸ் சிறிதும் யோசனை செய்யாமல் நீரில் குதித்தான். அவன் குதித்தயிடம் மிக ஆழமாக யிருந்தது. அவன் நன்றாக நீந்தக்கூடியவனே என்றாலும் சமீபத்தில் காயலாவாக இருந்ததால் பலஹீன மடைந்தவனாக இருக்கவே அவ்வளவு பள்ளத்தில் நீந்துவது கஷ்டமாகவே இருந்தது. தான் மட்டும் கரை ஏறி விடுவது என்றால் எப்படியாவது சமாளித்துக்கொண்டு வந்து விடுவான். ஆயினும், அவன் ஒரு உயிரைக் காப்பாற்றவேண்டிய பொறுப்பும் இருக்கிறதல்லவா? கேவலம் தன் உயிருக்கு அஞ்சி மற்றொரு உயிரைக் காப்பதினின்றும் அவன் தவறமாட்டான். அவ்வேளையில் அம்மாதும் நீர்மட்டத்துக்கு மேல் வந்தாள். ஓவென்றலறினாள். அதைக் கேட்ட அவன் மனம் அதிகம் இளகியது. ஆதலால், அவன் மறுபடியும் நீரில் மூழ்கினான். இவ்வாறாக மூன்று முறை மூழ்கியும் கைக்கு ஒன்றும் அகப்படவில்லை. நான்காவது முறை அதிக ஊக்கத்துடன் மூழ்கிய போது அவனது கைக்கு ஒரு ஆடை அகப்பட்டது. அவன் மிகவும் அயர்ச்சி யடைந்திருந்தா னென்றாலும் ஊக்கத்தைச் சிறிதும் குறைத்துக்கொள்ளாமல் அந்த ஆடையைப்பிடித்துப் பலமாக இழுத்தான். அவள் மூர்ச்சை யடைந்திருந்தாள்

எனினும் அவளைக் கரை சேர்த்தான். அப்போது அவனும் மிக அயர்ச்சி யடைந்தவனாய் மூர்ச்சை யடைந்தான்.

சொற்ப நேரத்துக்குப் பின் அவன் ஸ்மரணைபெற்று எழுந்தபோது மிகச் சிறியதும், எளிமையானதும் ஆனால் மகா சுத்தமானதுமான ஒரு அறையில் ஒரு படுக்கையில் தான் இருப்பதைக் கண்டான். வயதுசென்ற ஒருமாது அவனுடைய கை கால்களைப் பிடித்துக்கொண்டிருந்தாள். அவள், 'ஆ! இவன் மறுபடியும் கண்களைத் திறந்து பார்க்கிறான்' என்று அன்பான குரலில் சொன்னாள். அப்போது மற்றொரு அறையிலிருந்து அங்கு வந்த உயரமான விவசாயி ஒருவன், 'சரி; அந்த மாது இவனுக்கு என்ன ஆகவேண்டுமோ தெரியவில்லை' என்றான். அதற்கு அவள், 'அது கிடக்கட்டும், அவளுக்கு எப்படி இருக்கிறது' என்று கேட்டதற்கு அவன், 'அவள் சிறிது சொஸ்தமாகவே இருக்கிறாள்' என்றான். அப்போது மறுபடியும் கண்களைத் திறந்து பார்த்த மோகனதாஸைக் கண்டு அம்மாது, 'ஐயா, உனக்கு எப்படி இருக்கிறது?' என்று கேட்டாள். அதற்கு அவன் 'சிறிது சௌக்கியமாகத்தான் இருக்கிறது. நீங்கள் இங்கு இவ்வளவு உபசாரம் செய்வதற்காக உங்களுக்கு வந்தனம்' என்றான். அவன் மெல்லிய குரலில் மிக்க பலஹீனத்துடன்பேசினான். எதிரில் நின்றிருந்த விவசாயி, 'ஏதோ தற்செயலாக நேர்ந்த ஆபத்து என்று நினைக்கிறேன்' எனக் கேட்டான். அதற்கு மோகனதாஸ், 'ஆம், இப்போது நீங்கள் பிரஸ்தாபித்த அம்மாது ஆற்றில் விழுந்து விட்டாள். அவளை நான் காப்பாற்றுவதில் வெற்றி பெற்றேன். ஆயினும் என் பலஹீனம் காரணமாக நான் மூர்ச்சை யடைந்தேன்' என்று கூறினான்.

அப்போது அம்மாது, 'ஐயா, அதிகமாகப் பேச வேண்டாம் களைப்படைந்திருக்கிறாய். என் மகன் நீங்கள் இருவரும்

ஆற்றங்கரையில் பிரேதங்களைப்போல் விழுந்திருப்பதைக் கண்டான். உயிர் இருப்பதைப் பார்த்தபடியால் உடனே ஓடி வந்து என் மகளையும் என்னையும் அந்த இடத்துக்கு அழைத்துச் சென்றான். நாங்கள் இருவருமாகச் சேர்ந்து உங்களிருவரையும் இவ்விடத்துக்கு எடுத்து வந்தோம். என்மகன் உன் ஆடைகளைக் களைந்து காயப்போட்டான். நான் உனக்கு சிஷ்ரூஷை செய்து வருகிறேன். நீ மறுபடியும் உயிர்பெற்று எழுவது சாத்தியப்படாமற் போகுமோ என்று கூட நான் பயப்பட்டதுண்டு' என்றாள். மோகனதாஸ் பேச முடியவில்லை. அவ்வளவு அயர்ச்சி யடைந்திருந்தான். ஆனால் அவனுடைய பார்வைமட்டும் அவளுக்கு வந்தனம் செலுத்துவது போலத் தோன்றியது. அம்மாது மேலும் பேசத் தொடங்கி, 'உன்னுடைய துணிகளை உலரப்போட் டிருக்கிறோம். நீ இன்று முழுதும் இவ் வீட்டை விட்டுப் போக முடியாதென்று நம்புகிறேன். நீ இங்கேயே தங்குவாயின் உனக்குவேண்டிய சௌகரியங்களைச் செய்துகொடுக்கத் தயாராக இருக்கிறோம். கேவலம் காட்டு மிராண்டியான ஒரு மாதைக் காப்பாற்றத் தன் உயிரையும் கொடுக்கத் துணிந்த உன்னைப்போன்ற அன்பர்களுக்கு உதவி செய்வதே எங்கள் கடமையாகும். நீ உன் நண்பர்கள் யாருக்கேனும் ஏதாவது சமாசாரம் சொல்லி அனுப்ப வேண்டியதாயின் அதை என் மகன் திருப்தியுடன் செய்வான் என்று கூறினாள். அதைக் கேட்ட மோகனதாஸ் தான் தற்காலிகமாக மிதுனபுரியில் தங்கி யிருப்பதாகவும் யாருக்கும் எத்தகைய தகவலும் அறிவிக்கவேண்டிய அவசியமில்லையென்றும், ஆயினும் மிதுன புரியில் தான் தங்கியிருக்கும் ஓட்டலுக்குச் சென்று தன் ஆடைகள் சிலவற்றைக் கொண்டு வரலாமென்றும் கூறினான்.

அவ்வாறே அம்மாதின் குமாரனும் மோகனதாஸி

னிடம் எல்லா சமாசாரத்தையும் தெரிந்துகொண்டு ஓட்டலுக்குப்போய் அவனுடைய வேறு ஆடைகளைக் கொண்டுவந்தான். மோகனதாஸும் படுத்துத் தூங்கிவிட்டான். எழுந்து பார்த்தபோது மாலைநேரமாக இருப்பதைக்கண்டான். அவன் நீண்டநேரம் தூங்கியபடியால் சிறிது களைப்பு தீர்ந்தவனாய் உற்சாக மடைந்திருந்தான். அவ்வீட்டு மாதும் அவனுக்காக ஆகாரத்தைத் தயாரித்திருந்தாள். மோகனதாஸ் அதைத் திருப்தியுடன் உட்கொண்டான். அக்கட்டடம் மிதுனபுரியிலிருந்து மூன்றுமைல் தூரத்தில் இருந்தது. வண்டி அகப்படுவது கஷ்டமாக இருந்தபடியால் அன்று இரவை அங்கேயே கழிப்பது என்று முடிவு செய்தான். பிறகு அவன் தான் காப்பாற்றிய மாதின் நிலைமையைப்பற்றி விசாரித்தான் அதற்கு வீட்டுக்காரி, 'அவள் எத்தகைய ஆபத்தையுமே அடையாதவள்போல் சொஸ்தமடைந்து விட்டாள். அவள் எப்போதோ இவ்விடத்தை விட்டுப் போய்விட்டிருப்பாள். ஆயினும் தன்னைக் காப்பாற்றிய நீ நன்றாகத் தெளிவடைந்த பின்னர் பேசிவிட்டுப் போகவேண்டும் என்று காத்திருக்கிறாள்' எனச் சொன்னாள். அதைக்கேட்ட அவன், 'அப்படியானால் அவளை இங்கே அனுப்பு' என்று சொன்னான். அப்போது வீட்டுக்காரி அங்கிருந்த திரையொன்றை ஜன்னலுக்குச் சரியாக இழுத்தாள். பிறகு ஒரு சிறிய விளக்கை ஏற்றினாள். மோகனதாஸும் தன்படுக்கையிலேயே பாதி சாய்ந்தபடி எழுந்து உட்கார்ந்தான். அழகிலும் நாகரிகத்திலும் சிறந்த அவன், கிராமவாசிகளின் வீட்டில் அவர்களுடைய உடையை அணிந்துகொண்டு அவர்களிடையில் இருந்த தனது கற்பனாசக்தியில் சிறந்த சித்திரக்காரர்கள் சித்திரம் வரைவதற்கு ஏற்றதாக இருந்தது. அவனே ஒரு சித்திரம்

வரைவோனதலால் அந்த நிலைமையை அவன் தன் மனத்தில் வர்ணித்துக் கொண்டான்.

சில நிமிஷங்களுக்கெல்லாம் அவ்வறையின் கதவுதிறக்கப்பட்டு அவனுல் காப்பாற்றப்பட்ட குறத்திபோன்ற காட்டுமிராண்டி ஜாதியைச் சேர்ந்த அம்மாது தனியாக உள்ளே நுழைந்தாள். அவள் கதவைச் சாத்திக்கொண்டு அவன்படுத்திருந்த படுக்கையின் அருகில் உட்கார்ந்தாள். உடனே அவள் கோரமான பாஷையில், 'ஐயா, எனக்கு அபிமானமென்பதோ அன்பென்பதோ இன்னதென்று தெரியாது. ஆயினும் உன்னிடம் வந்தனத்தைத் தெரிவிக்காமல் போக என் மனம் துணியவில்லை. நீசெய்த பெருந்தன்மையான காரியம் பாராட்டத் தக்கது. இப்போது உன் தேகநிலை எப்படி இருக்கிறது.? சிறிது சௌக்கியமாய் இருக்கிருய் அல்லவா?' என்று கேட்டாள். அவள் அக் கேள்வியைக் கேட்டமாத்திரத்தில் அவனுக்கு ஆற்றோரத்தில் நடந்த விஷயங்களெல்லாம் ஞாபகத்துக்கு வந்ததால் மீண்டும் அவன் பலஹீனத்தையும் களைப்பையும் அடைந்து மூர்ச்சையடைவதுபோல் தோன்றியதால் சிறிது தண்ணீர் கொண்டு வரும்படி கேட்டான். உடனே அவளும் நீரைக் கொண்டுவரச் சென்றுள். இதற்குள் அவன் மூர்ச்சையாய்க் கிடந்தான். சிறிது தண்ணீரை அவனது முகத்தில் தெளித்து அவனை எழுப்பியபின் அவன் அந்த நீரைப் பருகியதும் மீண்டும் ஸ்மரணை பெற்று எழுந்து தான் அப்போது சௌகரியத்துடன் இருப்பதாகத் தெரிவித்தான். அவள் அவனை அதிகம் உற்றுப் பார்ப்பதை அவன் அறிந்து அவ்வாறு பார்க்கவேண்டிய அவசியமென்னவென்று யோசித்தான். இதற்குள் அவள், 'ஐயா நீ உன்னை ஆயாசப் படுத்திக்கொள்ளாமல் ஏதேனும் சொற்ப நேரம் என்னுடன் பேச முடியுமா?' என்று கேட்டாள்.

அவள் கேட்ட தோரணையும், தன்னைப்பார்த்த மாதிரியும் ஆச்சர்யமானதாக இருந்ததால் அவளுடன் ஏதேனும் பேச வேண்டுமென்னும் எண்ணத்துடன், 'ஆகா! அப்படியே பேசு கிறேன். ஆனால் நீ என் செயலுக்காக அடிக்கடி வந்தனம் கூறிக்கொண்டு இருக்க வேண்டாம்.' என்றான். அதற்கு அவள், 'ஐயா, நீ என் உயிரையே காப்பாற்றியிருக்கிற படி யால் வாய்ச்சொல் உபசாரம் சொல்வதில் பிரயோசனமில்லை. அதைவிடச் சிறந்ததான செயலால் நான் வந்தனம் செலுத்த முடியும், நான் இந்த ஆற்றங்கரைவழியே வருவேனென்றும் இப்படி ஆபத்து வருமென்றும், நீ என்னைக் காப்பாற்ற நேரி டுமென்றும் யார் அறிவார்கள்.?' என்றாள். அவளுடைய வார்த்தைகளைக் கேட்டு ஆச்சர்யமடைந்த அவன் அவளை உற்றுப் பார்த்துக்கொண்டே, 'எல்லாம் அவனது கட்டளை' என்றான். அதற்கு அவள், 'ஓ! யாருடைய கட்டளை. கட வுள் கட்டளை என்று சொல்கிறாயோ? வாலிபனே! நீ இறை வன் நம்பிக்கை யுடையவன் போலும்!' என்று கூறியதும் அவனும், 'ஆம், நான் கடவுள் நம்பிக்கை யுடையவனே' என்று கூறிக்கொண்டே தான் ஆபத்தினின்றும் தப்பியதற் காகக் கடவுளுக்கு வணக்கம் செலுத்துபவன்போல் ஆகா யத்தை அண்ணாந்து பார்த்தான். அப்போது அவள், 'ஐயா, நீ மிக்க களைப்படைந் திருப்பதால் அவசியம் எவ்வளவோ அதற்கு அதிகமாக ஒன்றும் பேசவேண்டாம், எனினும் நான் கேட்கும் சில கேள்விகளுக்கு நீ பதில் சொல்லியே ஆகவேண் டும். இப்படிப்பட்ட கேள்விகளை நான் ஏன் கேட்கிறேனென்று நீ இடையில் குறுக்கிட்டு விசாரிக்கக்கூடாது. உன் பெயர் மோகனதாஸ் என்பதுதானே. நீதான் அந்த சந்திரசேகரம் பிரபுவுடன் சண்டை செய்தவனாய் இருக்கவேண்டும். அப்படி யாயின் நீ இவ்வளவு பலஹீனமடைந் திருப்பதில் ஆச்சர்ய மொன்றுமில்லை. அவ்வளவு பலஹீனனாக இருந்தும் என்

உயிரைக் காப்பாற்ற நீ முன் வந்ததுதான் ஆச்சர்ய மாகும். நான் ஒரு யௌவன மங்கையாக இருந்தாலும் நீ ஏதோ மோகத்தில் செய்தாய் என்று கூறலாம். என்னைப் போன்ற ஒருத்திக்காகப் பாடுபடுவதென்றால் அது தயாள குணம் தவிர வேறொன்றுமில்லை,' என்று கூறிவிட்டு அவனது முகத்தைக் கூர்மையாக நோக்கியவண்ணம், 'ஆ, என்ன அழகு, பரந்ததும், கருமையானதுமான கண்கள், அழகான தோற்றம், முத்துப் போன்ற வெண்மையான பற்கள்.' என்றெல்லாம் ஏதோ வர்ணிக்க ஆரம்பித்தாள்.

அப்போது மோகனதாஸ், 'இவைகள் தான் நீ கேட்கப் போகும் கேள்விகள் என்றால் அதைக் கேட்க நான் தயாராக இல்லை; என்றான். அதற்கு அவள், 'ஆம். அழகான பற்கள் தான்' என்று சொல்லிக்கொண்டே சிரித்த வண்ணம், 'உன் தகப்பனார் உனக்குத்தெரியுமா?'' என்று கேட்டாள். அவள் இவ்வாறெல்லாம் கேள்வி கேட்பதைக் கண்டு ஆச்சர்யமடைந்த அவன் புன்சிரிப்புடன், 'ஆம்; அவர் எனக்குத் தெரியும். அவரது ஞாபகமும் எனக்கு இருக்கிறது.' என்றான். அப்போது அவள், 'அப்படியானால் அவர் இறந்து விட்டார்போலிருக்கிறது. இறந்துபோய் எத்தனை நாளாயிற்று.' என்று கேட்டதும், மோகனதாஸ் இப்படிப்பட்ட கேள்விகளில் வெறுப்படைந்தானென்றாலும் அவள் சிறிது நல்ல மனுஷியாக இருந்ததால் அவளுக்குக் கோபம் வரும்படி நடந்து கொள்ள இஷ்டமில்லாமல், 'மாதே, முக்கியமான விஷயம் ஏதேனும் என்னிடம் சொல்லத்தக்கதாக இல்லாவிட்டால் நான் அநாவசியமாக இந்த சம்பாஷணையை நீடித்துக்கொண்டிருக்க இஷ்டப்படவில்லை' என்றான். அதற்கு அவள், 'நீ இம்மாதிரியெல்லாம் குறுக்கிடுவாய் என்பது எனக்குத் தெரியும். இக்காலத்தில் காரண காரியங்களோடுதான் எல்லாம்

பேசவேண்டியதாய் இருக்கிறது. நான் இம்மாதிரி கேட்பதிலும் ஏதோ விசேஷமிருக்கிறதென்பதை நீ நம்பு. ஆதலால் நீ அநாவசியமாகக் குறுக்கிட்டால் அது உன் தவறுதான் என்பதை நீ அறிந்துகொள்வாயாக' என்ருள்.

அம்மாது பேசிய தோரணையைக் கேட்ட மோகனதாஸ் உண்மையிலேயே குறுக்கிட விரும்பாமல், 'சரி, அப்படியானல் நீ உன் இஷ்டப்படி பேசு. நானும் என்னுலானவரை பதில் சொல்லுகிறேன். சொல் பார்க்கலாம்' என்ருன். அம்மாது 'உன் தகப்பனர் இறந்து எத்தனை வருஷங்களாயிற்று என்று கேட்டேனே' என்ருள். அவனும் இரண்டு வருஷங்களாயின எனப் பதில் அளித்தான். அந்த மாது, 'உன் தந்தை இறப்பதற்குச் சிறிதுமுன் உன்னிடம் ஏதேனும் சொல்லவில்லையா? அவர் விசேஷமான யாதாஸ்து ஒன்றையும் உன்னிடம் கொடுக்கவில்லையா? என்று கேட்டதும் மோகனதாஸ் திடுக்கிட்டு, 'என்ன, இம்மாதிரியெல்லாம் கேட்கிருயே? நீ சொல்வதன் அர்த்தமென்ன?''என்று கேட்டான். அதற்கு அவள், 'ஆத்திரப்படவேண்டாம். நான் ஏதோ அநாவசியமான கேள்விகளைக் கேட்பதாக நினைத்துக்கொள்ளாமல் என் இஷ்டப்படியே நான்செல்ல நீ விட்டுவிட வேண்டும். இன்றே நீண்டநேரம் பேச உனக்குச் சக்தியில்லையென்ருல் நாளையதினம் நான் உன்னை எங்கேனும் சந்தித்துப்பேசுகிறேன்' என்ருள். அதற்கு அவன், 'இல்லை. நாளையதினம் நான் இரத்தினபுரிக்குப் போய்விடவேண்டும். ஆதலால் பேசவேண்டியவைகளெல்லாம் இன்றே பேசியாகி விடவேண்டும். இப்போது நான் சிறிது பலத்தையும் தெளிவையும் அடைந்திருக்கிறேன். மேலும் எனக்கு இந்த சம்பாஷணையில் ஒருவித ஆவல் ஏற்பட்டிருக்கிறது, என்ருன். அப்போது அந்த மாது, அப்படியானல் நான் கேட்கும் கேள்விகளுக்குப் பதில்

சொல், என்றதும் அவன், 'என் தகப்பனார் மரணப் படுக்கையில் இருக்கையில் ஏதோ இரகசியம் சொல்ல முயன்றார். ஆயினும், வாய் குளறிவிட்டதால் பேச முடியவில்லை. எனினும் நான் சிலவார்த்தைகளைக் கண்டு பிடித்தேன்' என்றான்.

உடனே அம்மாது, 'நீ கண்டு பிடித்த வார்த்தைகள் தான் என்ன' என்று கேட்கவும் அவன், 'இரத்தின புரியிலுள்ள தெருக் கூத்து கம்பெனி ஒன்றின் மானேஜர் கோவிந்தன் இந்த இரகசியத்தைச் சொல்ல முடியும் என்னும் சொற்களே எனக்குத்தெரிந்தன' என்று விடையளித்தான். அவள் திடீரென்று தன் சம்பாஷணையின் போக்கை மாற்றி, 'நீ இந்த சுந்தரவிலாச மாளிகையின் அருகில் என்ன செய்துகொண்டிருக்கிறாய்?'' என்று கேட்டாள். அவள் கேட்ட தோரணை அதற்குப் பதில் சொல்லியே தீரவேண்டியதாக இருந்தது. எனினும் மோகனதாஸ் தைரியத்துடன், 'நான் அத்தகைய கேள்விகளை யெல்லாம் கேட்க இடம் தரமாட்டேன்' என்றான். அதற்கு அவள், 'முடியாது, நீ பதில் சொல்லித்தான் ஆகவேண்டும்' என்று பிடிவாதம் செய்ய முயன்றாளென்றாலும் மோகனதாஸின் முகத்தில் கோபக்குறி ததும்புவதைக் கண்டு, 'அவசரப்பட வேண்டாம். நான் உன்னைக் கோபமூட்ட விரும்பவில்லை. நான் அப்படித்தான் சம்பந்தமில்லாத பல விஷயங்களைப் பற்றிப் பேசுவது வழக்கம். நான் உன் இரகசியமெதையும் அறிந்துகொள்ள விரும்பவில்லை. நீ சுந்தரவிலாச மாளிகைக்குப் போயிருந்தால் ஹேமவதி சீமாட்டி உனக்குத் தெரிந்திருக்குமல்லவா' என்றதும், அவனும், 'ஆம்; சீமாட்டி எனக்குத் தெரியும், ஆனால் இன்று நான் அவளைப் பார்க்கவுமில்லை; அவள் [illegible] வைக்கவுமில்லை. என் வாழ்க்கையிலே [illegible] அந்த மாளிகையில் போனதில்லை,' என்றான்.

மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த போதினி"ச் சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922ளு பிப்ரவரிமீ 1உ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமாதங்களுக்கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இதற்கு முன் மகா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி - குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" "கற்பகச்சோலையின் அற்புதக் கொலை" "கடற்கொள்ளைக்காரன்" "இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்" 'இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்" 'சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி" இரத்தினபுரி ரகசியம் 3-ம், 4-ம் 5-ம், 6-ம், 7-ம் பாகம் நாவல்கள் முடிவுபெற்று இப்பொழுது இரத்தினபுரிரகசியம் 8-ம் பாகம் என்றநாவல் ஆரம்பமாகி நடந்துவருகிறது. முடிவான நாவல்கள் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ளவேண்டும்; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங்கொண்டது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரிமீ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம். எப்பொழுது சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0
வெளி நாட்டிற்கு „ 3—0—0

இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்,

அமராவதி 2 பாகமும் ரூ. 4 0 பவளத்தீவு 2 பாகமும் ரூ. 3 0
ஞானசெல்வாம்பாள் 5 பாகமும் ரூ. 9 10 0
அர்ஜுனஸிங், சுந்தர் „ 0 2 0
அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள் 1 12 0
கற்பகச்சோலையின் அற்புதக்கொலை ரூ. 1 4 0
கடற் கொள்ளைக்காரன் 2-பாகமும் „ 3 4 0
இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம் „ 2 0 0
இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம் „ 1 12 0
சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி „ 2 0 0

மானேஜர்:—"ஆனந்த நிலயம்," தபால்பெட்டி நெ. 167, மதராஸ்

"ஆனந்தபோதினி"

ஓர் இனிய மாகாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915ல் ஜூலைமீ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகிக ஆசார ஒழுக்கங்களின் சீர் திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானபிவிர்த்தியையும், பெண்கல்வியையும் நோக்கமாய்க்கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதி சஞ்சிகையிலும் மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி பேர்பெற்றவர்களால் எழுதப் பட்ட அறிவு விருத்திக்கான மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரை யுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத் தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில் 80 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற் கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பினாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 2-0-0 மாதிரிக்காப்பி இனாம்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

	ரூ.	அ.		ரூ.	அ.
இரத்தினபுரி இரகசியம் 7-பாகமும் ...	13	14	தினகரசுந்தரி ரூபா	1	0
பவளத்தீவு 2-பாகமும் ...	3	0	தபால்கொள்ளைக்காரர்	0	14
கற்கோட்டை ...	2	0	ரத்தினபாய் ...	1	18
மின்சார மாயவன் ...	1	8	வீரநாதன் ...	0	10
தேவசுந்தரி ...	1	4	குணசுந்தரன் ...	0	12
கனகபூஷணம் 2 பாகம் ...	3	8	மஞ்சள் அறையின் மர்மம்	1	2
இராஜாமணி ...	2	0	கமலசேகரன் ...	1	12
ஆனந்தலிங் ...	2	0	பூங்கோதை ...	0	12
மதனபூஷணம் ...	1	0	இந்திராபாய் ...	2	8
ஞானசெல்வாம்பாள்			அமராவதி 2 பாகமும்	4	0
			மதனாம்பாள் 2 பாகமும்	3	0
5 பாகமும் ...	9	10	லோகநாயகி	1	0

விலாசம் : மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
6, லாயர் சின்னதம்பி முதலி வீதி, சௌகார்பேட்டை, மதராஸ்.